# வித்தியாசமான காலம்

ஸ்டெல்லா புரூஸ்

CONNEMARA PUBLIC LIBRARY
4 - FEB 1999
MADRAS-600 008.

கலைஞன் பதிப்பகம்
10 கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600 017.

# வித்தியாசமான காலம்

திருமணம் ஆனபோது எனக்கு இருபத்தைந்து வயசு. படித்துப் பட்டம் பெற்ற ஒரு வருஷத்திலேயே அரசுடமையாக்கப்பட்ட இந்த வங்கியில் எனக்கு வேலை கிடைத்து விட்டதால் சந்தோஷமாக இருந்தது.

அப்பாவும் நல்ல வேலையில் இருந்ததால் என் தங்கையின் கல்யாணத்தை முடித்த கையோடு என் கல்யாணத்தையும் நடத்திவிட்டு; அந்த வருஷமே வேலையில் இருந்து ஒய்வு பெற்றுக் கொண்டு அப்பா எங்கள் சொந்த கிராமத்துக்குப் போய் விட்டார். நான் என் மனைவி ஆனந்தியுடன் கல்யாணமான மூன்றாவது மாதத்தில் இருந்தே தனிக்குடித்தன வாழ்க்கையைத் துவங்கி விட்டேன். கல்யாணமான உடனே மனைவியுடன் தனிக்குடித்தன வாழ்க்கை கிடைப்பது உண்மையில் அதிர்ஷ்டமானது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்... ஏனெனில்; கல்யாணமான பிறகும் பல வருஷங்களுக்குக் கூட்டுக் குடும்ப வாழ்க்கை வாழ நேரிட்ட பல நண்பர்கள் அந்த வாழ்க்கை எவ்வளவு அலுத்து மனம் கசந்து போயிருந்தார்கள் என்பதை நான் நிறையவே பார்த்திருக்கேன்.

தாம்பத்ய வாழ்க்கையின் ஆரம்ப நாட்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் மிகவும் அற்புதமானவை. மனைவியின் சின்னச்சின்ன பார்வைகள்கூட கணவனை மயங்க வைப்பவை. மனைவியின் கை வளையல்களின் ஒலி;

அவளுடைய கால் கொலுசுகளின் சப்தம்... எல்லாமே காதல் பொதிந்தவை... மனசும் உடம்பும் எந்த நிமிஷமும் பாலுறவு மேற்கொள்ள நீருக்குள் வளர்ந்து கிடக்கும் தாவரங்கள் போல நிசப்தமான சிலிர்ப்பில் போதை ஏறிப் போயிருக்கும். அந்தப் போதைக்கு இளமையிலேயே கிடைக்கிற தனிக் குடித்தன வாழ்க்கை மிகச் சுதந்திரமான ஒரு வடிகால். அந்தச் சுதந்திரத்தை மனைவி ஆனந்தியுடன் விரும்பிய போதெல்லாம் நான் பகிர்ந்து கொண்டேன். ஆனால்; எத்தனை பகிர்ந்து கொண்டால்தான் என்ன? வெயில் காலத்தில் எவ்வளவு தண்ணீர் அருந்தினாலும் தாகம் தீர்ந்தா போகிறது...? அது போன்றதுதான் தாம்பத்ய வாழ்வின் ஆரம்ப காலப் பாலுறவு மோகம்... வங்கியில் பணியில் ஆழ்ந்திருக்கும் போதுகூட மனைவியின் அந்தரங்க நிலைகள் மனதில் வூந்து வந்து போகும்... உடனே வீட்டுக்குப் போக மாட்டோமோயென்று இருக்கும்...சில தினங்களில் வங்கிக்கு லீவ் போட்டுவிட்டுக்கூட மனைவியுடன் இருக்க விருப்பப்பட்டு வீட்டில் தங்கிவிடுவதும் உண்டு.

அப்படியெல்லாம் ஓர் உணர்வுப் புயல் போல ஆரம்ப நாட்களில் நான் சுழன்றாடினாலும் திருமணத்திற்கு முன் பாலுறவிற்காக நான் தவறான எந்த வழியிலும் சென்றதில்லை. உருவம் இல்லாமல் அந்த உணர்வுகள் இதயத் துடிப்பில் கலந்திருந்தாலும் கூட வடிகால் தேடுகிற அளவுக்கு உணர்வுகள் எனக்குள் பொங்கி வழிந்ததில்லை. இயல்பான தன்மையாக மட்டும்தான் அவ்வுணர்வுகள் எனக்குள் கலந்திருந்தன. ஆனால்; கல்யாணமாகிச் சில வருடங்களுக்குப் பிறகு நான் வேறு மாதிரி யோசித்தேன். திருமண வாழ்க்கைக்காக ஏங்கிப்போகிற கால தாமதம் எனக்கு வாய்க்காமல் போயிருந்தது. கால தாமதம் ஏற்பட்டிருந்து; அந்த உணர்வுகள் உள்ளுக்குள் விரைந்து சுழலத் துவங்கி



யிருந்தால் அதற்கான பெண்களை நோக்கி, நானும் போயிருக்கலாம். கிடைக்கத் தாமதமாகிக் கொண்டிருக்கின்ற விஷயத்தை அனுபவிக்கத் துடித்து ஓடியிருக்கலாம்.

எனக்குத் தெரிந்த பல நண்பர்கள் அந்தத் துடிப்பில் என் கண் எதிரே ஓடிக்கொண்டிருந்தார்கள். ஓட்டத்தில் கிடைத்த அனுபவங்களைப் பற்றி கூடிக்கூடிப் பேசிச் சிரித்துக்கொண்டும் மகிழ்ந்து கொண்டும் இருந்தார்கள். ஆனால்; வேறொரு உண்மையையும் இங்கு நான் குறிப்பிட வேண்டும். அந்த அனுபவசாலிகள் எல்லோருமே கல்யாண வாழ்க்கை தாமதமாகிக் கொண்டிருப்பவர்கள் இல்லை. அவர்களில் கல்யாணமாகிக் குழந்தை பெற்றவர்களும்கூட இருந்தார்கள். கல்யாணமான புதிதில் இதைப் பற்றி என் மனைவியிடம் ஆச்சர்யத்துடன் நான் பேச முற்பட்டேன். ஆனால் அவளுக்கு அதைப் பற்றியெல்லாம் பேசுவதற்குப் பிடிக்கவில்லை. 'வேண்டாம் இந்தப் பேச்சு' என்று ஒரு வரியில் என்னைப் பேசவிடாமல் அடக்கி விடுவாள். என் மனைவியின் இந்தக் குணம் எனக்கு மிகவும் பிடித்தது அதனால் நான் அந்த மாதிரியான விஷயங்கள் பற்றி அவளிடம் பேசுவது கிடையாது. ஆனால்; எனக்குள் அந்த ஆச்சர்யமான கேள்வி மட்டும் பெரியதாக எழும்பி நின்றது. கல்யாணமாகிக் குழந்தைகள் பிறந்த பிறகும்கூட சில நண்பர்களும் ஆண்களும் அந்த உணர்வுகளுக்காக ஏன் தப்பான பெண்களை நாடிச் செல்கிறார்கள்? அப்படிப்பட்ட நடத்தை கொண்டிருந்த சில நெருங்கிய நண்பர்களிடம் இந்தக் கேள்வியை நிஜமான ஆச்சர்யத்துடன் கேட்டேன். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரியான பதிலைச் சொன்னார்கள். சிலருடைய பதில் நான் எதிர்பாராதவைகளாக இருந்தன, சிலருடைய பதில் ஆண் என்ற அகம்பாவம் தெரிந்தன. வேறு

சிலரின் பதிலில் பணமும் இளமையும் இருப்பதால் வாழ்க்கையை மனம் போகிறபடி அனுபவித்துப் பார்க்கிற அலட்சியமும், உல்லாசமும் தெரிந்தன. நான் வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாதவன் என்ற ஏளனமும் அவர்களின் பேச்சில் தொனித்தது.

அந்தத் தொனி என்னைக் கொஞ்சம் பிரமிக்கத் தான் வைத்தது. வாழ்வில் நான் அனுபவித்துக் கொள்ளாத களியாட்டங்கள் பற்றிய யோசனைகளில் என்னை ஆழ்த்தியது. என்னுடைய அறியாமையே என்னைப் பார்த்து கண் சிமிட்டியது. ஆனாலும் என் அறியாமையை நான் சேதப்படுத்திக் கொள்கிற காரியங் களில் ஈடுபடவே இல்லை. மாசுபடாத பனி ஸ்படிகம் போன்ற உடல் நிலையோடு எனது இருபத்தைந்தாவது வயதில் ஆனந்தியை என் மனைவியாகப் பெற்றேன்.

## 2

திருமணம் ஆனதும் எனக்கு ஏற்பட்ட மிகப் பெரிய வியப்பு-மனித உடம்புதான். மனிதனின் உடல் எத்தனை ரகசியமான உரம் கொண்டிருக்கிறது உள்ளுக்குள்...சின்னக் கடல் பொங்கினாற் போலத் தான் பொங்குகிறது. அந்த நிமிடங்களில் சப்தமில்லாத புயல் எனத்தான் வீசுகிறது அக்கணங்களில்... உயிர்மையின் சக்தி அது என நினைக்கிறேன். மற்றொரு ஜீவனைப் படைக்கின்ற தீப்பொறி அல்லவா அது...

அந்தத் தீப்பொறி மிக விரைவிலேயே என் மனைவியின் உடம்பிற்குள் வடிவம் கொண்டுவிட்டது. முதலில் இந்தச் செய்தியை என் மனைவி ஆனந்தி வெளியிட்டபோது சினிமா கணவன் மாதிரியெல்லாம் மிகைப்பட என் சந்தோஷங்களை நான் காட்டிக் கொள்ளவில்லை. ஒரு நிமிஷம் உடம்பு சிலிர்த்தாற்



போலிருந்தது. மென்மையாக ஆனந்தியின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தேன். என் வாழ்க்கைக்கூடம் விசாலப்படுவது தெரிந்தது. உலகத்தில் நான் இன்னும் கொஞ்சம் அதிகமாகிறேன்...! எனக்கும் ஆனந்திக்கும் இடையில் இருக்கிற பிணைப்பில் இன்னொரு ஜீவனும் இணையத் தயாராகிக் கொண்டிருக்கிறது! வாழ்க்கை யில் மகத்துவம் மிக்க சம்பவம் இதுவாகத்தான் இருக்க முடியும்...

அந்தச் சம்பவத்தின் முழுமையான வெளிப் பாட்டுக்கு நானும் ஆனந்தியும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் காத்திருந்தோம். அதுவும் இரவு நேரங்களில் மிக நெருக்கமாகவும் அந்நியோன்னிய மாகவும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்— அதற்கு முன்; ஏழாவது மாதத்தில் ஆனந்தியை வைபவம் நடத்தி பிரசவத்திற்காக அவளுடைய அம்மா வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள். திருமணத் திற்குப்பின் நீண்ட முதல் பிரிவு.

அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் எவ்வளவு தூரத்திற்கு நான் ஆனந்தியைச் சார்ந்து இருந்திருக்கிறேன் என்பது அந்தப் பிரிவில்தான் தெரிந்தது. காலையில் எழுந்ததும் காப்பி சாப்பிடு வதில் இருந்து இரவு படுக்கைக்குப் போகும்போது பால் சாப்பிடுவது வரை எல்லாமே ஆனந்தி இல்லாமல் கலைந்து போயிருந்தது. தனிமையின் விசாலம் வீட்டில் விரிந்து கிடந்தது. கொடியில் ஆனந்தியின் புடவைகள் இல்லை. அருகில் அவளின் பிரத்யேக வாசனை இல்லை. பெண் வாசனை என்பதின் மொத்த வடிவமும் ஆனந்திதான் என்பதால் அந்த வாசனை முற்றிலுமாக அற்றுப் போயிருந்த வீட்டின் சூழல் நீண்ட நாட்கள் மழை பெய்திராத பிரதேசமாக வறண்டு தெரிந்தது. அதிலும் இரவில் என் அருகில் கமழ்ந்து கொண் டிருக்கும் அந்த மோகம் மிக்க நெடியை உணர வழி

இல்லாமல் மனம் முரண்டு பிடித்துக் கொண்டிருந்தது. கல்யாணமான புதிதில் ஆனந்தியின் வாசனையை நெஞ்சு நிறைய நிறைய நான் சுவாசித்திருக்கிறேன். எங்களுள் பாலுறவு இயக்கத்திற்கு அந்த வாசனைதான் ஆரம்பச் சுழியாக அமையும்.

அந்த ஆனந்த வாசனை இல்லாத நாட்களை ஒவ்வொன்றாக எண்ணி எண்ணிப் புரட்டித் தள்ளிக் கொண்டிருந்தேன். என் வாழ்வின் மற்றொரு முக்கியமான தருணம் நெருங்கிக்கொண்டிருந்தது. ஒரு நாள் நீடு இரவு. இரண்டு மணிக்கு அந்த தருணமும் நிகழ்ந்தது. ஆனந்திக்கு ஆண் குழந்தை பிறந்தது. அனுமதிக்கப்பட்டதுமே அறைக்குள் ஓடினேன். சிவந்த ஆப்பிள் நிறத்தில் என் மகன் ஆனந்தியின் அருகில் படுத்திருந்தான். களைத்து வெளுத்த முகத்தோடு அவனுக்கு அருகில் ஆனந்தி படுத்திருந்தாள். என்னுடைய சந்தோஷத்தை எப்படிக் காட்டுவதென்றே தெரியவில்லை. வெறுமே ஆனந்தியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

மூன்று மாதங்கள் சென்றபின் ஆனந்தி என் மகன் ஆதித்தனுடன் வீடு திரும்பினாள். சில மாதங்கள் அவளுக்குத் துணையாக இருக்க அவளின் அம்மாவும் அவளுடனேயே கிளம்பிவந்துவிட்டார்கள். ஆனந்திக்கு அவளுடைய அம்மாவின் உதவி தேவைதான். ஆனால் அதற்காக அவளின் அம்மா எங்கள் வீட்டிலேயே தங்கி இருந்தது எனக்கு இடைஞ்சலாக இருந்தது!— ஆறு மாதங்களாக ஆனந்தியின் அருகாமையை இழந்திருந்த எனக்கு அவள் நிறைய தேவைப்பட்டாள். இயல்பான அந்நியோன்னியம் மனதிற்கு ஏராளமாக வேண்டி இருந்தது. அதிலும்; தாயாகியிருந்த பரவசமும் பெருமிதமும் அவளின் உடல் பூராவும் பொங்கிய பால் போல் தோற்றமளிக்க— என்னால் வெறும் ஆதித்தனின் தகப்பனாக ஈசிசேரில் சாய்ந்து கிடக்க முடியவில்லை!



என் கைக்கு எட்டிய தூரத்தில் என் மனைவி ஆனந்தி ஆதித்தனின் தாயாக மட்டும் நின்று கொண்டிருந்தாள்! கொடுமைதான்! பிரக்ஞையே சுத்தமாக இல்லாமல் ஆனந்தியின் அம்மா குறுக்கே நந்தி மாதிரி நின்று கொண்டிருந்தார்கள். என்னுடைய நிலை ஆனந்திக்கும் புரிந்தது. ஆனால் அவள் அதற்காக அனுதாபம் காட்டாமல்; என் நிலையை ரசித்தாள், தூரத்தில் நின்று கள்ளச் சிரிப்பு வேறு சிரித்தாள். எப்போது ஒரு பொருளுக்குத் தட்டுப்பாடு வருகிறதோ அப்போதுதான் அந்தப் பொருளுக்குத் தேவையும் நிறைய வந்து சேரும்! சர்க்கரை வியாதிக்காரர்களுக்கு எப்போது இனிப்பு சாப்பிடுவோம் என்று இருக்கும்... எனக்கும் அதே கதிதான். மாமியாரும் மகனும் எந்த நிமிஷம் தூங்குவார்கள் என்று காத்துக்கிடப்பேன். ஆனால் சாமி வரம் தந்தாலும் பூசாரி வரம் தராத கதைதான் எங்கள் வீட்டிலும். மாமியாரும் மகனும் தூங்கிப் போகிற நிமிஷத்தில் என் மனைவியும் தூங்கிப்போயிருப்பாள். தூங்காவிட்டாலும் 'வேண்டாமே இன்றைக்கு' என்பாள். 'ஆதித்தன் முழித்துக்கொள்வான்' என்பாள். அல்லது 'மிகவும் களைப்பாக இருக்கிறது; உடம்புக்கு ஒரு மாதிரி இருக்கிறது' என்பாள். இந்த மாதிரி எதையாவது சொல்லிச் சொல்லி என் மனநிலையை மாற்றி விடுவாள். மொத்தத்தில் மகன் பிறந்த பிறகு ஆனந்திக்கு அந்த விஷயத்தில் ஈடுபாடு நிறைய குறைந்து விட்டிருந்தது.

அப்படி, இப்படியென்று நான்கு மாதங்கள் ஆனந்திக்குத் துணையாக இருந்துவிட்டு என் மாமியார் புறப்பட்டுப் போனார்கள். எனக்கு அப்பாடாவென்று இருந்தது. ஆனால் கஷ்டம்; மாமியார் புறப்பட்டுப் போன இரண்டு நாட்களில் என் அப்பாவும் அம்மாவும் 'கொஞ்ச நாள் பேரனுடன் ஆசையாக இருந்துவிட்டுப் போகலாம்' என்ற எண்ணத்தில் மூட்டை முடிச்சுகளுடன் கிளம்பி வந்துட்டார்கள்,

''பாத்தீங்களா; எங்க அம்மா புறப்பட்டுப் போயிட்டாங்க என்கிறது தெரிஞ்சதும் உடனே போட்டிக்கு உங்க அம்மா கெளம்பி வர்ராங்க...'' ஆனந்தி எரிச்சலுடன் சொன்னாள். அன்றைக்குத்தான் நான் ஆனந்தியை என் மனைவியாக இல்லாமல் என் அம்மாவின் மருமகளாக முதல் முறையாகக் காண நேரிட்டது. நானும் அன்றைக்குத்தான் முதல் முறையாக ஆனந்தியிடம் என் அம்மாவின் மகனாக ரீயாக்ட் பண்ணினேன்.

''ஏன்—உங்க அம்மா மட்டும்தான் வரலாமா; எங்க அம்மா வரக்கூடாதா பேரனைப் பாக்கறதுக்கு?''—கோபமாகக் கேட்டேன்.

''உங்க அம்மாவை நான் ஒண்ணும் வரக்கூடாதுன்னு சொல்லலை... ஆதித்தனையும் பாத்துக்கிட்டு உங்க அப்பா அம்மாவையும் என்னால கவனிச்சுக்க முடியாது...''

''நீ ஒண்ணும் கவனிச்சுக்க வேண்டாம் அவங்களை...''

''உண்மையைச் சொன்னா— குத்தமாத்தான் தெரியும், நீங்ககூடத்தான் எங்க அம்மா எப்படா கெளம்பிப் போவாங்கன்னு காத்திட்டு இருந்தீங்க...!''

ஆனந்தி இப்படிச் சொன்னதும் எனக்குக் கோபம் வந்துவிட்டது. உண்மையைச் சொன்னால் எல்லோருக்கும்தான் கோபமும் எரிச்சலும் வந்துவிடும் போலிருக்கிறது.

''ஆமா; ஏதோ வந்தா நாலு நாள்; அதிகமா போனா பத்து நாள் தங்கி இருக்கலாம். நாலு மாசம் வந்து தங்கியிருந்தா எவனுக்குத்தான் சங்கடமா இருக்காது...''



''இனிமே இங்கே எங்க அம்மாவை வந்து தங்கியிருக்கச் சொல்லலை, போதுமா?''

ஆனந்தி விருட்டென்று அறைக்குள் போய் படுத்துக்கொண்டாள். இரவு சாப்பிடும்போது நானும் அவளும் பேசிக் கொள்ளவில்லை. பேசாமலேயே இருவரும் ஆளுக்கொரு பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டோம்— இதுதான் எங்களுக்குள் வந்த முதல் சண்டை. அதுமட்டுமில்லை; கணவன் மனைவிக்குள் இப்படி சண்டைகூட வரும் என்பதையும் அன்றைக்குத் தான் நான் தெரிந்துகொண்டேன்...!

# 3

கணவன் மனைவிக்குள் சண்டை நேரிட்டிருக்கும் போது வீட்டுக்கு விருந்தினர்கள் வருவது மிகவும் இக்கட்டான விஷயம். வெளிப் பார்வைக்கு விருந்தினர்களை சிரித்துச் சிரித்து உபசரித்துக் கொண்டிருந்தாலும் உள்ளுக்குள் உதவியற்ற நெருடல் உறுத்திக்கொண்டே இருக்கும்... அந்த உறுத்தலில் நானும் ஆனந்தியும் சில நாட்கள் இம்சைதான் பட்டோம்.

தினமும் இரவு நெடு நேரம் வரைக்கும் தூங்காமல் அழுது அடம்பிடிக்கும் என் மகன் ஆதித்தன் ஒரு நாள் எதிர்பாராமல் ரொம்ப சீக்கிரமாகவே தூங்கி விட்டான். என் அம்மாவும் அப்பாவும் ஒரு நாள் மாமா வீட்டில் போய் இருந்துவிட்டு வருவதாகச் சொல்லிக் கிளம்பிப் போனார்கள். திடீரென்று நானும் ஆனந்தியும் அன்று இரவு மிகக் கனத்த பிரக்ஞை அடைந்து விட்டோம். குறுக்கீடுகள் இல்லாத சுதந்திரமான இரவு எங்களைச் சுற்றி கொசுவலை போல விரிந்து சூழ்ந்திருந்தது. எங்கள் மனவெளியில் மேகங்கள் நகர்ந்தன. காற்று ஆசை ஆசையாக வீசியது. மின்னல் மின்னி இடி

முழங்கி லேசாக ஆரம்பித்த மழை, நேரம் ஆக ஆக பலத்துப் பெய்து; நடு இரவுக்குப் பிறகு ஆதித்தன் தூக்கம் கலைந்து அழுத பிறகுதான் நின்றது!

காலையில் தூக்கம் கலைந்து எழுந்தபோது பளிச்சென்று ஒளி விட்டுக் கொண்டிருந்தது உலகம். அதே மாதிரி ஆனந்தியுடன் என் உறவும் துடைத்துவிட்டாற் போலிருந்தது. சிறிய மனஸ்தாபத்திற்குப் பின் மனைவியுடன் சிநேகமாகிற நிமிஷத்தின் இனிமையே இனிமை. சுகமே சுகம்... ஆனந்தியே எனக்கு ரொம்பப் புதுசாக இருந்தாள். அவளில் எல்லாமே முன்பின் பார்த்திராத அற்புதங்களாகத் தெரிந்தன. —ஆனாலும்; இரவு அந்நியோன்னியத்திற்கு ஆதித்தன் அவ்வப்போது தடங்கலாகத்தான் இருந்தான்.

தாம்பத்ய வாழ்க்கையின் அமைப்பு அப்படித்தான் மாற்றம் அடையும் போலிருக்கிறது. சில நாட்கள் ஆதித்தனின் குறுக்கீடுகள்; சில நாட்கள் ஆனந்திக்குக் களைப்பு; சில தினங்கள் அவளுக்கு விருப்பம் இல்லாமை, இப்படியாக முன்னும் பின்னுமாக வேற்றுமைகளோடும் ஒற்றுமைகளோடும் நாட்களும் மாதங்களும் வருடங்களும் வேகமாக ஓடின. ஆதித்தன் நான்கு வயதுப் பையனாகி விட்டபோது சரண்யா பிறந்தாள். மகனைப் பள்ளிக்கூடம் அனுப்புவதும்; மகளைக் கவனித்துக் கொள்வதும்தான் ஆனந்தியின் தினசரி வாழ்க்கையாகி விட்டது.

இந்தச் சூழலில் என்றாவது ஒரு நாள் வேலைக்காரி வராவிட்டால் எரிகிற நெருப்பில் மேலும் எண்ணெயை விட்டது போலாகிவிடும். அந்த மாதிரிச் சமயங்களில் ஆனந்தியைப் பார்த்தால் என் மனைவி போல இருக்க மாட்டாள்; ஒரு ஆயா போல் தெரிவாள்! பக்கத்தில் அவள் வந்தாலே வேர்வை வாசனைதான் தூக்கலாக இருக்கும். இதில் குழந்தைகளின் உடம்புக்கு வேறு ஏதாவது வந்து விட்டால் இன்னும் மோசம். வீடே



ஆஸ்பத்திரி போலாகிவிடும். சமைக்கக்கூட முடியாது. எனக்கும் நிம்மதியாய் ஆபீஸ் போக முடியாது. 'போதும்டா சாமி'யென்று எங்கேயாவது ஓடிப் போகலாம் போலிருக்கும்.

இரண்டு குழந்தைகளையும் வளர்க்கிறதிலேயே சம்சார சாகரம் மூச்சுத் திணற வைத்தது. ஆனந்தியின் இளமையெல்லாம் வற்றி வடிந்து விட்டிருந்தது. ஒன்பதே வருடங்களில் இல்லற வாழ்க்கை மாற்றமே இல்லாத செக்கு மாட்டு வாழ்க்கையாக யந்திரத்தன்மை அடைந்திருந்தது – பாலுறவு வாழ்விலும் புதுமைகள் இல்லை; ஆச்சர்யங்கள் இல்லை; அற்புத பாவனைகளும் இல்லை; பரபரப்பு இல்லை. காதல் போதைகள் கலைந்து போயிருந்தன.

ஆனால் ஒன்று; பாலுறவுக் கிளர்ச்சி என்ற சுக உணர்வு என்னுள் வற்றிப் போயிருக்கவில்லை. ஆனந்தியிடம் அந்தக் கிளர்ச்சி பற்றிக் கொள்ளவில்லை. ஆரம்ப காலங்களில் ஆனந்தியின் புடவையின் ஸ்பரிசத்திலேயே கற்பூரம் போல் பற்றி எரிந்த உணர்வு இப்போது அப்படியெல்லாம் பற்றிக் கொள்வதில்லை! மாறாக; ஆபீஸிலோ; வேறு வழியிலோ இளமையாகத் தெரிகிற பெண்களைப் பார்த்தால் மனம் உடனே செயல்பட்டது! உலகத்தில் எத்தனை அழகான அழகான பெண்கள்...! அவர்களுக்குத்தான் எப்பேர்ப்பட்ட கவர்ச்சியான உடம்புகள்...

இத்தனை காலம் ஆனந்தியைத் தவிர வேறு பெண்கள் யாரையும் விரும்பி உணர்வு வயப்பட்டு கவனித்துப் பார்த்ததில்லை. இன்று ஆனந்தியைத் தவிர பிற பெண்கள் எல்லோரையும் உற்சாகத்துடன் கவனித்தேன். என் ஆபீசிலேயே கல்யாணமான பெண்கள் எவ்வளவு நளினமாக அலங்கரித்து வருகிறார்கள்... எத்துணை விதமான நறுமணங்களில் மணக்

கிறார்கள். தினமும் இந்தப் பெண்கள் எவ்வளவு புதியதாகவே பரிமளித்துக் கொண்டிருக்கிறார்கள்! என் ஆனந்தி மட்டும் ஏன் இவ்வளவு பழசாகி விட்டாள்?

மற்ற பெண்கள் மிகவும் புதியதாகத் தெரியத் தெரிய; ஆனந்தி மிகப் பழையதாகத் தெரிய ஆரம்பித்தாள்...! நாட்கள் செல்லச் செல்ல ஆனந்தியின் பழைமை எனக்குள் கோபத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தியது. என்ன மனைவி இவள்... எப்போது பார்த்தாலும் வேர்வை வாடை அடிக்கும் ஆயா மாதிரி இருக்கிறாள்...

சமைக்க வேண்டியது; குழந்தைகளை பள்ளிக் கூடம் அனுப்ப வேண்டியது; துணி தோய்க்க வேண்டியது; குழந்தைகளுக்குச் சாப்பாடு கொடுப்பது; அவர்களுக்கு ஓயாமல் பாடம் சொல்லிக் கொடுப்பது; இரவு அவர்களைப் பக்கத்தில் படுக்க விட்டுக் கொண்டு அவளும் குறட்டை விட்டுத் தூங்க வேண்டியது... அக்கறையே கிடையாது புருஷனைப் பற்றி! அவனுக்கும் நம்மை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள் என்ற கரிசனமே கிடையாது! அவள்பாட்டுக்கு அவள் தூங்கிக் கொண்டிருப்பாள். நான்பாட்டுக்கு நானும் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும்! வேறு ஒன்றும் வேண்டாம்! ஆனந்திக்கு வேண்டாமாக இருக்கலாம்; எனக்குமா வேண்டாம்? எனக்கு வேண்டும்! தினசரி வேண்டும்.

வியர்வை நெடி இல்லாமல் விதவிதமாகவேண்டும். ஆனால் ஆனந்திக்கு எந்த விதத்திலும் வேண்டாமாகவே இருந்தது. ரொம்ப வற்புறுத்திக் கேட்டால் ஈடுபாடே இல்லாத சம்மதம்— கணவன் என்ற கடனுக்கு...! எரிச்சல் பட்டால் 'கல்யாணமாகி இத்தனை வருஷமாகி விட்டது; ரெண்டு குழந்தைகள் வேறு... இன்னுமா இத்தனை ஆசை?' அவளும்



பதிலுக்கு எரிச்சலைக் காட்டுவாள். இரண்டு குழந்தைகளுக்கு அப்பா ஆனால் என்ன? அவளுக்கு நான் புருஷன்தானே... அதுவும் முப்பத்து நான்கு வயதே ஆன புருஷன்...

ஆனால் நான் எத்தனை விளக்கி வாதாடினாலும் ஆனந்தியின் மனோநிலையை மாற்ற முடியவில்லை. இரண்டு குழந்தைகளின் அம்மாவாக மட்டும் வேர்வையோடும் பழையதாகிப்போன உடம்போடும் ஒவ்வொரு நாளையும் கழித்துக் கொண்டிருந்தாள்... வேறு வழி தெரியாத அப்பாவியாய் அவளை அணுகிக் கொண்டிருந்த நானும் மனசால சிறிது சிறிதாய் ஆனந்தியிடம் இருந்து விலக ஆரம்பித்தேன். வீட்டிற்குத் தாமதமாகச் செல்லத் தொடங்கினேன். நண்பர்களுடன் சேர்ந்து உற்சாகம் பெற மது அருந்திப் பார்த்தேன். மதுவில் பெரிய லயிப்பும் சுவையும் ஏற்படாவிட்டாலும் கூட வேண்டுமென்றே குடித்தேன்.

சிகரெட்டும் புகைக்க ஆரம்பித்தேன். சிகரெட் புகைக்க எனக்குப் பிடித்தது. புகையை உறிஞ்சுவதில் ஓர் இதம் கிடைத்தது. என் தொண்டைக்குப் புகையின் இதம் தேவையாகவும் இருந்தது. அதனால் சிகரெட் நிறைய புகைக்கத் தொடங்கினேன். இரவில் எந்தனை இம்சையாக இருந்தாலும் அவளை அணுகக்கூடாது என்று என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தேன. அவளாக என்றைக்காவது விரும்பி என்னை அணுகுகிறாளாவென்று காத்திருந்து காத்திருந்து பார்த்தேன். நல்லவேளை! ஆளைவிட்டான் என்ற சந்தோஷத்தில் குறட்டைவிட்டுத் தூங்கித் தூங்கித்தான் எல்லா இரவுகளையும் கழித்தாளே அன்றி என்னை அணுகவே இல்லை... அப்போதுதான் ஒரு நாள் முதல் முறையாக எனக்குள் அந்த எண்ணம் வந்தது. வேறொரு பெண்ணை அணுகிப் பார்த்தால் என்ன? மற்றொரு

புதிய பெண்ணின் உடம்பை நாடினால் என்ன? தேங்கி; முடங்கிப்போன என் உணர்வுகளையும் புதுப்பித்துக் கொண்டால் என்ன?—சற்றுத் தள்ளி ஒருக்களித்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த ஆனந்தியையே பார்த்துக் கொண்டிருந்தேன். என் மனம் வித்தியாசமான திசையில் சப்தமில்லாமல் இயங்கிக் கொண்டிருந்தது.

## 4

என் ஆபீசில் என்னைச் சுற்றிலும் பணி புரிந்து கொண்டிருந்த பெண்களை முதல் முறையாக தப்பான பார்வையுடன் பார்த்தேன். அவர்களின் உடல் அமைப்புக்களை ரகசியமாகக் கவனித்தேன். வலியப் போய் தேவை இல்லாத விஷயங்களுக்குக்கூட அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். அந்தப் பெண்கள் எல்லோரிடமுமே என் மனைவியிடம் இல்லாத ஒரு வாசனை இருந்தது.

கல்யாண விஷயத்தில் நான் பெரிய தப்புப் பண்ணி விட்டதாக நினைத்தேன். பொறுத்திருந்து இன்னும் நல்ல பெண்ணாகப் பார்த்துப் பண்ணியிருக்கலாம். வேலைக்குப் போகிற பெண்ணாகவேகூடப் பார்த்திருக்கலாம். வேலைக்குப் போகிற பெண்களிடம் பெண்மையின் சுவாரஸ்யத்தைப் பரிமளிக்கச் செய்கிற ஆற்றல் இருக்கிறது. காதல் உணர்வுகூட அவர்களிடம் சற்று அதிகம்தான் என்று தோன்றியது.

ஆனந்தியிடம் காதல் உணர்வு கடுகளவு கூட கிடையாது. அவளுடைய கண்களில் எப்போதும் ஒரு விதமான அலுப்பும், களைப்பும்தான் படிந்திருக்கும். ஆபிசில் வேலை பார்த்துக் களைத்துப்போய் வீடு திரும்பும் புருஷன்காரன் வீட்டிலும் களைத்த



மூஞ்சியையே வீட்டில் நுழைந்ததும் நுழையாததுமாய் பார்த்தால் எப்படி இருக்கும் அவன் மனசுக்கு... அதுவும் இல்லாமல் களைத்த மூஞ்சியையே ஒருத்தன் எத்தனை நாளைக்குத்தான் பார்த்துக் கொண்டிருப்பான்?

களைத்துப் போகாத பெண் முகங்களைத் தேடி நான் லயிக்க ஆரம்பித்துவிட்டேன். அதே சமயம் என்னுடைய களைப்புக்கு ஆறுதல் தரக்கூடிய பெண் மனங்களுக்காக ஏங்கவும் ஆரம்பித்துவிட்டேன். சுருக்கமாகச் சொன்னால் நான் ஒரு பெண் பித்தனாகவே ஆகிவிட்டேன். களைப்பின் சுவடே இல்லாமல் எப்போதும் களிப்புத் தாண்டவமாடும் பெண் முகம் பார்த்தால் அசந்துபோய் நின்றேன்.

மென்மையான மனம் கொண்ட பெண்ணாகத் தெரிந்தால் பின்னாடியே போனேன். எதிர்படுகிற எந்தப் பெண்ணிடமும் மனசைத் திறந்து கொட்டுவதற்குத் தயாராக இருந்தேன். அதே மாதிரி எந்தப் பெண் மனம் திறந்து கொட்டினாலும் அன்புடன் கேட்டுக்கொண்டிருக்கவும் நான் தயாராக இருந்தேன். பெண்களுக்காக நான் எதுவும் செய்யத் தயாராக இருந்தேன்! பெண்களால் விரும்பப்பட எல்லாமே செய்யக் காத்திருந்தேன்! என்னுடைய காத்திருப்பு வீண் போகவில்லை. எங்கள் வங்கியிலேயே பணி புரிந்து கொண்டிருந்த ரஞ்சனி என்ற பெண்ணுடன் என்னுடன் பணிபுரிகிறவள் என்பதற்கு மேற்பட்ட தளத்திற்கு மெதுவாக நான் நகர முடிந்தது. ஒரு நாள் ரஞ்சனியைக் கேட்டேன்.

"எப்பங்க ரஞ்சனி கல்யாண சாப்பாடு போடப் போறீங்க?"

இந்தக் கேள்வியைக் கேட்டபோதே என் மனசுக்குத் தெரிந்தது...

அவளுடைய கல்யாணத்தைப் பத்தி எனக்கு எந்தக் கவலையும் கிடையாது! ஆனாலும் சும்மா கேட்கிறேன், அவளுடைய கல்யாணத்தில் ரொம்ப ரொம்ப அக்கறை இருக்கிறவன் மாதிரி! அவள் போடப் போகிற கல்யாணச் சாப்பாட்டுக்குக் காத்துக் கிடக்கிறவன் மாதிரி! எல்லா ஆம்பளைப் பயல்களுமே மனசுக்குள் இப்படித்தான் இருப்பார்களோ...? பெண்ணிடம் சகஜ பாவனை காட்டுவதேகூட ஆடவனின் அணுகல் முறைதானோ?... நான் கேட்ட கேள்விக்கு ரஞ்சனி மிகவும் சலிப்புடன் பதில் சொன்னாள்—

"ஆமா—வீட்ல இருக்கிற ஜீவன்களுக்குச் சாப்பாடு வயிறாரப் போடறதுக்கே வழியைக் காணோம். நான் எங்கே உங்களுக்கெல்லாம் கல்யாணச் சாப்பாடு போடறது..."

ரஞ்சனியிடம் நான் சத்தியமாக இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. அவளின் பதிலைக் கேட்டதும் சட்டென்று என் பொய்மை கலைந்து நிஜமான ஆதங்கம் அவள்மேல் ஏற்பட்டது.

ரஞ்சனிக்கு அப்பா இல்லை; அம்மா மட்டும்தான். எண்பது வயதான தாத்தாவும் கூடவே இருந்தார். அவளுக்கு இரண்டு தங்கைகள். பெரிய தங்கை கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கிறாள். சின்னத் தங்கை இப்போதுதான் பள்ளிக் கூடத்தில் எட்டாவது வகுப்புப் படிக்கிறாள். பழைய சின்னச் சொந்த வீடு சிந்தாதிரிப் பேட்டையில் இருக்கிறது. மாடி போர்ஷனில் ஏதோ ஒரு தொகை வாடகை வருகிறது, அவ்வளவுதான். மற்றபடி ரஞ்சனியின் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம்தான். இந்தக் காலத்தில் இரண்டு பெண்களைப் படிக்கவும் வைத்துக்கொண்டு; ஐந்து பேர் ஒரு குடும்பத்தில் சாப்பிடவும் வேண்டுமானால் குறைந்தது மூவாயிரம் ரூபாய் வருமானம் மாதா மாதம் வேண்டும்... பாவம்தான் ரஞ்சனி.



"என்னை மன்னிச்சிடுங்க ரஞ்சனி; உங்களோட தோற்றத்தைப் பார்த்து நீங்க கொஞ்சம் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவங்களா இருக்கலாம்னு நெனைச்சி கேட்டுட்டேன்..."

"என் தோற்றத்தையெல்லாம் பார்த்து ஏமாந்து போயிடாதீங்க மிஸ்டர் தியாகராஜன். இதெல்லாம் வேலை பாக்கற இடத்துக்காகப் போடற வேஷம்... இந்த வேஷம்தான் என்னை மாதிரியான லோயர் மிடில் கிளாஸ் பொம்பளைங்களைப் பிடிச்ச சாபம்... ஆபீஸ் வர்ரதுக்காக இப்படியெல்லாம் கொஞ்சம் காஸ்ட்லியான துணியா பார்த்து வாங்க வேண்டியிருக்கு. துணிச் செலவு அதிகமா போயிடறதால சாப்பாட்டுச் செலவை ரொம்பக் கம்மி பண்ணியாக வேண்டியிருக்கு... என் கடைசித் தங்கையோட படிப்பு முடியற வரைக்கும் நான் என்னோட கல்யாணத்தைப்பத்தி நெனைச்சிக் கூடப் பார்க்க முடியாது..."

நிஜமாகவே ரஞ்சனியைப் பார்த்து ஏண்டா அந்தக் கேள்வியைக் கேட்டோம் என்றாகிவிட்டது எனக்கு. வேலைக்கு வருகிற பெண்களின் வேறொரு யதார்த்த வாழ்வின் முகமும் தெரிந்தது. ரஞ்சனியின் மேல் மிகவும் அனுதாபம் பிறந்தது. அவளுடன் ஆனந்தியை ஒப்பிட்டுப் பார்த்தேன். இந்தச் சின்ன வயதிலேயே ரஞ்சனி தன் குடும்பத்தையே தாங்கி நிற்கிறாள், ஊருக்காக வேஷம் போடுகிறாள், ஆபீசில் உழைக்கிறாள், ஆனந்தி? மூன்று வேளையும் மூக்குப் பிடிக்க சாப்பிட்டு விட்டு வீட்டில் படுத்துப் படுத்து குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறாள்! வேறு என்ன தெரியும் ஆனந்திக்கு?! ரஞ்சனி ஒரு ஆதர்ஷ மனுஷி...!

"உண்மையிலேயே நீங்க ரொம்பப் பெரிய மனுஷி ரஞ்சனி...தைரியமா நிஜத்தைச் சொன்னீங்க பாருங்க...

எத்தனை லேடிஸ் இந்த மாதிரி ஒப்பனா உண்மையைச் சொல்வாங்க...! ரியல்லி யூ ஆர் கிரேட்..." என்றேன்.

"ஒரு உண்மையைச் சொல்றதே—இவ்வளவு பெரிய விஷயமா இருக்குன்னா—பார்த்துக்கோங்க... நாமெல்லாம் எவ்வளவு பொய்யா வாழ்ந்திட்டு இருக்கோம்னு..."

"நீங்க பேசப் பேச—எனக்கு உங்ககூட உக்காந்து நெறைய பேசணும் போலிருக்கு ரஞ்சனி..."

ரஞ்சனி இதற்கும் பதில் சொல்லாமல் வெறுமே சிரித்து விட்டுப் போய்விட்டாள். அவளுடைய சிரிப்பால் எனக்குத்தான் ராத்திரியெல்லாம் தூக்கமே இல்லை. ஆனந்திக்கு எதிராக; ஆனால் குறிப்பிட்ட இலக்கு இல்லாமல் இயங்கிக் கொண்டிருந்த என்னுடைய உணர்வுகள் ரஞ்சனியை நோக்கி உருளத் தொடங்கின. என் உணர்ச்சிகளுக்கு ரஞ்சனி புதிய உருவமாகத் தெரிந்தாள். ரஞ்சனியைக் கல்யாணம் செய்திருந்தால் என் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும்? நினைக்கவே மெல்லிய மழைத் தூறல் விழுவது போலிருந்தது! ஆனந்தி இருக்கின்ற இடத்தில் மானசீகமாக ரஞ்சனியை பல நிலைகளில் மனதுள் பொருத்திப் பார்த்தேன். நிஜமாகவே ரஞ்சனியை நான் வாழ்க்கையில் இழந்திருக்கிறேன் என்றே கருதினேன்! என் அப்பா எனக்குக் கல்யாணம் பண்ணி வைப்பதாகச் சொன்னதுமே நான் சரியென்று அவ்வளவு சின்ன வயசிலேயே தலையை ஆட்டியிருக்கக்கூடாது! வாழ்க்கையில் கொஞ்சமாவது அனுபவம் பெற்றிருக்க வேண்டும்! நிறைய அனுபவங்கள் பெற்ற பின் நிதானமாக நானே எனது மனைவியை ஜாதி, மதம் எதுவும் பார்க்காமல் தேர்ந்து எடுத்திருக்க வேண்டும். இப்படி வந்து குருட்டுக் கோழி தவிட்டை முழுங்கியது மாதிரி அவசரப்பட்டு ஆனந்தியைக் கட்டிக் கொண்டு



இன்றைக்கு அவஸ்தைப் படுகிறேன்...! இரண்டு குழந்தைகள் வேறு பிறந்து விட்டார்கள். விவாகரத்து பண்ணிடலாமாவென்று நினைத்தால் அதெல்லாம் முடியாத சமாச்சாரம்! வெறுமே பொண்டாட்டி பிடிக்கவில்லை; டைவர்ஸ் வேண்டுமென்று சொன்னால் கோர்ட்காரன் ஒத்துக் கொள்ளமாட்டான்! அவனுக்குச் சட்ட ரீதியில் ஒப்புக்கொள்ளத்தக்க காரணம் வேண்டும்! இதுவே அமெரிக்காவாக இருந்தால் ரொம்ப எளிதான விஷயம். யாரும் யாரையும் எப்போது வேண்டுமானாலும் எதற்கு வேண்டுமானாலும் டைவர்ஸ் பண்ணலாம். இந்தப் பயல் ஊரில்தான் இல்லாத சட்டங்கள்...!

—இதையெல்லாம் நினைக்க நினைக்க எனக்கு ஆனந்தியின் மேல் இருந்த வெறுப்புத்தான் அதிகரித்துக் கொண்டிருந்தது. அதே மாதிரி ரஞ்சனியின் மேல் அபிமானமும் ஜாஸ்தியாகிக் கொண்டிருந்தது. சின்னச் சின்ன விஷயத்திற்கெல்லாம்கூட ரஞ்சனியை வியந்து பாராட்டினேன். சின்னச் சின்ன விஷயத்திற்கெல்லாம் ஆனந்தியைத் திட்டி தீர்த்தேன்! பல சமயங்களில் ஆனந்தியும் திருப்பி என்னைத் திட்டினாள். சில வேளைகளில் ஒப்பாரி வைத்தபடி ஓடிப்போய் குப்புறப் படுத்துக் கொண்டாள்...!

ஒரு நாள் நானே வலியப் போய் ரஞ்சனியிடம் சொன்னேன்— "அன்னக்கி நீங்க தைரியமா சொன்ன மாதிரி நானும் ஒரு உண்மையைச் சொல்றேன் ரஞ்சனி. எனக்கு ஏண்டா கல்யாணம் செய்துக்கிட்டோம்னு இருக்கு! நெனைச்சா எங்கேயாவது சாமியாரா ஓடிப் போயிடலாம் போல இருக்கு! ஒரே போர் மேட்ரிமோனியல் லைஃப்..."

"என்னங்க மிஸ்டர் தியாகராஜன்—திடீர்னு வந்து இப்படிச் சொல்றீங்க?"—ரஞ்சனி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''நெஜமாத்தான் சொல்றேன் ரஞ்சனி. ஒண்ணுமே கெடையாது தாம்பத்ய வாழ்க்கைல—வெறும் சைபர்! ஆம்பளைக்கும் பொம்பளைக்கும் வாழ்க்கைல தனியா இருக்க முடியறது இல்லை—அதுக்காக கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு எதை எதையோ காம்ரமைஸ் பண்ணிக்கிட்டு: சமயத்துல சுயமரியாதையை: சுதந்திரத்தை இழந்து: தெரிஞ்சோ தெரியாமலோ குழந்தைகளைப் பெத்துக்கிட்டு:— அய்யோ; ஏன் கேக்குறீங்க... வாழ்க்கையே வேஸ்ட்!'' ரஞ்சனி ஒரு நிமிஷம் என்னையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுக் கேட்டாள்—

''ஆக்ச்சுவலா—உங்க குடும்பத்ல என்ன ப்ராப்ளம் மிஸ்டர் தியாகராஜன்?''

நான் ரஞ்சனியை ஏறிட்டுப் பார்த்தேன். மெதுவாக அவள் என்னை நோக்கி நெருங்கி வந்து கொண்டிருந்தாள். எப்படியாவது அவளை என்னிடம் இழுத்து விட வேண்டும். ஆயிரம் பொய் சொல்லியாவது என் மேல் அவளை காதல்வயப்படச் செய்துவிட வேண்டும்... அவளின் ஆர்வத்தைத் தூண்டவும்: அனுதாபத்தைப் பெறவும் உகந்த பதிலைச் சொன்னேன்.

''குடும்ப வாழ்க்கையே எனக்கு ப்ராப்ளம் ரஞ்சனி! மனைவியே எனக்கு சரி கிடையாது! ஏதோ நானும் அவளும் புருஷன் பொண்டாட்டியா நாலு சுவருக்குள் வாழ்ந்துகிட்டு இருக்கோமே தவிர...எங்க ரெண்டு பேருக்குள்ளேயும் எந்த உறவும் கிடையாது. நோ இன்வால்வ்மெண்ட்! அவ—அவபாட்டுக்குச் சமையல் பண்ணுவா. துணி துவைப்பா. நான்—என்பாட்டுக்கு டெய்லி ஆபீஸ் வருவேன், போவேன்! எங்க ரெண்டு பேருக்குள்ளேயும் பேசறக்குக்கூட விஷயம்கிடையாது. நான் ஆபீஸ்விட்டுப் போகும்போது குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் குடுத்திட்டு இருப்பா. இல்லேன்னா



டி.வி. பாத்திட்டு இருப்பா! இருபத்து நாலு மணி நேரமும் டி.வி. பார்க்கச் சொல்லுங்க, பாப்பா! இப்ப அவளுக்கு கேபிள் டி.வி. வேற! பிள்ளைங்களுக்கு அம்மாவா இருக்காளே தவிர, எனக்குப் பொண்டாட்டியா அவ இல்லவே இல்லை ரஞ்சனி! இவகூட எப்படி குடும்பம் நடத்துவேன், சந்தோஷமா...? நீங்களே சொல்லுங்க! ஏதோ எல்லா ஆம்பளைகளுக்கும் இருக்கிற மாதிரி சொல்லிக்கறதுக்கு எனக்கும் ஒரு பொண்டாட்டி இருக்கா! அவ்வளவுதான். அதுக்கு மேல எனக்கும் அவளுக்கும் எதுவும் இல்லை! ரொம்ப லோன்லியா இருக்கேன்—லைஃப்ல...''

ரஞ்சனி நான் சொன்னதையெல்லாம் கேட்டு விட்டுப் பல நிமிஷங்கள் மௌனமாகவே இருந்தாள். பின் கேட்டாள்—

''நான் ஒருநாள் உங்க மனைவியைச் சந்திச்சி நீங்க சொன்னதையெல்லாம் புரிஞ்சிக்கிற மாதிரி சொல்லிப் பேசிப் பாக்கட்டுமா?''

''வேற வினையே வேண்டாம்! என்னை உண்டு இல்லேன்னு ஆக்கிடுவா...! சும்மாவே அவ ஒரு மாதிரியான ஹிஸ்டிரிக்கல் வுமன்! நீங்க போய் கேட்டிங்கன்னா—அவ்வளவுதான்: கத்தி ஒப்பாரி வச்சி ஊரையே கூட்டிடுவா. அது மட்டுமில்லை ரஞ்சனி; உங்களுக்கும் எனக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்குன்னு நாக்குக் கூசாமே பழி போட்டுடுவா... பேசாம இருங்க.''

''அப்ப உங்க பிரச்னையை தீர்க்கறதுக்கு என்ன தான் வழி?''

''ஆண்டவன் விட்ட வழி!''

''உங்க வாழ்க்கையில இவ்வளவு பெரிய பிரச்னை இருக்கும்னு நான் நெனைச்சே பாக்கலை தியாகராஜன்...''

''எல்லோர் வாழ்க்கையிலுமே எதாவது ஒரு பிரச்னை இருக்கும் போலிருக்கு!''

''மேட்ரிமோனியல் லைஃப்ல பிரச்னை வரக் கூடாது.''

''இப்பச் சொன்னீங்களே- இது லட்சத்ல ஒரு வார்த்தை ரஞ்சனி! நான் ஆனந்தியைக் கல்யாணம் செய்திருக்கக் கூடாது—அவசரப்பட்டுட்டேன்! ஆனா என்ன பண்றது... இனிமே அதைப் பத்திப் பேசி பைசா பிரயோஜனம் கிடையாது! என் அதிர்ஷ்டம் இவ்வளவு தான்...''

''நெறையப் பெண்களுக்கு புருஷன் நல்லவனா அமையறதில்லை. உங்க விஷயத்ல அது தலைகீழா இருக்கு...''

''ரஞ்சனி, நான் ஒண்ணு சொன்னா என்னைத் தப்பா நெனைச்சிக்க மாட்டிங்களே...''

''சொல்லுங்க தியாகராஜன்.''

''உங்களைக் கல்யாணம் பண்ணிக்கப்போற ஆண் ரொம்ப அதிர்ஷ்டசாலி!''— இந்தச் சொல் குறிபார்த்து விசப்பட்ட கல். அதுவும் பனி தடவிய கல். ரஞ்சனி இந்தக் கல்லை எதிர்பார்க்கவில்லை. என்னுடைய கல் அவளைச் செம்மையாகத் தாக்கிவிட்டது தெரிந்தது... ஏனென்றால், அவளுடைய கண் இமைகள் அப்போது படபடத்துக் கொண்டன... நான் ரஞ்சனியின் மன வெளியில் வேறொரு பாணியில் பரவிக்கொண் டிருப்பதை என்னால் உணர முடிந்தது.

எந்த முறையைக் கடைப்பிடித்தாவது அவளின் மனவெளியில் முழுவதுமாகப் பரவிவிட வேண்டு மென்று தீர்மானம் செய்தேன். ரஞ்சனி எனக்கு இன்னொரு மனைவியாக வேண்டியதில்லை, எனக்கு அவள் காதலியாக இருந்தாலே போதும். எனக்கு



அவளிடம் உடல் சுகம்கூட வேண்டாம், மனச் சுகமே போதும்! அவளின் கூந்தல் வாசனையை வேண்டிய அளவிற்கு முகர்ந்து பார்த்தாலே போதும்! ரஞ்சனி வெகு தூரத்தில் இருந்தே மணக்கிற மல்லிகை மலர்! கசக்கிப் பிழிந்து எடுக்கின்ற அத்தர் இல்லை அவள்...! அதற்காக மல்லிகை மலர் தூரத்திலேயே தான் இருக்கவேண்டும் என்பதில்லை, கொஞ்சம் கொஞ்சமாக அது என் அருகில் வந்தாலும் எனக்கு அதில் எந்த வித ஆட்சேபணையும் இல்லை...!

# 5

ஆனந்தியைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குள் ஓர் ரகசியமான உவகை ஏற்பட்டது. அவளுக்குக் கொஞ்சம்கூடத் தெரியாமல் என் மனதிற்குள் ஒரு புதிய உலகம் ஒன்று உருவாகிக் கொண்டிருக்கின்றதே... அந்த உலகத்திற்குள் நான் ரொம்ப ரொம்ப குதூகலமாக இருக்கின்றேனே... அந்த உலகில் எனக்கு ஆனந்தியின் உதவியே தேவை கிடையாதே! நிஜமாகவே எனக்கு 'அப்பாடா' என்றுதான் இருந்தது.

காற்றே விசாத பிரதேசம் போலிருந்த என் வாழ்க்கை கடற்கரையாக மாறிவிட்டிருந்தது! அந்தக் கடற்கரையில் ரஞ்சனியுடன் உட்கார்ந்து மணிக் கணக்கில் பேசிக் கொண்டிருந்தேன்—கற்பனையில் தான். அந்தக் கற்பனையே என்னைச் சந்தோஷமான மனிதனாக்கி இருந்தது.

''மிஸ்டர் தியாகராஜன்—என்ன இப்பக் கொஞ்ச நாளாவே சந்தோஷமா இருக்கீங்க; மனைவி கொஞ்சம் உங்களைப் புரிஞ்சு அனுசரிச்சுப் போறாங்களா?''— ரஞ்சனி கேட்டாள்.

''நீங்க ஒண்ணு; அவளாவது அனுசரிச்சிப் போற தாவது. அதெல்லாம் ஒண்ணும் கிடையாது. ஆனா—

நான் இப்ப நீங்க சொல்ற மாதிரி சந்தோஷமா இருக்கேன். அதுக்குக் காரணம் என் மனைவி இல்லை; என் சிநேகிதி...''

''சிநேகிதியா—அது யாரு?''

''நீங்கதான் ரஞ்சனி... உங்களாலேதான் நான் இப்பக் கொஞ்சமாவது சந்தோஷமா இருக்கேன்... உங்க உதவிக்குத்தான் நன்றி சொல்லணும்.''

''போச்சுடா—நான் என்ன அவ்வளவு பெரிய உதவி பண்ணிட்டேன் உங்களுக்கு...''

''என்னை நீங்க நல்லா புரிஞ்சிட்டு இருக்கீங்களே— அதுவே பெரிய உதவிதானே ரஞ்சனி...''

''இதெல்லாம் ஒரு உதவியா?''

''என்னைப் பொறுத்த வரைக்கும் இதெல்லாமே ரொம்பப் பெரிய உதவி ரஞ்சனி; அந்த அளவுக்கு எனக்கு வாழ்க்கை வெறுமையா இருக்கு... இந்த மாதிரி உதவி யாராவது எனக்குப் பண்ணமாட்டாங்களான்னு எவ்வளவு நாளா நான் காத்திட்டு இருந்திருக்கேன்— தெரியுமா?''

''நீங்க ரொம்பச் சின்ன விஷயத்துக்குக்கூட ரொம்ப இமோஷனலா ரீயாக்ட் பண்ணுவீங்க போலிருக்கு...''

''இதுக்கே இப்படிச் சொல்லிட்டிங்களே ரஞ்சனி! இன்னும் நான் என் மனசு பூராவையும் திறந்து பேசினா என்ன சொல்லுவீங்களோ...!''

ரஞ்சனிக்கு என் மனசு முழுவதையும் திறந்து பார்க்கிற விருப்பம் இல்லையோ என்னவோ... நான் இப்படிச் சொன்னதற்கு எந்தப் பதில் பாவனையும் காட்டாமல் பேசாமல் இருந்தாள். என்னால்தான் பேசாமல் இருக்க முடியவில்லை. பாசி பிடித்த குளக் கரைப் படிகளில் வழுக்கி விழுந்தாற்போல பேச்சில் வழுக்கி விழுந்துவிட்டேன்!



''என் மனசு பூராவையும் இன்னிக்கி உங்களுக்குத் திறந்து காட்டிடட்டுமா ரஞ்சனி...?''— ஒரு ஆற்றாமையுடன் கேட்டுவிட்டேன்.

''நீங்க என்ன பேசினாலும் என்னைப் பொறுத்த வரைக்கும் எந்த ஆட்சேபணையும் கிடையாது கேக்கறதுக்கு...''

''நெஜமாவே உங்களோட ஃப்ரண்ட்ஷிப் எனக்குக் கெடைச்சது— பாலைவனத்துல சோலைவனத்தைப் பார்த்த மாதிரி இருக்கு ரஞ்சனி...டெய்லி உங்களைப் பார்க்கமே; கொஞ்சம் நேரம் கூடப்பேசாமே என்னால இருக்க முடியலை ரஞ்சனி...அவ்வளவு தூரத்துக்கு உங்களோட பேச்சு எனக்கு வேண்டியிருக்கு...

'ஆனா ஒண்ணு; நீங்க வேற, உங்க பேச்சு வேற இல்லையே! உங்க பேச்சு என்கிறது நீங்கதானே...! ஸோ – எனக்கு நீங்க தேவையா இருக்கீங்க ரஞ்சனி! ஐ நீட் யூ; நாட் ஒன்லி தட்; ஐ நீட் யுவர் லவ் ஆல்ஸோ! யெஸ் ரஞ்சனி. எனக்கு உங்களோட காதல் வேணும்... எனக்கு உங்களோட காதல் கிடைக்கும் இல்லையா?'— மிகவும் உணர்ச்சிவசப்பட்டுப்போய் கேட்டேன்.

நான் இந்தக் கேள்வியைக் கேட்டதும் ரஞ்சனியின் முகபாவனை சட்டென்று மாறிவிட்டது. கல்லடி பட்டாற்போல முகம் பூராவும் சிவந்து விட்டது.

''நான்சென்ஸ்'' என்றாள் எடுத்த எடுப்பிலேயே... ''என்ன; காதல் கீதல்னு கடைசியில் உளற ஆரம்பிச்சிட்டிங்க. உங்க மேல எவ்வளவு மரியாதை வச்சிருந்தேன்... எவ்வளவு மனம் விட்டுப் பேசினேன்; ஏதோ—மேட்ரிமோனியல் லைஃப்ல பிரச்னை அது இதுன்னு சொல்லி மனசுக்குள் கஷ்டப்படறாரே—நம்மால் முடிஞ்சா ஏதாவது ஹெல்ப் பண்ணலாமேன்னு கொஞ்சம் க்ளோஸா பழகினா உடனே இந்த மாதிரி எண்ணத்துக்கு ஆளாகிட்டீங்களே தியாகராஜன்...

அழகான நட்போட புனிதத் தன்மையையே அசிங்கப் படுத்திட்டிங்களே... நீங்க என்ன, விபரம் தெரியாத சின்னப் பையனா— இப்படியெல்லாம் ரியாக்ட் பண்ற துக்கு... ரெண்டு குழந்தைகளுக்குத் தகப்பன் தியாக ராஜன் நீங்க... கல்யாணமாகியே பத்துப் பன்னிரண்டு வருஷமாயிடுச்சி உங்களுக்கு. இந்த வயசில்; உங்க கூட வேலை பார்க்கிற ஒரு கல்யாணமாகாத பெண் கிட்டே; அதுவும் கல்மிஷம் இல்லாமே பழகி இருக்கிற ஒரு லேடிகிட்டே கடைசியில் இப்படியா அநாகரிகமா ஒரு பேச்சுப் பேசுவீங்க— சே! நினைக்கவே எனக்கு ரொம்ப வெக்கமா இருக்கு தியாக ராஜன்... ஸாரி— உங்ககிட்டே இருந்து இப்படி ஒரு அபத்தமான பேச்சை நான் எதிர்பார்க்கவே இல்லை... நெஜமாவே உங்க விஷயத்துல நான் ஏமாந்து போயிட் டேன். நீங்களும் கடைசியில் எல்லா ஆம்பளைகள் போலத்தான் நடந்திட்டிங்க..." ரஞ்சனி பேசப் பேச முதலில் எனக்கு அவமானமாக இருந்தது. பின் தாங்க முடியாத கோபம் வந்து விட்டது.

குறுக்கிட்டுச் சொன்னேன்— "இருங்க ரஞ்சனி இருங்க. உடனே என்னைப் பத்தி மோசமான அபிப்பி ராயத்துக்கு வந்திடாதீங்க... உங்ககிட்டே எனக்குத் தப்பான எண்ணம் எதுவும் கெடையாது. ஐஸ்ட் ஐ லவ் யூ. லவ் பண்றது ஒண்ணும் பாபமான காரியம் இல்லை. உங்களோட நல்ல மனசைத் தெரிஞ்சதால எனக்குள்ள ஏற்பட்ட ஒரு மரியாதை உணர்ச்சி அது! அதுவும் என்னோட வீட்ல எனக்குக் கிடைச்சிராத ஒண்ணு உங்ககிட்டே எதிர்பாராமே கெடைச்ச பரவசத்ல ஏற்பட்ட நன்றிஉணர்ச்சி என்னோட காதல். அருமையான பெண்டாட்டியை வச்சுக்கிட்டே; வீட்ல கொழுத்துப் போன நண்டு வளைக்குள் இருக்காது என்கிற மாதிரி வெளியிலேயும் எவளாவது கிடைக்க மாட்டாளான்னு சுத்தற எத்தனையோ ஆம்பளைங்



கள்ள ஒருத்தன் இல்லை நான். எனக்குப் பெண்டாட்டி சரியில்லை! தேவையான காதல் அவகிட்ட இருந்து எனக்குக் கிடைக்கலை. என்னை என் மனைவி புரிஞ் சுக்கிட்டதே இல்லை. புரிஞ்சிக்க ஆசைப்பட்டது மில்லை. என்னோட வீட்லேயே நான் எவ்வளவு தனிமையா இருந்தேன்னு எனக்குத் தெரியும்! கிடைக் காததுக்கு ஆசைப்படறதும்; அதுக்காக ஏங்கறதும் மனுஷ மனசோட இயல்பு ரஞ்சனி! என்னை ஒரு பெண் புரிஞ்சுக்கணும்னு ஆசைப்பட்டேன் ரஞ்சனி.

மனைவிகிட்டே கிடைக்காமல் போயிட்ட அண்டர் ஸ்டாண்டிங்; காதல்— கிடைக்காதான்னு எதிர் பார்த் தேன்— அது தப்பா ரஞ்சனி? தப்பான்னு சொல்லுங்க. தப்புன்னு சொன்னா— இந்த நிமிஷத்தில் இருந்தே உங்ககிட்டே கூடப் பேசறதை நிறுத்திக்கறேன்! நோ ப்ராப்ளம்! சுத்தறதுக்கு எவளாவது கெடைச்சா போதும்னு அலையற 'வுமனைசர்' இல்லை நான். கல்யாணத்துக்கு முந்தி பொம்பளைன்னு ஒருத்தியைக் கூட நான் நிமிர்ந்துகூடப் பார்த்தது கிடையாது— ஞாபகம் வச்சிக்கோங்க! கல்யாணமான சமயத்ல என் மனைவியும் ரொம்ப ரொம்ப அருமையானவளாத்தான் இருந்தா! இல்லேன்னு சொல்லலை. நாளாக நாளாக; குழந்தைகள் பிறந்ததும்— அவளோட எல்லா வகை யிலுமே அவளை நான் இழந்திட்டேன். இதுதான் ப்ராப்ளம். எல்லாத்தையும் குடுத்திட்டு திடீர்னு எதையுமே குடுக்காமே நிறுத்திட்டா எப்படி இருக்கும் —ஒரு மனுஷனுக்கு? அப்படித்தான் இருந்தது எனக்கும்!

"இழந்ததை வேற ஒரு லேடிகிட்டே கிடைக்கு மான்னு ஏங்கினேன். உங்களுக்கு நல்ல அண்டர் ஸ்டாண்டிங் பண்ணிக்கிற மனசும், அறிவும் இருக்கிறது. உங்ககூடப் பழக ஆரம்பிச்ச கொஞ்ச நாள்லேயே தெரிஞ்சது. ரொம்ப இயல்பா உங்க மேல காதல் வயப்

பட்டேன். ரொம்ப இயல்பா அது வெளிப்படவும் செய்திருச்சி. என் காதலை ஏத்துக்கறதும், ஏத்துக்காததும் உங்க விருப்பம்! உங்க காதல் எனக்குக் கிடைச்சா ரொம்ப சந்தோஷப்படுவேன், கிடைக்கலைன்னா வருத்தப்படத்தான் செய்வேன்! எனக்கு அதிர்ஷ்டம் இருக்கா இல்லையான்னு கடவுளுக்குத்தான் தெரியும்!''

எனக்கு அதிர்ஷ்டம் இல்லை! நான் பேசினது முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு மறுபடியும் ஒரு பிரசங்கம் செய்துவிட்டு; ரஞ்சனி எனக்கு 'குட்—பை' சொல்லி எழுந்து போய் விட்டாள். அவள் உட்கார்ந்திருந்த வரை அருகில் கமழ்ந்து கொண்டிருந்த நறுமணமும் அவள் எழுந்து போனதும் அவளுடனேயே போய்விட்டது... நான் மட்டும் ரொம்ப நேரம் வரைக்கும் உட்கார்ந்த இடத்திலேயே இருந்தேன். உலகம் பூராவுமே எனக்கு யாரும் கிடையாது என்கிற மாதிரியான பிரமையில் அங்கேயே உறைந்து போய் இருந்தேன்.

## 6

ரஞ்சனி குட்-பை சொன்ன சில நாட்களுக்கு நான் ரொம்பப் பாதிக்கப்படாதவன் போலத்தான் மௌனமாக இருந்தேன். ஆனால் நாள் செல்லச் செல்ல என்னுடைய மனம் மெதுவாக முணுமுணுக்கத் தொடங்கி பின் இரைச்சல் போட ஆரம்பித்தது!பின் பயங்கரமாகக் கூச்சல் போடவும் தொடங்கிவிட்டது! எப்படியாவது ரஞ்சனியைப் பழிவாங்க முடியுமாவென்று கொந்தளிக்கவும் ஆரம்பித்து விட்டது. ஆனால் அவளைப் பழி வாங்குவதற்கு எந்தவழியும் தெரியவில்லை. அவளைப் பற்றி எதையாவது மட்டமாக எழுதி அவளுடைய வீட்டுக்கு மொட்டைக் கடுதாசி எழுதிப் போடலாமாவென்று நினைத்தேன். அதெல்லாம் எல்லாப் பயல்



களும் செய்கிற மிக மலிவான விஷயம்! நானுமா அந்த மலிவான வழியைக் கையாள்வது? அதுவும் இல்லாமல்; திடீரென்று மொட்டைக் கடுதாசி எழுதினால் எழுதியிருப்பது நானாகத்தான் இருக்கும் என்பதை ஊகிப்பதற்கு ரொம்ப நேரம் ஆகாது! ஆகையால் மொட்டைக் கடுதாசி எழுதுகிற எண்ணத்தைக் கைவிட்டேன். ஆனால், பழி வாங்குகிற எண்ணத்தைக் கைவிட முடியவில்லை. அதே சமயத்தில் பழி வாங்கும் வழியும் புலப்படவில்லை. அதனால் எனக்குள் கோப உணர்ச்சிதான் அதிகரித்தது.

என் கோபம் எல்லாவற்றையும் ஆனந்தியிடம் காட்டினேன். குற்றாலத்தில் இடி இடித்தால் கோயம் புத்தூரில் விளக்கு அணையும் என்கிற கதைதான்! ரஞ்சனியிடம் பட்ட அவமானத்திற்கு ஆனந்தியைப் பழி வாங்கினேன். உப்புப் பெறாத விஷயத்திற்கெல்லாம் அவளை அடித்து உதைத்தேன். ஆனந்தியை எவ்வளவு அடித்து உதைத்தாலும் எனக்குத் திருப்தியே வரவில்லை. அவளைக் கொடுமைப் படுத்துவதில் ஒரு குரூர சந்தோஷம் எனக்குக் கிடைத்தது. ஆனந்தி மாதத்தில் பல நாட்கள் என் கொடுமையைத் தாங்க முடியாமல் அவளின் அம்மா வீட்டில் போய் இருந்தாள். சும்மா சும்மா அம்மா வீட்டில் போய் இருப்பதை நிறுத்தினாள்!

எனக்கு இது ஒரு சின்ன வெற்றி! ஆனால்; என்னுடைய லட்சியம் இந்த மாதிரியான சின்ன வெற்றி இல்லை! அதே மாதிரி ரஞ்சனி விஷயத்தையும் ரொம்பப் பெரிய தோல்வியாக நான் எடுத்துக்கொள்ளக் கூடாது! அது ரொம்பவும் சின்னத் தோல்வி! அது மட்டுமில்லை; தோல்விகள்தான் நாளைய வெற்றிக்கான படிகள்! ரஞ்சனி என்ற அந்தப் படியில் நன்றாகக் காலால் மிதித்து ஏறி அடுத்து எந்தப் படியில் கால் வைக்கலாம் என்று யோசித்தேன்! ஆனால் எந்தப்

படியில் கால் வைக்கவும் தயக்கமாக இருந்தது. எல்லா படியுமே ரஞ்சனிப் படி மாதிரி இருந்து விட்டால்? ஆனந்திக்குத்தான் அடி மேல் அடி ஜாஸ்தியாகும். ஆனால்; ஆனந்தியை அடித்து அடித்து எனக்கு அலுத்துப் போய்விட்டதால் அவளைத் தொடர்ந்து அடித்துக் கொண்டிருப்பதும் எரிச்சலாக இருந்தது!

இந்த மாதிரியான குழப்ப நிலையில் இருந்தபோது தான் நண்பன் காமேஸ்வரன் வேறொரு படியில் கால் வைக்க எனக்கு உதவிக்கரம் நீட்டினான்! ''அடப்பாவி இதுக்குப் போயா இப்படிக் கப்பல் கவிழ்ந்தவன் மாதிரி கன்னத்துல கையை வச்சிக்கிட்டு உக்காந் திருக்கே... எல்லாப் பயல் பெண்டாட்டிகளுமே கொஞ்ச நாளைக்குத்தான் தியாகராஜன் பெண்டாட்டி மாதிரி இருப்பாளுங்க. ரெண்டு பிள்ளைங்க பிறந்தாச்சின்னா அசல் ஆயா போல ஆயிடுவாளுங்க! எங்க வீட்ல வந்து பாரு; என் பெண்டாட்டியைவிட பாத்திரம் தேய்க்க வர்ர வேலைக்காரி ஜோரா இருப்பா! இன்னிக்கி அன்றாட வீட்டு வாழ்க்கை என்கிறது பொம்பளைங் களுக்கு அவ்வளவு ஹெவியா இருக்கு. இத்தனைக்கும் முன்னே மாதிரி கல் உரல்; அம்மி; விறகு அடுப்புன்னு எந்த பேஜாரும் அவளுங்களுக்கு கிடையாது ஸ்விட்ச் போட்டா அரைச்சித்தள்ள கிரைண்டர் மிக்ஸி! கேஸ் அடுப்பு!— ஆனாலும் பாரு; ஒரே டென்ஷன் அவளுங் களுக்கு.

''முன்னே மாதிரி யாரும் ஏழெட்டுப் பெத்துக்கிறது கிடையாது இன்னைக்கி. ரெண்டே ரெண்டு! சிலபேர் வீட்ல அதுவும் கிடையாது. ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு! அப்படியும் சமாளிக்க முடியலை! மூக்கி முணங்குறாளுங்க. தாக்குப் பிடிக்க முடியலை— பாவம். வீட்ல பசங்க அடிக்கிற லூட்டியை அவளுங் களால சமாளிக்கவே முடியமாட்டேன்கிறது. ஒவ்



வொண்ணுக்கும் வால் ஒண்ணுதான் கிடையாது! மத்தபடி அசல் கொரங்குதான்— ஒவ்வொண்ணும்! அந்தக் கொரங்குகளுக்கு வீட்டு 'ஹோம் ஒர்க்' சொல்லிக் கொடுத்தே தாவு தீர்ந்து போயிடும். எப்படா படுத்துத் தூங்கலாம்னு மனசும் உடம்பும் ஒய்ந்து போய் கிடப்பாளுங்க... அவளுங்களைப் போய் நாமும் நம்ப பங்குக்கு நைட்ல பிடுங்கி எடுத்தா என்னதான் பண்ணுவாளுங்க சொல்லு...! அதனால, கல்யாணம் செஞ்ச காலத்ல அவள் எப்படி இருந்தாள் என்கிற பழைய கதையையே நெனைச்சிட்டு இருக்காதே. மறந்திடு அதையெல்லாம்!

''இனிமே உன் பெண்டாட்டி உன்னோட பிள்ளை களுக்குத்தான் முழுக்க முழுக்க அம்மாவா இருப்பாளே தவிர, உனக்கு முழுமையான பெண்டாட்டியா இருக்க மாட்டா! இதுதான் இன்னைக்கு நம்ப பொம்பளைங்க ளோட யதார்த்தமான பொசிஸன்! இந்தப் பொசிஸனை உன்னாலேயும் மாத்த முடியாது, என்னாலேயும் மாத்த முடியாது. அதனால நாம் மாறிட வேண்டியதுதான்..! பெண்டாட்டி மாதிரியான ஒருத்தியை வெளியில் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்!''

''அதுக்குத்தான் காமேஷ் ரஞ்சினியை ட்ரை பண்ணினேன்... திட்டி விட்டுட்டா நல்லா!''

''ரஞ்சனியை ஏற்கனவே ஒரு ஆள் பிடிச்சாச்சி தியாகராஜா!''

''அப்படியா?''

''ரஞ்சனி இன்னைக்கி நம்ம மேனேஜரோட ஆள்'' எனக்கு இந்தச் செய்தி பயங்கர அதிர்ச்சியாக இருந்தது.

''அன்னைக்கி பெரிய இவ மாதிரி பேசினா.''

''பேசறது அப்படித்தான் பேசுவா!''

"இருக்கட்டும் இருக்கட்டும்! ஒரு நாளைக்கு வைக்கிறேன் அவளுக்கு வெடி!"

"நல்லாயிருக்கு தியாகராஜா உன் நியாயம். உன் கிட்டே வரலேன்னா ஒருத்திக்கு வெடி வச்சிட வேண்டியது தானா?"

"அதுக்காக சொல்லலை காமேஷ். பெரிய ஔவையார் மாதிரி எனக்கு அன்னைக்கி அட்வைஸ் பண்ணித் தள்ளினாளே... அதை நெனைச்சாத்தான் வயிறு எரியுது எனக்கு!"

"இன்னைக்கி உலகமே இது போலத்தான் தியாகராஜா. உள்ளே ஒண்ணு; வெளியில் ஒண்ணு..."

"சரி; என் பிரச்னை தீர நீ என்ன வழி சொல்றே? எனக்கு வாழ்க்கையை அனுபவிக்க வெளியிலேயும் ஒண்ணு ரெண்டு பொம்பளைங்க வேணும்!"

"ஒண்ணு ரெண்டு இல்லே; பத்துப் பதினைஞ்சே காட்டறேன்—பேசாமே என்கூட வா..."

## 7

சொன்ன மாதிரியே காமேஸ்வரன் ஒரு நாள் என்னை மந்தைவெளியில் பங்களா போல இருந்த பெரிய வீட்டுக்குள் அழைத்துப் போனான். அது மிகவும் விலை உயர்ந்த பெண்கள் கிடைக்கும் இடம். அந்த இடத்தை நடத்தி வந்தது கோமதி அம்மா என்ற ஒரு பெண்மணி. காமேஸ்வரன் அந்தப் பெண்மணிக்கு ரொம்ப ரொம்ப தோஸ்த் போல் தெரிகிறது. மிகவும் சகஜமாகப் பேசினான். அந்த அம்மாளும் சகஜமாகப் பேசினாள். என்னை அறிமுகம் செய்து வைத்தான். அப்போதுதான் கவனித்தேன்— வீட்டு ஹால் பூராவும் எல்லா அரசியல் தலைவர்களின் படங்களும் மாட்டப் பட்டிருந்தன.



அந்த கோமதி அம்மா உள்ளே திரும்பி குரல் கொடுத்தாள். உடனே திரையை விலக்கி விட்டு ஏழெட்டு பெண்கள் நவநாகரீகமான உடைகளில் ஹாலுக்குள் வந்தார்கள். நான் அசந்து விட்டேன். அந்தப் பெண்கள் எல்லோருமே வனப்பின் மொத்த வடிவமாகத் தெரிந்தார்கள். சில பெண்கள் சுடிதார் அணிந்திருந்தார்கள். ஒரு பெண் மிடி அணிந்திருந் தாள். ஒரு சிலர் புடவைகளில் இருந்தார்கள். புடவை களா அவைகள்? தண்ணீரை துணியாக நெய்தாற் போல அத்தனை வழிந்து வழிந்து கிடந்தது புடவை. ஆனந்தி புடவை கட்டும் அழகை ஒருகணம் நினைத்துப் பார்த்தேன். கணுக்காலுக்கு அரை அடி உயரத்தில் இருக்கும் புடவைக் கட்டு! இரட்டை முந்தானையையும் இழுத்துப் பிடித்து ஒரு செருகல் வேறு...! திராட்சைப்பழ குலைகளைப் பார்த்துவிட்ட நரி போலத்தான் என் மனம் அன்றைக்குத் தும்மாளம் போட்டது என்று சொன்னால் அது மிகையில்லை...

அன்றைக்கு மந்தைவெளியில் இருந்து எப்படித் தான் வீடு திரும்பினேன் என்பது எனக்கே தெரியாத விஷயம். வானத்தின் வழியாகப் பறந்துதான் வந்தே னென்று நினைக்கிறேன். எனக்குள் இருந்து எதையோ திறந்து விட்டு விட்டாற்போல சுதந்திரமாக இருந்தது. பல மாதங்களாக என்னுள் உறைந்து போயிருந்த இறுக்கம் முற்றிலுமாகக் கரைந்து போயிருந்தது. பெரிய தவளை உருவம் பெற்று வானத்திற்கு வானம் தாவிக் குதிக்க வேண்டும் போல் ஆசையாக இருந்தது. ஒரே நாளில் என்னுடைய உலகம் மாறிவிட்டது. ஆனந்தி யின் மேல் இருந்த கோபமும், வெறுப்பும்கூட மறைந்து விட்டன. அவள் பாவம், என்ன செய்வாள்...? அவளு டைய தற்போதைய உலகம் வேறு! கல்யாணமான

புதிதில் தேனிலவு போனபோது எத்தனை இனிமையாக இருந்தாள்... இன்றைக்குத்தானே வர வர மாமியார் கழுதை போல ஆன கதையாகி விட்டாள். போனால் போகிறாள்! இனி அவள் எப்படி இருந்தாலும் எனக்குக் கவலை இல்லை! எனக்கு வாய்க்கு ருசியாக சமைத்துப் போடுகிறாள். ஏன், துணிகள் துவைத்துப் போடுகிறாள். என் பிள்ளைகளை நல்லபடியாக வளர்க்கிறாள். ஆனந்தி இப்போது வெறும் பெண்ணில்லை, தாய்! அவளின் தாய்மையை வணங்குவோம்...!

ஆனால்— ஆனந்தியை மன்னித்த மாதிரி ரஞ்சனியை என்னால் மன்னிப்போம்; மறப்போம் என்று நினைக்க முடியவில்லை. என் மனைவி ஆனந்தி உள்ளே ஒன்று, வெளியில் ஒன்று என்கிற மாதிரியான மனுஷி இல்லை. ஆனால் ரஞ்சனி அப்படி இல்லை. வேஷக்காரி! பெரிய ஜாலக்காரி! அவளை என்றைக்காவது பழிக்குப் பழி வாங்கியே தீர வேண்டும்... மற்றபடி வேறு எந்த மனக் கஷ்டமோ பிரச்னையோ எதுவும் இல்லை. எனக்கு விருப்பமான நேரத்தில் மந்தைவெளி கோமதி அம்மா வீட்டுக்குப் போனேன். அங்கிருந்த பெண்கள் எனக்கும் மிகவும் பரிச்சயமாகி விட்டார்கள். நாளடைவில் ரொம்ப 'தோஸ்த்' ஆகிவிட்டார்கள். அவர்களிடம் எனக்கு வேறு எந்த கமிட்மெண்ட்டும் இல்லை. அட்டாச்மெண்ட்டும் இல்லை. எந்த நிர்ப்பந்தங்களும் இல்லாமல் அந்தப் பெண்களை நான் சந்திக்கிறேன்... விடை பெறுகிறேன்... அதனால் வாழ்க்கை இலேசாக இருந்தது. சிகரெட் புகை போல் இதமாக இருந்தது... கோமதி அம்மாள் வீட்டு உறவு கொஞ்சம் விலை உயர்ந்ததாகத்தான் இருந்தது. இருந்தாலும் விலை உயர்வை நான் பொருட்படுத்தவில்லை, ஏனெனில்; நான் கொடுத்த அந்த விலைக்கு எனக்குக் கிடைத்த சுகமும், நிம்மதியும் அந்த விலையை விட உயர்ந்தது...!

# 8

என் வாழ்க்கை ஆர்ப்பாட்டம் இல்லாத சிற்றோடை போல் சலனம் இல்லாமல் ஓடிக் கொண்டிருந்தது. சமூகத்தில் வங்கியில் கை நிறைய சம்பளம் வாங்குகிற பெரிய மனுஷனாகவும், ஆனந்தி என்ற குடும்பத் தலைவியின் நல்ல கணவனாகவும், இரண்டு குழந்தைகளின் பொறுப்புள்ள தகப்பனாகவும் அங்கீகரிக்கப்பட்டு தலை நிமிர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தேன். அதே சமயம் அவ்வப்போது மந்தைவெளியில் கோமதி அம்மாள் வீட்டில் கலா; லதா; உஷா; தீபாவென்று ரகசியமான உல்லாச கேளிக்கைகளிலும் திளைத்துக் கொண்டிருந்தேன். —அதென்னமோ அங்கு இருந்த பெண்களின் பெயர்கள் எல்லாமே இரண்டெழுத்தில் தான் இருக்கும்! காமேஸ்வரன்தான் எனக்குச் சொல்லிக் கொடுத்தான். அதெல்லாம் அப்பெண்களின் புனை பெயர்களாம்! நிஜப் பெயர்கள் அக்கம்மா; சுப்பக்கா; அன்னக்கிளி என்று இருக்குமாம்! வேடிக்கைதான்—ஆனாலும் மந்தைவெளி வேடிக்கைகளின் நேரம் சிறிய வட்டத்திற்கே உட்பட்டதாக இருந்தது. சின்ன வட்டத்தைப் பெரிய வட்டமாக வரைந்து பார்க்கிற ஆசை வந்தது. விரைவில் அதற்கான காலமும் வந்தது.

வங்கியில் பணி புரிகின்றவர்கள் நான்கு வருஷங்களுக்கு ஒரு முறை குடும்பத்துடன் நிறைய ஊர்களுக்கு உல்லாசச் சுற்றுலா போய் வரலாம். அந்தச் சுற்றுலாவிற்கான ரயில்; பஸ் கட்டணங்களை வங்கி ஏற்றுக் கொள்ளும். கல்யாணமான வருஷம் ஒரு தடவையும் கல்யாணமாகி நான்கு வருடங்கள் கழித்து ஒரு தடவையும் ஆனந்தியுடன் நிறைய ஊர்கள் சுற்றிப் பார்த்தேன். அதன்பின் போகவில்லை. இப்போது விரும்பினால் போகலாம். எனக்குத் தெரியும்—குழந்தைகளையும் இழுத்துக் கொண்டு ஊர் சுற்றிப் பார்ப்பதில்

ஆனந்திக்கு விருப்பம் இல்லை. எங்கேயும் வரவில்லையென்று சொல்லிவிட்டாள். எனக்குள் புழு மாதிரி ஒரு எண்ணம் நெளிந்து கொண்டிருந்தது. நண்பர்களுடன் சேர்ந்து பெங்களூரோ, மங்களூரோ போவதாக ஆனந்தியுடன் சொல்லிவிட்டு; வங்கியில் மனைவியோடு போவதாக சொல்லிவிட்டு; ஓசைப்படாமல் ஒரு வாரத்திற்கு கோமதி அம்மாள் வீட்டில் இருந்து யாராவது ஒரு இரண்டெழுத்துக்காரியை கூட்டிக் கொண்டு ஜோராக பெங்களூர் போய்விட்டு வந்தாலென்ன?

பதினைந்து நாட்கள் உட்கார்ந்து உட்கார்ந்து யோசித்துக் கொண்டே இருந்தேன். எனக்குள் புதிய நதி ஒன்று கிளம்பினாற் போலிருந்தது. குறிப்பாக மாலாவைக் கூட்டிக் கொண்டு போனால் அசுர மழையில் மாட்டிக்கொண்டாற் போலத்தான் திகிலோடு கூடிய ஆனந்தம் சுற்றிலும் கொட்டும்! நிச்சயமாக அந்த ஒரு வாரம் என் வாழ்க்கையின் வித்தியாசமான காலமாக இருக்கும்...நினைத்தாலே இனிக்கிற மறக்க முடியாத அனுபவமாகத்தான் இருக்கும்...

என்ன செய்யலாம்? பிளான் போட்டு விடலாமா? வங்கிச் செலவில் மாலாவை அழைத்துக் கொண்டு ஒரு வாரம் பெங்களூரில் ஒரு அட்டகாசம் பண்ணிவிட்டு வரலாமா? வாழ்க்கையை அப்படி ஒரு வித்தியாசமான கோணத்தில் அனுபவித்துப் பார்க்கலாமா? அனுபவித்துப் பார்க்கலாம் என்ற முடிவுக்கு மனம் வந்தது. ஆனால் இன்னொரு மனம் கொஞ்சம் தயங்கியது; பயந்தது. மனைவியுடன் போவதாகச் சொல்லிவிட்டு விலைமகளுடன் போகிற ரகசியம் யாருக்காவது தெரிந்து விட்டால்? தெரிய முடியாதபடி திட்டமிட வேண்டும்! மூளை வேறு எதற்கு இருக்கிறது? இந்த மாதிரி ஊரையும் உலகையும் ஏமாற்றுவதற்குத்தானே... ஊரையும் உலகத்தையும் ஏமாற்றியே தீருவதென்ற



இறுதி முடிவுக்கு நான் விரைவிலேயே வந்து விட்டேன்...!

# 9

விஷயத்தை காமேஸ்வரனிடம் கூடச் சொல்லாமல் விட்டு விடலாமாவென்றுதான் நினைத்தேன். ஆனால் அது நன்றாக இராது என்று தெரிந்தது— அந்த மந்தைவெளி உலகத்தை எனக்கு அறிமுகம் செய்து வைத்ததே அவன்தான். அவனிடம்கூடச் சொல்லாமல் போவது நன்றி கெட்ட குணம்! ஆகையால் அவனிடம் சொன்னேன்—

''தாராளமா ஜமாய்! எவன் எவனோ என்னென்ன மோசடியெல்லாமோ செஞ்சிட்டு நெஞ்சைத் தூக்கிட்டு திரியறான்.''

''உண்மை தெரிஞ்சி போயிட்டா ஏதாவது நடவடிக்கை எடுத்திடுவானா?''

''தெரிஞ்சாத்தானே...? நீபாட்டுக்குக் கவலைப் படாமே போ. போய் வாழ்க்கையை அனுபவி. சரி, எவளைக் கூட்டிட்டுப் போகப் போறே...?''

''என்னோட சாய்ஸ் மாலாதான்...''

''கோமதி அம்மா பணம் நெறையக் கேப்பா— அதைப் பார்த்துக்க...''

''எவ்வளவு பணம் கேட்டாலும் செலவழிக்கத் தயாராயிட்டேன். இதைவிட்டா வேற சான்ஸ் கெடைக்காது எனக்கு...''

''அப்ப ஜமாய்!''

நானும் தாமதம் செய்யாமல் உடனே காரியத்தில் இறங்கி விட்டேன். என் மனைவியோடும் குழந்தையோடும் சுற்றுலா போவதைத் தெரிவித்து எங்கள் வங்கி மேலாளருக்கு முதலில் ஒரு விண்ணப்பக் கடிதம்

எழுதிக் கொடுத்து அனுமதி பெற்றுக் கொண்டேன். வங்கி நண்பர்களுடன் சேர்ந்து போவதாக ஆனந்தியிடமும் திட்டமிட்டபடி சொல்லி வைத்தேன். அவளுக்கும் ரொம்ப நிம்மதி. ஒரு வாரத்திற்கு என்னுடைய பிடுங்கல் இல்லாமல் ஒரு வாரத்திற்கு சுதந்திரமாக இருக்கலாமே? அந்த ஒரு வார சுதந்திரத்தை அவளுடைய அம்மாவின் வீட்டிற்குப் போய் கொண்டாடப் போவதாகச் சொல்லி அதற்கு என்னுடைய அனுமதியையும் பெற்று விட்டாள். நானும் பெரிய மனது வைத்து அவளுக்கு எனது அனுமதியைக் கொடுத்து விட்டு நேராக மந்தைவெளிக்குப் போனேன், அவ்வளவுதான்.

ஒரு வாரம் பெங்களூர் போய்விட்டு வர இரண்டு எழுத்துப் பெண்களின் மத்தியில் நான் நீயென்று கடுமையான போட்டி! ரயிலில், அதுவும் முதல் வகுப்பில் ஜாலியாக ஒரு பைசா செலவு இல்லாமல் பெங்களூர் போய் வருவதென்றால் சும்மாவா? அவர்கள் போட்ட போட்டியில் யாரைக் கூட்டிக்கொண்டு போவதென்று சிறிது நேரத்திற்கு எனக்குப் புலப்படவே இல்லை. எனக்கு மட்டும் போதுமான பண வசதி இருந்தால் இரண்டெழுத்துப் பெண்கள் எல்லோரையுமே அழைத்துக்கொண்டு போய் விடுவேன்! ஆனால் அந்த அளவுக்கு என்னிடம் பண வசதி இல்லையே...!

ஆகையால் என்னுடைய பொன்னான வாக்கு—மாலாவுக்குத்தான்! கோமதி அம்மாள் நான் எதிர்பார்த்ததற்கும் மேலாகப் பணம் கேட்டாள். ஈட்டிக்காரர் ஒருவரிடம் கடன் வாங்கித்தான் அந்தப் பணத்தை என்னால் தயார் செய்ய முடிந்தது. இன்னும் பெங்களூர் போய் வருகிற செலவு வேறு இருக்கிறதே...!

சம்பளம் வாங்கின உடனே கிளம்புகிற மாதிரி மாலாவுக்கும் எனக்கும் பெங்களூர் போக டிக்கெட் ரிசர்வ் செய்தேன்—பதினைந்து நாட்களுக்கு முன்பே...



ரிசர்வேஷன் விண்ணப்பத்தில் மறக்காமல் மாலாவின் பெயரை எழுதி விடாமல் ஆனந்தியின் பெயரை எழுதினேன். டிக்கெட்டை ஆனந்தியின் கண்களில் படாமல் பத்திரமாக வைத்துக்கொண்டேன். பெங்களூர் புறப்படுகிற தேதியை நோக்கிக் காலம் 'குட்ஸ்ரயில்' மாதிரி மிக 'ஸ்லோ'வாக சென்று கொண்டிருந்தது.

கிளம்புகிற தேதி நெருங்க நெருங்க என் மனம் பரபரப்பாகியது. ஒருவார காலம் மனைவியாக இல்லாத ஒரு பெண்ணுடன் பெங்களூரில் அசுர மழையில் அல்லவா நனையப் போகிறேன்—ரகசியமாக; அதே நேரத்தில் முற்றிலும் சுதந்திரமாக...

பெங்களூர் போகிற தேதியும் வந்தது. சென்ட்ரலுக்குப் போகவேண்டிய அந்த நேரமும் வந்துவிட்டது. ஆட்டோ பிடித்து மந்தைவெளி போனேன். மூட்டை முடிச்சுகளுடன் மாலா தயாராக இருந்தாள்! என் மனைவிக்குத் தெரியாத ஒரு என்னுடைய ரகசிய உலகம் ஓர் சிகரத்தை நோக்கி எழும்பிக் கொண்டிருந்தது. ஆட்டோவில் மாலாவுடன் சென்ட்ரல் விரைந்த போதே சிகரம் என்னை நோக்கி பாய்ந்து கொண்டிருந்தது. மாலாவுடன் எனக்கு எந்த பொறுப்புக்களும், உரிமைகளும் இல்லை. வேறு எதிர்பார்ப்புகள் இல்லை. விரும்பும்போது பணத்துடன் சந்திக்கலாம். பிரியலாம்— அவ்வளவுதான். வாசனைகளை மட்டும் பகிரலாம். வியர்வையை நிராகரிக்கலாம். கோமதி அம்மாள் எனக்கு விதித்த ஒரே ஒரு நிபந்தனை— பெங்களூரில் இருந்து திரும்பும்போது தப்பாமல் மாலாவை வீடு வரை கொண்டு வந்து விட்டு விட வேண்டும்.

சென்ட்ரலில் இருந்து இறங்கினோம். அப்போதுதான் எனக்குப் பிடிக்காத ஒன்று நடந்து விட்டது. வேறொரு ஆட்டோ டிரைவர் மாலாவை அடையாளம் தெரிந்து தேவை இல்லாமல் அருகில் வந்தான்.

"என்னம்மா: வெளியூர் போறியா?" என்று வேறு விசாரித்தான்.

"அட: முத்துவா... வெளியூர்தான் போறேன்... வரட்டுமா?" என்று சுருக்கமாக அவனுக்குப் பதில் சொல்லிவிட்டு மாலா என்னுடன் வேகமாக நடந்தாள். எனக்கு சங்கடமாக இருந்தது.

"நீ அவனுக்குப் பதில் சொல்லியிருக்க வேண்டாம்" என்றேன்.

"அதனாலதான் ரொம்ப சுருக்கமா பதில் சொன்னேன். ஒண்ணுமே சொல்லாமே போனா நாளைக்கு அம்மாகிட்டே போய் புகார் பண்ணுவான். கஸ்டமர்களைக் கூட்டிட்டு வரமாட்டான்...!"

"சரி சரி—நட...!"

கஸ்டமர்! அந்த வார்த்தையைக் கேட்பதற்கே என்னவோ போலிருந்தது. லேசாக எனது உற்சாகம் தடுமாறியது! முத்து என்ற ஆட்டோ டிரைவருக்கு அடையாளம் தெரிந்த மாதிரி மாலாவை இன்னும் யாருக்காவது அடையாளம் தெரிந்தால்? நான் சுற்றிலும் கவனித்துக் கொண்டே நடந்தேன். தனிப்பட்ட முறையில் மாலாவை அடையாளம் கண்டு யாரும் பார்க்கவில்லை என்றாலும் அவளின் தோற்றம் அவளைப் பற்றிய உண்மையைப் பார்க்கிறவர்களுக்கு உணர்த்தியது போலும்!

நிறைய பேர் அவளைக் கவனித்துப் பார்த்தார்கள், குறிப்பாக ஆண்கள்! நானும் ஒரு ஆடவன் என்ற முறையில் மாலாவைப் பார்த்தேன். அவளுடைய உடம்பு ஒருத்தனுக்கு வெறும் மனைவியாக மட்டும் இருக்கின்ற ஒருத்திக்கு ஏற்படுவதற்கில்லை! அப்போதுதான் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் பார்த்தேன். என்றைக்கும் இல்லாமல் மாலாவின் கழுத்தில் மஞ்சள் கயறு இருந்தது! நடந்துகொண்டே கேட்



டேன்— "என்ன இது கழுத்துல— புதுசா ஒரு மஞ்சள் கயறு?"

"ஒரு பாதுகாப்புக்கு இருக்கட்டும்! உங்க மனைவியா வர்றேனே— தாலி இல்லாம வந்தா எப்படி?"

எனக்கு ஏனோ ஆனந்தியின் ஞாபகம் வந்தது. அவளுடைய இடத்தில் என்னுடன் ஒரு மாதிரியான இவள்...!

எங்களுக்கு ரிசர்வ் செய்யப்பட்டிருந்த பெட்டியில்; வெளியில் ஒட்டப்பட்டிருந்த பயணிகளின் பெயர்களில் திருமதி: திரு. தியாகராஜன் என்ற பெயர்களை ஊர்ஜிதம் செய்துகொண்டு அந்த முதல் வகுப்புப் பெட்டியில் அவசரமாக ஏறி உட்கார்ந்தேன். அப்பாடா என்றிருந்தது. மாலாவை யாரும் அடையாளம் தெரிந்து பார்க்கக் கூடாதே என்று மனம் கவலைப்பட்டது. என்னுடைய மனமும் யாராவது அவளை அடையாளம் தெரிந்து பார்க்கிறார்களா என்பதைக் கவனிப்பதிலேயே சுழன்று கொண்டிருந்தது. ரயில் பயணம் நெடுகவே என்னால் மாலாவுடன் இயல்பாகவே இருக்க முடியவில்லை!

எங்களுக்கு எதிரில் ஒரு கணவனும் மனைவியும் ரொம்ப இயல்பாக இருந்தார்கள். அவர்கள்கூட என்னையும் மாலாவையும் இயல்பாக பார்க்கவில்லை! நானும் மாலாவும் நிஜமான கணவன் மனைவி இல்லை என்பது எங்களுடைய முகங்களில் எழுதி ஒட்டியிருந்ததோ என்ன எழவோ?! எரிச்சலாகப் போய் விட்டது எனக்கு. ஏண்டா இப்படிக் கிளம்பி வந்தோம் என்றாகி விட்டது. மாலாவைப் பொறுத்தவரையில் இயல்பாகத்தான் இருந்தாள். ஆனால் என்னால் இயல்பாக இருக்கவே முடியவில்லை.

பெங்களூரில் இருந்த ஒரு வாரமும் முள்ளின் மேல் இருப்பது போல் இருந்தது. வெளியில் எங்கே போனா

லும் எல்லாருமே மாலாவை ஒரு மாதிரியாகப் பார்ப்பது போலவே இருந்தது! தங்கியிருந்த ஹோட்டல் அறைக்குள் இருந்தபோது மட்டும்தான் நிம்மதியாக—இயல்பாக இருந்தேன்... மாலாவுடன் நான்கு சுவர்களுக்குள் மட்டும்தான் நிம்மதியாக இருக்க முடியும் போல் தெரிந்தது! மாலா ஒரு அறைப் பறவை! வீட்டுப்பறவை இல்லை! இந்த ஞானம் வருவதற்கு ஆயிரக்கணக்கில் செலவழித்து பெங்களூர் வர வேண்டி இருந்திருக்கிறது! பாலுறவுச் சுகத்தைப் பொறுத்த வரையில் திருப்திதான். கல்யாண விட்டுச் சாப்பாடு சாப்பிட்டமாதிரி இருந்தது என்றுகூடச் சொல்லலாம்...! ஆனால் அதெல்லாம் எற்கனவே சொன்ன மாதிரி அறைக்குள்ளே மட்டும் தான். அறைக்கு வெளியில் மாலா— எத்தனைதான் அவள் அழகாக நடந்து கொண்டாலும்— அவள் கல்யாண சாப்பாடு சாப்பிட்டு விசி எறியப்பட்ட கொழுத்த எச்சில் இலைதான்!

## 10

சிகரம் சிகரம் என்று ஆசைப்பட்டு ஓடிய பெங்களூர் வாரம் மனதைப் பொறுத்த வரையில் அகல பாதாளமாக இருந்ததென்று சொன்னால் அது மிகையில்லை. எப்போதுடா ஊர் போய்ச் சேருவோம் என்று காத்துக்கொண்டிருந்தேன். சென்னை கிளம்புவதற்கு முந்தின நாள் இரவு நான் சிறிதுகூட எதிர்பாராத ஒரு கேள்வியை மாலா என்னிடம் கேட்டாள்.

அந்தக் கேள்வி—"என்னை கல்யாணம் பண்ணிக்கிறீங்களா?" எனக்கு ரொம்ப இகழ்ச்சியாகவும் கிண்டலாகவும் இருந்தது. சும்மா ஒரு வாரம் புருஷன் பெண்டாட்டியென்று வேஷம் போட்டதே தாங்க முடியாமல் போய்விட்டது. போகிறவன் வருகிறவனெல்லாம் மேலேயும் கீழேயும் பார்க்கிறான். இந்த லட்சணத்தில்



நிஜமாகவே இவளைக் கல்யாணம் வேறு செய்து கொண்டால் அரோகராதான் என் பாடு! நல்ல ஆளைப் பார்த்துக் கேட்டாள்...!

ஆனாலும் என்னுடைய உள் மனசைக் காட்டிக் கொள்ளாமல் மாலாவை நான் ரொம்பவும் ஆச்சர்யமான பாவனையுடன் கேட்டேன்—

"என்ன திடீர்னு இப்படிக் கேட்டுட்டே?"

"ரொம்ப நல்லவரா இருக்கீங்களே—அதனால கேக்கறேன்."

"நானா? ரொம்ப நல்லவனா?"...பொய்யாகக் கேட்டேன்.

"ஏன்—நீங்க நல்லவர் இல்லையா?"

"என்னைப் போய் நல்லவன்னு சொல்றியே...! ரொம்ப ரொம்பக் கேடு கெட்டவன் நான்!"

"பொய்யெல்லாம் பேசாதீங்க: எனக்குத் தெரியும்— நீங்க ரொம்ப நல்லவர்..."

"பாரு—பணம் கொடுத்து ஒரு பெண்ணை என் பெண்டாட்டிகூட டூர் போறேன்னு பேங்க்காரன் கிட்டே பொய் சொல்லிப் பணம் வாங்கிட்டு வந்து இப்படி லூட்டி அடிச்சிக்கிட்டு திரியறேன்— பெண்டாட்டி பிள்ளைகளுக்குக்கூடத் தெரியாமே— என்னைப் போய் நல்லவன்னு சொல்றியே—கடவுளுக்கே அடுக்காது மாலா இது."

"இந்த மாதிரி லூட்டி அடிச்சா பொல்லாதவராக்கும்?"

"என்னைப் பொறுத்த வரைக்கும் அப்படித்தான் அர்த்தம்."

'சரி—உங்களைப் பொறுத்த வரை பொல்லாதவராவே இருந்திட்டுப்போங்க. அதனால எனக்கு

ஒண்ணுமில்லை. ஆனா—என்னைக் கல்யாணம் பண்ணிக்கோங்க...''

''மாலா—இதை நீ சீரியாஸாவா கேக்கறே?''

''சீரியஸாத்தான் கேக்குறேன். எனக்கு உங்களைப் பிடிக்குது. அதனாலேதான் கேக்கறேன்.''

''ஏற்கனவே நான் கல்யாணமெல்லாம் ஆகி ரெண்டு குழந்தைகளுக்குத் தகப்பன் மாலா.''

''அதெல்லாம்தான் தெரிஞ்ச சமாச்சாரமாயிற்றே... அதைப் பத்தி எனக்குக் கவலை இல்லை. உங்களைக் கட்டிக்கிட்டா வாழ்க்கையில இனிமேலாவது நான் சந்தோஷமா இருப்பேன்...''

''ஸாரி மாலா; பொண்டாட்டி இருக்கும்போது இன்னொருத்தியையும் கல்யாணம் செய்துக்க என்னால முடியாதும்மா...''

மாலா மௌனமாக இருந்தாள், அவளின் கண்கள் எங்கோ நிலை கொண்டிருந்தன. நானும் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். மாலா பல நிமிஷங்களுக்குப் பேசாமலேயே இருந்தது எனக்குச் சிறிய பயத்தைத் தந்தது! எழுந்து ஆனந்தியிடம் ஓடிப் போய்விட மனசு பரபரத்தது.

பெங்களூரின் கடைசி இரவில் எனக்கும் மாலாவுக்கும் இடையே சரியான பேச்சுக்கூட நெடு நேரத்திற்கு இல்லை. வெகு நேரத்திற்குப் பிறகு அணை உடைந்த மாதிரி மாலா அவளுடைய வாழ்க்கையின் கடந்த காலம் பற்றி பேசித் தீர்த்தாள். மாலா பேசப் பேசத் தான் தெரிந்தது—அவளுடைய வாழ்க்கை எப்பேர்ப் பட்ட கண்ணீர் நாவல் என்று...! எத்தனை விலை உயர்ந்த விலைமகளாக, இருந்தாலும் அவளின் கதை கண்ணீர் கதைதானாம்! இந்த வெக்கங்கெட்ட வாழ்க்கையை வாழ அவளுக்குக் கொஞ்சம்கூட விருப்பமே கிடையாதாம்... ஆனாலும்— மாலாவுக்கு வேறு வழி



இல்லையாம். விதியின் கொடுமையாம்! தன் குடும்பத்தின் வறுமைக்காக இப்படி ஆக வேண்டியதாகி விட்டதாம்...

மாலா அன்று விடிய விடியப் பேசினாள் மனம் திறந்து. ஆனால் நான் கடைசிவரை வாயைத் திறக்கவில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டும் அவளை நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிற பேச்சுக்கே இடமில்லை. பிறகு எதற்காக வெட்டிப் பேச்சு பேசிக் கொண்டிருக்க வேண்டும்?—மாலா சொன்னதையெல்லாம் கேட்டால் ரொம்பப் பாவமாகத்தான் இருந்தது; பரிதாபமாகத்தான் இருந்தது. பரிதாபப்பட்டு இந்த மாதிரியான ஒருத்தியை கல்யாணம் செய்து கொள்ள முடியுமா? கல்யாணம் செய்து கொண்டால்—அவ்வளவுதான்! அப்புறம் என்னுடைய கன் தான் கண்ணீர் கதையாக இருக்கும்!

ஒரு வழியாக அப்படி இப்படியென்று பெங்களூர் வாரம் முடிவிற்கு வந்தது. நான்பாட்டுக்கு ஹோட்டல் அறையை ஜடம் மாதிரி காலி செய்தேன். ஜடம் மாதிரி ஆட்டோ பிடித்தேன். ரயில் பயணம் பூராவும் ஜடம் மாதிரியே உட்கார்ந்திருந்தேன். மாலாவை யாரும் ஒரு மாதிரியாகப் பார்க்கிறார்களா என்ற பயமெல்லாம் சுத்தமாக இல்லை. பரப்பிரம்மம் மாதிரி உட்கார்ந்திருந்தேன்! வாழ்க்கைக்கு உண்மையில் எது தேவை என்பது புரிந்துவிட்டிருந்தது! ஆகையால் மாலாவின் அருகாமை என்னைக் கஷ்டப்படுத்தவில்லை. அலுவலகம் போய் விட்டுத் திரும்புகிற வெறும் அன்றாட களைப்புடன் சென்ட்ரல் ஸ்டேஷன் வந்து இறங்கினேன்.

''வா மாலா; உன்னை மந்தைவெளியில கொண்டு போய் விட்டுட்டு அப்புறமா நான் வீட்டுக்குப் போறேன்'' என்றேன்.

"பரவாயில்லைங்க— உங்களுக்கு ஏன் வீண் கஷ்டம்... நானே போயிடறேன் ஆட்டோல..."

"உன்னை வீட்ல கொண்டு வந்து விடச் சொல்லி யிருக்காங்க கோமதி அம்மா."

"அவங்க சொல்வாங்க... அவங்களுக்கு வேற வேலை."

"பயப்படாதீங்க—நான் பத்திரமா போயிடுவேன்."

"பத்து நாள் கழிச்சி நான் வந்து பாக்கறேன் உன்னை!"-என்றேன் பொய்யாக. ஆனால் மனசுக்குள் என்னுடைய தீர்மானம்—இனி மந்தைவெளிப் பக்கம் தலை வைத்துக்கூட படுக்கக்கூடாது!

"நான் கல்யாணப் பேச்சை எடுத்தேன் என்கிறதுக் காக என்னைப் பார்க்க வராமே இருந்துடாதீங்க, அடிக்கடி வரணும் நீங்க!"

"என்னை நீ தினம் வரச் சொன்னாக்கூட வருவேன் மாலா...!" மாலா தனியாக ஒரு ஆட்டோவில் ஏறிக் கொண்டாள். நான் வேறொரு ஆட்டோவில் ஏறிக் கொண்டேன்,

# 11

திரும்பிப் பார்க்காமல் வீடு போய்ச் சேர்ந்தேன். அப்பாடாவென்று இருந்தது. யதார்த்தமான சினிமா பார்ப்பதுபோல இருந்தது வீட்டின் ஒவ்வொரு காட்சியும்! வீட்டின் அழகும் மனைவியின் அழகும் என்னவென்று தெரிந்தன... பெங்களூர் ஹோட்டல் அறை வாடகை ஒரு நாளைக்கு நூற்றி ஐம்பது ரூபாயாக இருக்கலாம். ஒரு போன் பண்ணிச் சொன் னால் அறைக்கே காப்பி ஒரு நிமிஷத்தில் சுடச்சுட வரலாம்—அருமையான இருபத்தி நான்கு மணி நேரம் சர்விஸ்தான். வீடு வீடுதான்!



500557

ஒரு பக்கம் குழந்தைகளின் கூச்சல். ஆயா துணி துவைக்கும் சப்தம். சமையல் அறையில் வியர்வை நெடியில் ஆனந்தி. ஆயினும் எல்லாமே ரம்மியமாக இருந்தன. பாலுறவு வாழ்க்கையின் அடித்தளம் இல்லை என்பதாகத் தோன்றியது! மேலும் மூன்று நாட்கள் ஆபீஸ் போகாமல் விச்ராந்தியாக வீட்டி லேயே படுத்து நன்றாகத் தூங்கினேன். நன்றாகச் சாப்பிட்டேன். நிம்மதியாக இருந்தேன்.

ஆனால் மறுநாள் ஆபீஸ் போனபோது என்னு டைய நிம்மதி முற்றிலுமாக நாசமானது. நான் ஆபீஸ் போகாத மூன்று நாளும் என்னைத் தேடி மந்தைவெளி கோமதி அம்மா எங்கள் பேங்குக்கே வந்திருக்கிறாள். சொல்லிவிட்டுப் போன தேதியில் மாலா வீடு திரும்பி வராமல் போகவே என்னைத் தேடி கோமதி அம்மா ஆபீஸ் வந்துவிட்டாள். நானும் ஆபீஸ் வராததால், நான் பெங்களூரில் இருந்தே திரும்பவில்லையென்று நினைத்து, அதையே பதிலாகச் சொல்லி காமேஸ்வரன் தான் கோமதி அம்மாளை சமாதானம் பண்ணி அனுப்பி வைத்திருக்கிறான்.

894.8113 STE

என்னைப் பார்த்ததும் காமேஸ்வரன் ஓடி வந்து இதைத்தான் முதலில் சொன்னான். நான் அதிர்ந்து போய்விட்டேன். அவனைத் தனியாக அழைத்துப் போய் மூன்று நாட்களுக்கு முன்பே நான் வந்துவிட்ட தையும்; அன்றைக்கே மாலாவும் மந்தைவெளி போய் விட்டாள் என்பதையும் சொன்னேன்.

"நேத்துக்கூட கோமதி அம்மா வந்திருந்தா தியாகராஜா; நேத்து வரை மாலா வீடு வந்து சேரலை."

"அவ ஒரு ஆட்டோ பிடிச்சி நேரா மந்தைவெளி தான் கிளம்பிப் போனா—என் கண்ணால பாத்தேன் காமேஸ்வரா...!"

"வீடு போய் சேரலையே!"

CONNEMARA PUBLIC L...
4 - FEB ...

''கோமதி அம்மா பொய் சொல்றாள்னு நெனைக்கிறேன்.''

''நோ... நோ இந்த மாதிரி விஷயத்ல எல்லாம் கோமதி அம்மா வெளையாடமாட்டா! இவ்வளவு பெரிய விஷயத்ல வெளையாடினா அவளோட தொழில் கெட்டுப்போயிடும்! நாளைக்கு ஒரு பயல் வர மாட்டான்— அவ வீட்டுக்கு!''

''அப்படின்னா ஆட்டோவில் ஏறி வீட்டுக்குப் போறேன்னு கிளம்பிப் போனவ எங்கே போனா சொல்லு!''

''அதை நீதான் சொல்லணும்!''

''என்ன காமேஸ்வரா, இப்படி என் தலையில கல்லைப் போடறே...''

''கோமதி அம்மா உன்னைத்தான் கேப்பா.''

''கேப்பா... கேப்பா!''

''உன் பொறுப்புலேதானே அனுப்பினா; நீதான் மாலாவை பொறுப்பா வீடு வரைக்கும் கொண்டு போய் சேர்க்கணும்...'' எனக்கு அப்போதுதான் ஞாபகம் வந்தது. பெங்களூர் கிளம்பியபோது மாலாவை திரும்பி வரும்போது பத்திரமாக வீட்டில் கொண்டு வந்து விடும்படி கோமதி அம்மாள் திருப்பித் திருப்பிச் சொன்னது... இப்போது என்ன செய்வது? கிணறு வெட்ட, பூதம் கிளம்பிய கதையாக இருக்கிறதே...

''சரி; கோமதி இப்ப வந்து கேட்டா என்ன பதில் சொல்றது?''

''உண்மையைத்தான் சொல்லணும்...''

''உண்மையைச் சொல்லிட்டா கோமதி அம்மா பேசாமே இருந்திடுவாளா?''

''அதெப்படி பேசாமே இருப்பா? மாலா அவளோட சொத்து தியாகராஜா!''



''அந்த நாய் வீடு போய் சேராட்டா நான் என்ன பண்ண முடியும்?'' கோபத்துடன் கேட்டேன்.

''நீ சொல்ற உண்மையை கோமதி ஒத்துக்கிட்டாத் தானே...!''

''அப்படின்னா?''

''மாலாவை நீதான் எங்கேயோ கூட்டிட்டுப் போய் ரகசியமா வச்சிருக்கிறதா சொல்வா.''

''சொல்வா... சொல்வா!''

''அப்படித்தான் சொல்லப் போறா— உன் கண்ல விரலை விட்டு ஆட்டப் போறா— நல்லா!''

''ஆட்டுவா, ஆட்டுவா! அப்படியெல்லாம் அபாண்டமா ஏதாவது கன்னாபின்னான்னு பேசி என்னை ப்ளாக்மெயில் மாதிரி ஏதாவது பண்ணினான்னா போலீஸ்ல போய் கம்ப்ளெய்ண்ட் பண்ணிடுவேன்!''

''உனக்கு முந்தி கோமதி கம்ப்ளெய்ண்ட் பண்ணுவா போலீஸ்ல... அவ வீட்டுப் பெண்ணை நீ கூட்டிட்டுப் போனே, உன்கூடப் பெங்களூருக்குப் போன பொண்ணு வீடு திரும்பலை. அவ்வளவுதான் விஷயம். இந்த ஒண்ணை வச்சே ஆயிரம் போலீஸ் ஸ்டேஷன்ல கம்ப்ளெய்ண்ட் பண்ணலாம்— தெரிஞ்சுக்க.''

''ஆஃப்டரால் ஒரு பிராத்தல் ஹவுஸ் பொண்ணு!''

''போலீஸ்காரனுக்கு அதைப் பத்தி கவலை கிடையாது. அவனைப் பொறுத்த வரைக்கும் உன்கூட பெங்களூர் போன பொண்ணு வீட்டுக்கு வரலை.''

அவ்வளவுதான். எனக்கு உதறல் எடுக்க ஆரம்பித்து விட்டது.

''இப்ப கோமதி வருவாளா?''

''கண்டிப்பா வருவா— ரொம்ப சீரியஸ் மேட்டராச்சே! மூனு நாளும் எவ்வளவு பக்குவமா; யாருக்கும் எந்தச் சந்தேகமும் வந்திராதபடி அழகா பேசி அனுப்பியிருக்கேன் தெரியுமா... நீதான் பெங்களூரை விட்டு வரலையோன்னு நெனைச்சா இப்படி ஒரு பதிலைவந்து சொல்றியே— தியாகராஜா இப்பப் பார்— உன்னால எனக்கும் கெட்ட பெயர்...!நான்தான் என்கிட்டே வந்து நீ புலம்பினியேன்னு கூட்டிட்டுப் போய் அறிமுகம் செஞ்சு வச்சேன். நானும்கூட இனிமே அவ வீட்டுப் படியேற முடியாது...! கொஞ்சம்கூடப் பொறுப்பில்லாமே இப்படி கோட்டை விட்டுட்டு வந்து நிக்கறே?''

''கோமதி கண்ல படாமே தப்பிக்கறதுக்கு மறுபடியும் லீவ் போட்டுட்டு ஓடிடட்டுமா?''

நான் இப்படிக் கேட்டதும் காமேஸ்வரனுக்குப் பயங்கர கோபம் வந்து விட்டது!

''என் எரிச்சலைக் கிளப்பாதே! நீபாட்டுக்கு லீவ் போட்டுட்டு வீட்ல போய் உட்கார்ந்துப்பே— நான் இங்கே உக்காந்துக்கிட்டு உனக்காக பதில் சொல்லிட்டு இருப்பேன்! எனக்குத் தெரியாது தியாகராஜா— நீ ஆபீஸ் வராம வீட்லே இருந்தே— கோமதி அம்மா வந்து கேக்கறப்ப உன் வீட்டு அட்ரஸைக் குடுத்து விட்டுடுவேன்... அவ்வளவுதான்!'' நான் திடுக்கிட்டுப் போய் பார்த்தேன். என்னை லட்சியமே பண்ணாமல் காமேஸ்வரன் அவனுடைய இடத்தில் போய் உட்கார்ந்து விட்டான். நானும் வேறு வழி இல்லாமல் என்னுடைய இடத்தில் போய் அமர்ந்தேன்.

என்ன இது தேவை இல்லாத சோதனை; அதுவும் நல்ல புத்தி வந்த பிறகு?! எவன் எவனோ என்னென்ன தில்லுமுல்லுகள் எல்லாம் பண்ணிவிட்டு நெஞ்சை



நிமிர்த்திக் கொண்டு திரிகிறான். நல்லவனான எனக்குப் போய் இப்படியொரு சோதனை...! கடவுளே; என்னை எப்படியாவது இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றி விடு. நிஜமாகவே நான் திருந்தி விட்டேன்! திருந்திய பிறகு வீணாக என்னைத் தண்டித்து விடாதே! அது மறுபடியும் என்னைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விடும்! தயவு செய்து என்னை விட்டுவிடு. எப்படியாவது அந்த மாலா சனியனை கோமதி அம்மாளிடம் கொண்டு போய் சேர்த்துவிடு...

ஒவ்வொரு நிமிஷமும் அடுப்பின் மேல் இருப்பது போல உட்கார்ந்திருந்தேன். என் பார்வை வெளிவாசலிலேயே இருந்தது கோமதி அம்மா வந்து விடுவாளோ வந்துவிடுவாளோ என்று மனம் ஒவ்வொரு வினாடியும் திக்திக்கென்று அடித்துக் கொண்டே இருந்தது. என் மார்புத் துடிப்பை சட்டென்று நிறுத்துவது போல பகல் ஒரு மணி அளவில் கோமதி அம்மா வங்கிக்குள் நுழைந்தாள். எனக்கு உடம்பு பூராவும் வியர்த்துக் கொட்டியது. கோமதி அம்மா நேராக காமேஸ்வரனிடம் போனாள். காமேஸ்வரன் எழுந்து என்னிடம் வந்தான். வெளியில் வரச்சொல்லிக் கூப்பிட்டான். எல்லோரும் எங்களையே பார்த்தார்கள்— ரஞ்சனி உட்பட...

என்னை பயமும் வெட்கமும் வேதனையும் பிடுங்கித் தின்றன. தலையைக் குனிந்தவாறு எழுந்து போனேன். வெளியில் போனதும் மேலும் மிரண்டு போனேன். கோமதிக்கு துணையாக வந்திருந்த இரண்டு ஆண்கள் வெளியில் காத்திருந்தார்கள். அவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தது—குண்டர்கள் என்று... எனக்கு இது தேவை தானா?!

கோமதி அம்மாவின் எதிரில் போய் பலி ஆடு மாதிரி நின்றேன். என்னால் வாய் திறந்து சொல்லவே முடிய

வில்லை. காமேஸ்வரன்தான் எனக்குப் பதில
விஷயத்தை அந்த அம்மாளிடம் சொன்னா
அவ்வளவுதான்; அடுத்த நிமிஷமே அவளின் கண்க
ரத்தமாகச் சிவந்து விட்டன.

''இவரை வீட்டுக்குக் கூட்டிட்டு வாங்க...''

என்று அந்தக் குண்டர்களுக்கு உத்தரவிட்டு விட்
கோமதி அம்மா கிளம்பிப் போய்விட்டாள். நா
காமேஸ்வரனைப் பார்த்தேன்.

''போ; போய் உண்மையா நடந்ததைச் சொல்லு
மற்றதைப் பிறகு பார்ப்போம்'' என்றான்.

''துணைக்கு நீயும் வாயேன்!''

''நீ போ முதல்ல... நான் அப்புறமா வரேன்...''

என் மனைவிக்குத் திடீரென்று உடம்புக்கு ச
இல்லாமல் போய்விட்டதென்று பொய் சொல்லிவிட்
அந்தக் குண்டர்களுக்கு நடுவில் ஆட்டோவில் ஏ
உட்கார்ந்து கொண்டேன்.

''உன் பேரென்ன சார்?''

சந்தர்ப்பம் தெரியாமல் ஒரு குண்டன் என்னை
பார்த்துக் கேட்டான். படுபாவி! என் பெயர் என்
வென்று கேட்கின்ற நேரமாடா இது? என் பெய
இங்கு கெட்டு நாசமாகிக் கொண்டிருக்கிறது—பெயரை
கேட்கிறான் பெயரை; ராஸ்கல்!

''அந்தப் பொண்ணு மாலா நெஜமாவே வீடு வந்
சேரலையா?'' தைரியத்தை வரவழைத்துக் கொண்
கேட்டேன்.

''வந்திருந்தா உன்னை ஏன் சார் தேடி வர்ரோம்

''தப்புப் பண்ணிட்டே சார்; அதை நீ விட்
கொண்டாந்து விட்டுட்டு அப்பால போயிருக்கணும்...



''நானென்ன கண்டேனாப்பா— இப்படி அவ
டிமிக்கி கொடுப்பாள்னு...! எல்லாம் என் நேரம்...''

நான் என் கண்களைத் துடைத்துக் கொண்டேன். ஆட்டோ கோமதி அம்மா வீட்டின் முன்னால் போய் நின்றது. முன்பெல்லாம் அமைச்சர் போல நிமிர் நடை நடந்து அலட்சியமாக நான் நுழைந்த வீடு! இன்று கைதி மாதிரி நுழைகிறேன்... எல்லாம் கால வித்தியாசம்! வித்தியாசமான காலத்தை வாழ்க்கையில் தொடங்கி வைக்கிற ராஜபாணியில் பெங்களூர் போன திமிருக்குக் கிடைத்திருக்கின்ற தண்டனை இது. வேறென்ன?

மனைவியே மனிதனின் மாணிக்கம் என்ற ஒப்புத லோடு புலனடக்கத்துடன் கட்டுப்பாட்டுடன் வாழ்ந் திருக்க வேண்டும். நான் கட்டுப்பாடு இழந்தேன். அதற்கு அனுபவிக்கிறேன். நன்றாக அனுபவியென்று என்னையே திட்டிக்கொண்டே கோமதி அம்மாவின் வீட்டிற்குள் சென்றேன்...

நிஜமாகச் சொல்கிறேன்— கோமதி அம்மாவின் உருவத்தில் ஒரு சிறுத்தையைத்தான் நான் பார்த்தேன். அதுவும் சினம் கொண்ட சிறுத்தை!

சிறுத்தை என்னைப் பார்த்ததுமே உறுமவில்லை. கடித்துக் குதறுவது போல பாயவும் இல்லை. மௌன மாக ஒரு பார்வை பார்த்தது! கோபத்தில் சிறுத்தை வேகமாக மூச்சு விட்டது! ரொம்ப நேரத்திற்குப் பேசாமலே இருந்தது. அந்தக் கடினமான மௌனம் பாய்வதற்கான பதுங்கல் போல் இருந்தது! பின் சிறுத்தை மெல்லிய குரலில் உறுமியது!

''எங்கே அவளை?''

''அதான் காமேஸ்வரன்... சொன்னானே மேடம்...'' என்று ஈனஸ்வரத்தில் பதில் சொன்னேன்.

''அதை நான் நம்பலை.''

நம்பலைன்னா போடியென்று என் உள் மனசு சொன்னது.

"இல்லை மேடம்— சத்தியமா அதான் மேடம் உண்மை..."

"நீதான் அவளை எங்கேயோ வீடு பாத்துக் கொடுத்து ரகசியமா வச்சிருக்கே..."

"அய்யய்யோ— அப்படியெல்லாம் கிடையவே கிடையாது மேடம்— அந்த மாதிரி பண்றதுக்கெல்லாம் எனக்குத் தைரியம் கிடையாது!"

"பெங்களூர் கூட்டிட்டுப் போறதுக்கு மட்டும் தைரியம் வரும் போலிருக்கு!"

நான் பேசாமல் இருந்தேன்.

"அந்தக் கழுதை உன்னைக் கல்யாணம் செய்துக்க சொல்லிக் கேட்டாளா?"

கோமதி அம்மா இப்படிக் கேட்டதும் எனக்கு பயத்தையும் மீறிய ஆச்சர்யம் வந்துவிட்டது. பெங்களூர் ஹோட்டல் அறைக்குள் மாலா என்னிடம் கேட்டது மந்தைவெளியில் இருக்கும் கோமதி அம்மா வுக்கு எப்படித் தெரிந்தது...

"பதில் சொல்லு— கேட்டாளா?"— சிறுத்தை கொஞ்சம் பலமாக உறுமியது.

"கேட்டா மேடம்... ஆனா, இன்னொருத்தியையும் கல்யாணம் பண்ணிக் குடித்தனம் பண்றதுக்கான வசதி எனக்குக் கிடையாது, மேடம். மாலாவை பெங்களூர் கூட்டிட்டுப் போறதுக்கே கடன் வாங்கித்தான மேடம் உங்களுக்கே நான் பணம் தந்தேன்..."

அப்போது காமேஸ்வரனும் வந்துவிட்டான். எனக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. கோமதி அம்மா அவனை லட்சியமே பண்ணவில்லை.



"அப்படின்னா, நீ மறுபடியும் கடன் வாங்கவேண்டி யிருக்கும் தியாகராஜன்!"— கோமதி அம்மா சொன்னாள்.

"எதுக்கு மேடம்?" நான் புரியாமல் கேட்டேன்.

"நீ பெங்களூருக்குக் கூட்டிட்டு போனியே— அந்த நாய் இன்னும் நாற்பத்தெட்டு மணி நேரத்தல என் முன்னாடி வந்து நிக்கணும்! அப்படி வந்து நிக்கலை— அவளுக்கு விலையா நீ உன் தலையை அடகு வைத்தாவது இருபத்தைந்தாயிரம் ரூபாய் வாங்கிட்டு வந்து என் கையில தரணும்... தரலை— நடக்கறது வேற...!" என் தலையில் இடி விழுந்தாற் போலிருந்தது. உட்கார்ந்திருந்த கோமதி எழுந்துவேறு நின்றாள்! என்னை பயங்கரமாக முறைத்துப் பார்த் தாள். பின் உள்ளே போய் விட்டாள்.

"அம்மா சொன்னது காதுல விழுந்ததா சாரு? போ—போய் அந்தப் பொண்ணைக் கூட்டியா. இல்லேன்னா பணம் கொண்டாந்து தந்திடு..." கோமதி சொன்னதையே ஒரு குண்டன் மீண்டும் சொல்லிப் பயமுறுத்தி என்னை வழி அனுப்பினான்.

காமேஸ்வரனும் நானும் வெளியில் வந்தோம். வானம் எப்போதும் போல இருந்தது. ஜனங்கள் என்றைக்கும் போல தெருவில் நடமாடிக் கொண்டிருந் தார்கள். யாருக்கும் எனக்கு ஏற்பட்டிருக்கின்ற இக் கட்டான நிலை தெரியவே இல்லை. நினைக்க நினைக்க வயிற்றெரிச்சலாக இருந்தது. இருபத்தி ஐயாயிரம் ரூபாய் எங்கே இருந்து கொடுப்பேன்? சொல்லக்கூடிய காரியமாக இருந்தாலும் மனைவியின் நகைகளை அடமானம் வைத்தாவது வாங்கலாம். இப்போது அதுவும் முடியாது, என்னதான் பண்ணுவேன்?

காமேஸ்வரனின் காலில் விழுந்து விட்டேன். மாலா திரும்பி வரப் போவதே கிடையாது; ஆகையால் எப்படியும் நான் பணத்தைக் கொடுத்தே ஆக வேண்டு மென்று தான் அவனும் சொன்னான். வேறு வழியே கிடையாது என்றான். கோமதிக்கு நிறைய பிள்ளைகள் உண்டு. காவல் துறை அவளிடம் ஆயிரக்கணக்கில் மாமூல் வாங்குகிறது. அரசியல்வாதிகள் நிறையபேர் அவளின் நண்பர்கள்; வாடிக்கையாளர்கள்.

கோமதி கேட்ட பணத்தைக் கொடுக்காவிட்டால் என்னுடைய வாழ்க்கையையே நாசம் பண்ணி விடுவாள் என்று காமேஸ்வரன் பயம் காட்டினான். கொள்ளை வட்டிக்குக் கடன் தரும் ஐந்து பேர்களிடம் என்னை அழைத்துப் போய் பணம் வாங்கிக் கொடுத் தான். ஏற்கனவே அந்தக் கடன்காரியுடன் பெங்களூர் போக வாங்கிய கடன் வேறு இருக்கிறது...! வாங்குகிற சம்பளத்தில் முக்கால்வாசி வட்டி கட்டவே சரியாகப் போய்விடும்... பின் மாதா மாதம் வீட்டுச் செலவுக்கு என்ன பண்ணுவேன்; கடனை எப்போது அடைப்பேன்?

'அதையெல்லாம் அப்புறம் பார்க்கலாம்; முதலில் கோமதி அம்மாவின் வாயை அடைத்துவிட்டு வரலாம்—வா' என்று சொல்லி காமேஸ்வரன் மந்தைவெளிக்கு அழைத்துப் போனான். ஒரு தடவைக்கு இரண்டு தடவை எண்ணிப் பார்த்து வாங்கிக் கொண்டாள். இனிமேல் இந்தப் பக்கம் வரவே வராதே என்றாள். இந்த ஜென்மத்தில் வரமாட்டேன் என்று ஒரு கத்து கத்திவிட்டு வேகமாக வெளியில் வந்துவிட்டேன். நினைக்க நினைக்க கோபமாக வந்தது. அநியாயமாக இருபத்தி ஐயாயிரம் ரூபாய் இழந்திருக்கிறேன். அநியாயம் அக்ரமம்.

எவளோ எங்கேயோ ஓடிப் போனதுக்கு தண்டம் நான் அழுதிருக்கிறேன். என்ன நியாயம் இது? என்ன



அநீதி இது? இந்த அநீதியை சும்மாவிடக்கூடாது. பழிக்குப் பழி வாங்க வேண்டும். காவல் துறைக்கு; நீதித் துறைக்கு; அமைச்சர்களுக்கு மந்தைவெளியில் கோமதி அம்மா பெண்களை வைத்து தவறான தொழில் நடத்துவதைப் பற்றிப் புகார் எழுதிப் போடலாம் என்று நினைத்தேன்.

"கோமதி அம்மாளுக்குத் தண்டனை கிடைக்குமோ கிடைக்காதோ—முதல்ல உனக்குத் தண்டனை கிடைச் சிடும். அவளோட குண்டர்கள் உனக்கு ஒரு கையோ காலோ இல்லாமே பண்ணி விட்டுடுவானுங்க! தலைக்கு வந்தது தலைப்பாவோட போச்சின்னு நெனைச்சிட்டு பேசாமே உன் வழியைப் பாத்து நட..." என்று காமேஸ்வரன் ஒரு மிரட்டல் மிரட்டி னான். ஆகையால் வாயை மூடிக் கொண்டு பேசாமல் நடந்தேன். ஆனாலும்— காவல்துறைக்கு ஒரு மொட்டைக் கடிதமாவது எழுதிப் போடலாமா என்ற எண்ணம் மனதிற்குள் ஓடிக் கொண்டுதான் இருந்தது. ஆனாலும் அந்த மொட்டைக் கடிதத்தை வெறுமே எழுதி பாக்கெட்டிலேயே வைத்துக் கொண்டேனே தவிர, போஸ்ட் பண்ணவில்லை. பயம்! அதுவும் இல்லாமல் எதற்கு வம்பு?

காமேஸ்வரன் சொன்ன மாதிரி தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போனது மாதிரிதான் இருந்து விட்டுப் போகட்டுமே... புத்தி கெட்டுப்போய் கண்ட வளுடன் பெங்களூர் போனதற்குத் தண்டனை. இனி யார் இவர்கள் மூஞ்சியில் முழிக்கப் போவது? முழித்தால் தானே வம்பு!? முழிக்காதவனை இவர்களால் என்ன செய்ய முடியும்? கடவுளால்கூட எதுவும் செய்ய முடியாது!

எனக்காக நான்கு இடங்கள் ஏறி இறங்கி கடன் வாங்கித் தந்து என்னைப் பெரிய ஆபத்தில் இருந்து

காப்பாற்றிக் கரை சேர்த்த காமேஸ்வரனுக்கு நன்றி சொல்லிவிட்டு வாழ்க்கையில் இதற்கு முன் அனுபவித்திராத களைப்புடன் வீட்டை நோக்கி நடந்தேன்— பஸ்ஸில் போவதற்குக்கூட காசு இல்லாமல்!

# 12

எங்கள் தெரு முனை திரும்பியதுமே என் வீட்டு வாசலில் என்னுடைய மனைவி ஆனந்தி வழிமேல் விழி வைத்து நின்று கொண்டிருந்தது கண்கொள்ளக் காட்சியாகத் தெரிந்தது. ஆஹா— எப்பேர்ப்பட்ட மனைவி! களைப்பையும் மீறி வேகமாக நடந்தேன். வீட்டுப்படி ஏறியதுமே ஆனந்தி என்னை முறைத்துப் பார்த்துக் கேட்டாள்—

''எனக்கு இப்ப ஒரு உண்மை தெரிஞ்சாகணும்— பெங்களூருக்கு நீங்க நெஜமா யார் கூடப் போனீங்க?''

என்ன இது; கேள்வியே ஒரு மாதிரி இருக்கிறது...! யாராவது வந்து ஏதாவது கோள் மூட்டிவிட்டுப் போயிருக்கிறார்களா என்ன?

''என்ன திடீர்னு— இத்தனை நாள் கழிச்சி கேக்குறே...?''

''சில விஷயமெல்லாம் திடீர்னுதானே தெரிந்தது!''

எனக்குத் திக்கென்றது. ஆனந்தியின் முகத்தைப் பார்த்தேன். கேள்விப்பட்ட ஏதோ ஒன்றை மறைத்துக் கொண்டிருக்கிற சாகசம் அவளுடைய கண்களில் தெரிந்தது. என்னடா இது; மறுபடியும் ஒரு பூதம் கிளம்புகிறதா?

''அப்படி என்ன விஷயம் உனக்குத் திடீர்னு தெரிஞ்சி போச்சி?'' ஆனந்தி வேகமாக உள்ளே போய் ஏதோ ஒரு காகிதத்தை எடுத்துக் கொண்டு வந்தாள்.



கோபத்துடன் அதை என்னுடைய முகத்திற்கு நேரே நீட்டினாள். வாங்கிப் பார்த்தேன். அது எங்கள் பேங்க் மேனேஜருக்கு எழுதப்பட்டிருந்த ஒரு மொட்டைக் கடிதத்தின் ஜெராக்ஸ் காப்பி...! எழுதப்படாமல் டைப் செய்யப்பட்டிருந்தது— மிக புத்திசாலித்தனமாய்... அவசரமாக கடிதத்தைப் படித்தேன். மனைவியுடன் சுற்றுலா போவதாக எழுதி பயணச் செலவுக்காக வங்கி மேலாளருக்கு எழுதிய விண்ணப்பத்தில் நான் பொய் சொல்லி இருப்பதாகவும்; உண்மையில் நான் மனைவியை அழைத்துச் செல்லவில்லையென்றும்; ஒரு விலைமகளை அழைத்துப் போய் வங்கியை ஏமாற்றி மோசடி செய்திருப்பதாகவும் அக்கடிதத்தில் ரகசிய தகவல் கொடுக்கப்பட்டிருந்தது.

படித்துவிட்டு நிமிர்ந்தேன். ஆனந்தி என் முகத்தையே பார்த்தபடி காத்திருந்தாள்.

''இந்த லெட்டரை யார் குடுத்தா?''

''உங்க பேங்க் மேனேஜரும் இன்னும் ரெண்டு மூணு ஆபிசர்களும் வந்திருந்தாங்க... அவங்கதான் குடுத்தாங்க...''

''குடுத்திட்டு எதுவும் கேட்டாங்களா உன்னை?''

''நான் உங்ககூட பெங்களூர் போனேனா இல்லையான்னு கேட்டாங்க.''

''நீ என்ன சொன்னே?''

''நெஜத்தைச் சொன்னேன்.''

வந்த வெறியில் ஓங்கி அவளின் கன்னத்தில் அறை விட்டேன்!

''என்னைக் கேக்காமே எதுக்குடி அப்படிச் சொன்னே— பாவி! கெடுத்திட்டியேடி காரியத்தை! என் பிழைப்பையே நாசம் பண்ணிட்டியே... வெறும் வாயால

மட்டும் சொன்னியா: இல்லே— எதிலாவது கையெழுத்துப் போட்டுக் குடுத்தியா...?''

கொடுத்த அறையில் ஆனந்தியின் கண்களில் கண்ணீர் மின்னியது. நடுங்கியபடி என்னைப் பார்த்தாள்.

''சொல்லு வாயைத் திறந்து... கையெழுத்துப் போட்டுக் குடுத்தியா...?''

''கையெழுத்துப் போட்டேன்!''

''போச்சு போ— உன்னையும் என்னையும் இனிமே எவனாலேயும் காப்பாத்த முடியாது...''

மொட்டைக் கடிதத்தை அவளுடைய முகத்தில் வீசி எறிந்துவிட்டு விடுவிடுவென்று அறைக்குள் போய்க் கதவை பலமாகச் சாத்திப் பூட்டிக் கொண்டேன். நான் ஏதோ செய்து கொள்ளப் போகிறேன் என்ற பயத்தில் ஆனந்தி பலமாகக் கதவைத் தட்டிக் கொண்டிருந்தாள். தட்டட்டும்! நான் திறப்பதாக இல்லை. நிஜமாகவே திறப்பதாக இல்லை. திறந்து என்ன செய்ய? நேராக பேங்கிற்கா போக? இனிமே போக முடியுமா அங்கே; மானம் போகும், போனால்! வேலை போகுமோ போகாதோ— மானம் போவது நிச்சயம்! அவ்வளவு பயல்களும் இகழ்ச்சியாகப் பார்ப்பார்கள்— என்னமோ அவன்களெல்லாம் பெரிய யோக்கியன்கள் மாதிரி! போச்சு... எல்லாமே போச்சு.

இப்போதுதான் மந்தைவெளியில் ஒரு கருமம் செய்துவிட்டு வந்திருக்கிறேன். உடனே மறுபடியும் ஒரு கருமம்! அது இருபத்தி ஐயாயிரம் ருபாய் தண்டம் அழுத கருமம்! இது வேலைக்கு உலை வைக்கக்கூடிய கருமம்! இரண்டு கருமமும் சொல்லி வைத்தாற்போல நடக்கின்றதே... அவ்வளவு தூரத்திற்கா என்னுடைய கிரக நிலை மோசமாக இருக்கிறது?!



என்னால் தாங்கவே முடியவில்லை. என்ன செய்வதென்றும் புரியவில்லை. வேலை போய்விட்டால் என் கதி என்னவாகும் என்று யோசித்துப் பார்த்தேன். நினைக்கவே நடுங்கியது. அழுகை வெடித்துக்கொண்டு வந்தது. தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கண்ணீர் வடித்தேன். என் வாழ்க்கையின் எல்லா சந்தோஷங்களும் முடிவுக்கு வந்துவிட்டன. நிச்சயமாக எனக்கு இனி எதிர்காலமே கிடையாது. மனைவி மக்களுடன் பிச்சைதான் எடுக்க வேண்டும் நான். எவனோ ஒரு படுபாவி என் வாழ்வை நாசம் பண்ணிவிட்டான். எப்படியோ விஷயத்தைத் தெரிந்து கொண்டு குடியைக் கெடுத்து விட்டான். யார் அவன்? ஈவு இரக்கம் இல்லாத அந்தச் சண்டாளன் யார்?

எவ்வளவு நேரம் யோசித்தும் யார் என்பதை என்னால் ஊகிக்கவே முடியவில்லை. முகம் தெரியாத அந்தப் பகைவனிடம் நான் தோற்றுப் போய்விட்டேன். வெள்ளம் மேல் ஓடிவிட்டது. இனி அழுது என்ன பயன்? ஆனந்தியின் கன்னத்தில் அறைந்துதான் என்ன பயன்?! நடந்தது நடந்ததுதான்! நடக்கப் போவது நடக்கப் போவதுதான்! எதையும் யாரும் எதுவும் பண்ண முடியாது. கண்களைத் துடைத்தேன். எழுந்து போய் கதவைத் திறந்தேன். ஆனந்தி எனக்கு மேல் அழுது முகமெல்லாம் வீங்கிப் போயிருந்தாள். நான் கதவைத் திறந்ததும் ஓடி வந்து கட்டிப் பிடித்துக் கொண்டாள். நானும் ஆறுதலுடன் அவளை அணைத்துக் கொண்டேன். எங்களுக்குள் பேச்சே இல்லை. எப்படிப் பேச்சு வரும்? முதலுக்கே மோசம் என்ற நிலைமை வந்து விட்டால் எல்லாருடைய நிலையும் இப்படித்தான் ஆகிவிடும் போலிருக்கிறது! எனக்கு வேலையே போய்விடும் என்றதும் ஆனந்தி அரண்டு போய்விட்டாள். வேலையும் பணமும்தானே முக்கியம்? அதுவே போய்விட்டால்?

புத்தி இல்லாமல் மானேஜரிடம் உண்மையைச் சொல்லிவிட்டதற்காக ஆனந்தி ரொம்ப வருத்தப் பட்டாள். இனி வருத்தப்பட்டு என்ன செய்ய? இந்த வருத்தத்தில் நான் பெங்களூருக்கு யாருடன் போனேன் என்ற கேள்வியைக்கூட ஆனந்தி என்னிடம் கேட்க வில்லை! வெள்ளம் அவளுடைய தலைக்கு மேல் தானே போய்விடும் போலிருக்கிறது!...

இரவெல்லாம் தூங்காமல் யோசித்தேன். விடிந்தும் விடியாத நேரத்திலேயே அந்த மொட்டைக் கடிதத்தின் ஜெராக்ஸ் காப்பியை எடுத்துக் கொண்டு காமேஸ்வர னைப் பார்க்கப் போனேன். விஷயத்தைச்சொன்னேன். சொல்லும் போதே எனக்குக் கண்கள் கலங்கின. காமேஸ்வரன் எனக்கு ஆறுதல் சொன்னான். வேலை யெல்லாம் போகாது. யூனியன் எதற்கு இருக்கிறதென்று தைரியம் கூறினான். திடீரென்று அவனுடைய முகம் பிரகாசமடைந்தது. விரல்களால் சொடுக்குப் போட் டான். என்னை அருகில் கூப்பிட்டு என் காதுக்குள் விரிவாக ஒரு திட்டத்தை விளக்கினான். அதைக் கேட்டதும் என் மனம் உற்சாகத்தால் கும்மாளமிட்டது. உடனே எங்கள் பேங்க் மானேஜர் வீட்டுக்கு ஓடி னேன். ஹாலில் அவர் மட்டும் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தார்.

''குட்மார்னிங் சார்.''

நிமிர்ந்து பார்த்தார்.

''வீட்ல வேற யாரும் இல்லையா சார்?''

''எல்லாரும் ஒரு கல்யாணத்துக்குப் போயிருக் காங்க. என்ன விஷயம்?''

''முக்கியமான விஷயம் ஒண்ணு பேச வந்திருக் கேன் சார்.''



''எதுவா இருந்தாலும் பேங்க்ல வந்துதான் பேசணும் தியாகராஜன். இப்படி வீட்டுக்கெல்லாம் வரக் கூடாது.''

''நீங்க மட்டும் என் வீட்டுக்கு வந்தீங்களே...!''

மானேஜர் இதை எதிர்பார்க்கவில்லை. அவருடைய முகபாவனை மாறியது.

''பேங்க்கை ஏமாத்தினவனோட வீட்டுக்கு ஒரு மேனேஜர் என்கிற லெவல்ல விசாரணை நடத்தறதுக்கு —உண்மையைத் தெரிஞ்சுக்கறதுக்கு நான் வந்துதான் தீரணும்...''

''இப்ப என்னை என்ன பண்றதா உத்தேசம் மேனேஜர் சார்?''

''வேலையில் இருந்து உங்களை டெர்மினேட் பண்ணச் சிபாரிசு பண்றதா இருக்கேன்...''

''இன்னும் சிபாரிசு பண்ணலை?''

''இன்னும் பண்ணலை.''

''சிபாரிசு பண்ணிடாதீங்க!''

''நோ— என் முடிவை நான் மாத்தறதா இல்லை!''

''நல்லா யோசனை பண்ணி சொல்லுங்க! நீங்க உங்க முடிவை மாத்திக்கலைன்னா, நான் என் முடிவை மாத்திக்க வேண்டியிருக்கும்!''

''என்னமோ மிரட்டற மாதிரி பேசறியே...''

''மிரட்டல்தான் மேனேஜர், மிரட்டல்தான்... நீங்க உங்க முடிவை மாத்திக்கலைன்னா— பின்னாடி நீங்க தான் வருத்தப்படுவீங்க!''

''என்னப்பா சொல்றே; குடிச்சிட்டு வந்திருக்கியா ஏதையாவது?''

''நான் என் குடிச்சிட்டு வரேன்... உன் ஆளு ரஞ்சனியைப் பாத்திட்டு வரேன்?'' ரஞ்சனி பெயரைச் சொன்னேனோ இல்லையோ; மேனேஜர் எழுந்து நின்றுவிட்டார்.

''சத்தமா பேசாதே. கொஞ்சம் மெதுவா பேசு. இங்கே எதுக்காக வந்தே?'' மிகவும் தணிந்த—பயந்த குரலில் கேட்டார்.

''என் மேல் இருக்கிற பெங்களூர் விசாரணையை உடனே நிறுத்தணும்!''

''நிறுத்திடறேன்.''

''எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என் மேல...''

''எடுக்க மாட்டேன்!''

''என் மனைவிகிட்ட வாங்கிட்டுப்போன வாக்கு மூலத்தைக் கிழிச்சிப் போட்டுடணும்.''

''இப்பவே கிழிச்சிப் போட்டுடறேன்!''

''என் மனைவியோட தான் பெங்களூர் போனேன்னு என் மனைவிகிட்டே இருந்து புதுசா ஒரு வாக்குமூலம் வாங்கித் தரேன்! அதை மேலிடத்துக்கு அனுப்பிடு.''

''உன் இஷ்டப்படியே அனுப்பிடறேன்!''

''பேச்சு மாறிடக்கூடாது.''

''சத்தியமா மாற மாட்டேன்.''

''மாறினே—அவ்வளவுதான்; உன் ரஞ்சனி விஷயம் வெட்ட வெளிச்சமாகும்! உன் மானம் போக வைப்பேன்.''

''தயவு பண்ணி அப்படிப் பண்ணிடாதே. நான் உன் வழிக்கே வரமாட்டேன்'' நான் சரணாகதி ஆகியிருக்க வேண்டிய விஷயம் காமேஸ்வரன் சொல்லித்



தந்த திட்டத்தால் மேனேஜர் சரணாகதியாகி விட்டார். வல்லவனுக்கும் வல்லவன் வையத்தில் இருப்பான் என்பது உண்மைதான் போலிருக்கிறது!

ஆனால் நான் காமேஸ்வரன் சொல்லித் தந்த திட்டத்தோடு நின்றுவிடவில்லை. அதற்கும் மேல் ஒரு படி போய்விட்டேன். பெங்களூர் சமாச்சாரத்தால் எதிர்பாராமலும் அநியாயமாகவும் எனக்கு ஏற்பட்டிருந்த முப்பதாயிரம் ரூபாய் கடனையும் பேங்க் மேனேஜரிடம் இருந்து காமேஸ்வரனுக்குக்கூடத் தெரியாமல் கறந்துவிட்டேன்! பணம் தராவிட்டால் ரஞ்சனி விஷயம் மேலிடத்துக்குத் தெரியப்படுத்தப் படும் என்றேன். முப்பதாயிரம் ரூபாய் மேனேஜருக்குப் பெரிய தொகை இல்லை போலிருக்கிறது. உடனே எண்ணிக் கொடுத்துவிட்டார்!

''இத்தோடு என்னை நீ விட்டுடணும் தியாகராஜன். திருப்பித் திருப்பி வந்து என்னை ப்ளாக்மெயில் பண்ணி பணம் கேட்கக் கூடாது— நானும் பிள்ளைக்குட்டிக் காரன்! எனக்கும் கஷ்டங்கள் இருக்கு'' என்றார்.

''இல்லை மேனேஜர்; இல்லை! ப்ளாக்மெயில் என்னோட தொழில் இல்லை! நீங்க உங்க முதுகில் ஆயிரம் வைத்துக்கொண்டு என் மேல் நடவடிக்கை எடுக்கச் செய்தீர்களே— அதற்குப் பழிக்குப் பழி வாங்கத்தான் இப்படி நான் நடந்துகொள்ள வேண்டியதாகி விட்டது. என்னுடைய அழுக்கின் பக்கத்தில் வராத வரையில் உங்கள் அழுக்கைப் பற்றி எனக்குக் கவலை இல்லை! தப்பித் தவறி நீங்கள் என்னுடைய அழுக்கின் அருகில் வந்தீர்கள்— நானும் உங்களுடைய அழுக்கின் அருகில் வந்துவிடுவேன்!''

''சத்தியமாக வரமாட்டேன். போதுமா?''

''அப்படியானால் நானும் இனிமேல் வர மாட்டேன்.''

''தேங்க்ஸ்.''

''குட்-பை.''

இவ்வளவு எளிதாக என் வாழ்க்கையின் எரியும் பிரச்னை அணைந்து போய் விடுமென்று நான் எதிர் பார்க்கவில்லை. ஒரு சில நிமிடங்களில் அற்புதம் நடந்துவிட்டது. பண நெருக்கடி தீர்ந்தது. எதிர்காலம் பற்றிய பயமும் கலைந்தது. இனி வாழ்க்கையில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்ற நீதி உணர்வு தோன்றியது. பாலுணர்வு மோகத்தால் ஏற்பட்ட இன்னல்கள் தானே அத்தனையும்...? இனி அந்த மோகத்தில் மதிகெட்டு மனக்கட்டுப்பாட்டை விட்டுவிடக் கூடாதென்ற தீர்மானத்திற்கு வந்தேன். உணர்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று பெரியவர்கள் சும்மாவா சொன்னார்கள்?! பாவம் மாலா! எங்கேதான் போனாளோ; என்னதான் ஆனாளோ. அவளுக்கும் ஆசை—யாராவது நல்லவனாகப் பார்த்து கல்யாணம் செய்து வாழ்க்கையில் செட்டில் ஆக வேண்டும். அவளுடைய ஆசையும் நிறைவேறட்டும்! அவளும் பாவம் மனுஷிதானே...!

பேங்க் மேனேஜரிடம் வசூலித்த பணத்துடன் வீடு திரும்பினேன். ஆனால், பண விஷயத்தை ஆனந்தி யிடம் மூச்சுக்கூட விடவில்லை! மொத்த பணத்தையும் இரண்டு பேண்ட் பாக்கெட்களில் மறைத்து வைத்துக் கொண்டேன்.

வீட்டிற்குள் நுழைந்ததுமே ஆனந்தி கேட்டாள்— ''போன காரியம் என்னங்க ஆச்சு?''

அவளுடைய கண்களில் பயம் உறைந்திருந்தது. ஒரு நிமிஷம்தான்—உண்மையை அவளிடம் மறைத்து விட்டேன்.



''மேனேஜரோட கையைக் காலைப் பிடிச்சி ஒப்பாரி வச்சிட்டு வந்திருக்கேன்! என்ன பண்ணு வானோ? பெங்களூருக்கு என்கூடப் போகலைன்னு நீதான் எழுதிக்குடுத்துக் காரியத்தைக் கெடுத்திட்டியே! நீ மட்டும் அப்படிச்சொல்லாமே இருந்திருந்தா எவன் எத்தனை மொட்டைக் கடுதாசி எழுதினாலும் அசைக்க முடியாது என்னை! பார்ப்போம். எதுக்கும்—பெங்களூ ருக்கு நீதான் என்கூட வந்ததா எழுதி புதுசா ஒரு ஸ்டேட்மெண்ட்ல கையெழுத்துப் போட்டுத்தா— குடுத்து முயற்சி பண்ணிப்பார்ப்போம்...'' என்றேன்— முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு...!

ஆனந்தியும் அப்படியே எழுதி அழுது கொண்டே கொடுத்தாள்! அதை வாங்கிப் போய் மறுநாளே மேனேஜரிடம் கொடுத்து விட்டேன்.

அந்த வேலை முடிந்தது! இனி மேனேஜரிடம் வசூலித்த பணத்தைக் கொண்டுபோய் கடனை அடைக்கவேண்டும். போகும் வரையிலும் புத்தி ஒழுங்காகத்தான் இருந்தது. போன மறு நிமிஷம் எண்ணம் மாறிவிட்டது. கடன் பூராவும் அடைக்க வில்லை! பத்தாயிரம் ரூபாயை பாக்கெட்டிலேயே வைத்துக் கொண்டேன். மீதிக் கடனை சிறிது சிறிதாக அடைத்துக் கொள்ளலாம். இப்போது கொஞ்சம் தாராளமாக ஜாலியாகச் செலவழிக்கலாம்!

அதே மாதிரி ஆனந்தமாகச் செலவழித்தேன். ஆனால் மறந்துகூட அதில் ஆனந்திக்கு ஒரு பைசா செலவழிக்கவில்லை. செலவழித்தால் ஏது பணம் என்று கேட்பாளே...! மேனேஜரிடம் பணம் வசூலித்த தைத்தான் அவளிடம் நான் சொல்லவில்லையே... அதற்கும் மேலாக என் வேலைக்கு ஏற்பட்ட ஆபத்து நீங்கிவிட்டதையும் அவளிடம் வெளியிடவில்லையே... விசாரணை என்ற கத்தி இன்னும் என்னுடைய தலைக்கு

மேல் தொங்கிக் கொண்டிருப்பதாகவே பொய்யையும் அவளிடம் நீடித்துக் கொண்டிருந்தேன். அப்போது தான் அவளுக்கும் பயம் இருக்கும்! அந்த பயத்தில் வாயை மூடிக்கொண்டு கப்சிப்பென்று இருப்பாள். இல்லாவிட்டால் பெங்களூருக்கு யாருடன் நான் போனேன் என்ற பழைய குப்பையை கிண்டிக் கொண்டே இருப்பாள்...!

நாட்கள் உருண்டன. வங்கி என் மீது எந்த விசாரணையும் நடத்தவில்லை. என்னுடைய வேலைக்கும் ஆபத்து வரவில்லை. அடிப்படையில் மேனேஜர் நல்ல மனிதர்தான். சொன்ன சொல்லைக் காப்பாற்றிவிட்டார்! சீக்கிரமே, வேறு ஊருக்கு மாற்றலாகியும் போய் சேர்ந்து விட்டார். ரஞ்சனி எங்கள் கிளையிலேயேதான் இருந்தாள். என்னைப் பார்த்தாலே தலையைக் குனிந்து கொள்வாள். மேனேஜர் அவளிடம் நடந்த விஷயங்களையெல்லாம் சொல்லி இருப்பார் போலும்! ஆனால் நான் ரஞ்சனியைத் திரும்பியே பார்க்கவில்லை. அவளைப் பொருட்படுத்தவும் செய்யவில்லை. பாவம்—அவள் பாடு அவளுக்கு! நமக்கென்ன...சில நேரங்களில் சில மனிதர்கள்!

ஒரு சமயம் இதே ரஞ்சனிக்காக எவ்வளவு தூரம் நான் ஏங்கியிருக்கிறேன்... இப்போது அவளே வலிய வந்து என்னை காதலித்தால்கூட அவளை நான் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. வானிலை மாறுவது போல என் மனோ நிலை மாறிவிட்டது. கால வித்தியாசம் இல்லை இது. காலத்தின் இயல்பு இது! பாலுணர்வின் இயல்பும் இதுதான் என்பதும் எனக்குப் புரிந்து விட்டது. சில காலம் அது மழைக்காலப் புயல் மாதிரி வீசும். சில காலம் 'கப்சிப்'பென்று மயான நிசப்தமாய் அடங்கிக் கிடக்கும்!



அதனால்தானோ என்னமோ; இனி மந்தைவெளிப் பக்கம் தலைவைத்துக்கூடப் படுப்பதில்லை என்ற எனது வைராக்கியமும் மயான வைராக்கியமாகிப் போனது. ஆனால் மந்தைவெளி போகாமல் பெசன்ட் நகரில் அக்கம்மா வீட்டுப் பக்கம் போய் வந்தேன்! வேறு வழியில்லை எனக்கு. அவ்வப்போது நல்ல விலை உயர்ந்த ஹோட்டலில் சோளா பூரியும் செனாபடூராவும் தேவைப்பட்டது மாதிரி இரண்டெழுத்துப் பெண்களும் வேண்டியிருந்தார்கள்! ஆடவனைப் பொறுத்த வரையில் இதெல்லாம் காலத்தின் கட்டாயம்தான் என்று நினைக்கிறேன்!

இந்தனைக்கும் இப்போதெல்லாம் ஆனந்தி முன் போல் ரொம்ப மாறிவிட்டாள். ஆதர்ச மனைவியாக விளங்கினாள். என் கவனம் வேறு பக்கங்களில் போகக் கூடாது என்பதற்காக அவளை வித விதமாக அலங்கரித்துக் கொண்டாள்! கவர்ச்சியான உடைகள் அணிந்தாள். வியர்வை நெடி தெரியாமல் இருக்க நிறைய வாசனைத் திரவங்கள் வேறு உபயோகித்தாள்!

நானும் அவளின் இந்த மாற்றங்களையெல்லாம் ரசித்துக் கொண்டே 'இன்னும் என் மேல் விசாரணை நடந்து கொண்டுதான் இருக்கிறது; வேலை போகும் ஆபத்து இன்னும் நீங்கவில்லை' என்ற பொய்யையும் தொடர்ந்து பல மாதங்களுக்கு ஆனந்தியிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அதனால் அவளும் பயத்தில் பெங்களூர் சமாச்சாரம் பற்றி வாயைத் திறக்காமலேயே இருந்தாள். அதற்காகப் பொய்யை வருஷக் கணக்காகச் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா ஒரு மனுஷனால். அதனால் ஒரு நாள்; விசாரணை முடிந்து விட்டது; என் வேலைக்கு ஆபத்து வரவில்லையென்று அவளிடம் சொல்லிவிட்டேன். இதைச் சொன்னதும் ஆனந்தி மறு நிமிஷமே எதைப் பற்றி என்னிடம்

கேட்பாள் என்று நான் எதிர்பார்த்தேனோ அந்தக் கேள்வியை உடனே அவள் கேட்டாள்.

"இப்பவாவது உண்மையைச் சொல்லுங்க, பெங்களூருக்கு என்கூடப் போறதா பேங்க்ல பொய் சொல்லிட்டு எவளைக் கூட்டிட்டுப் போனீங்க?"

நான் எதிர்பார்த்த சமாச்சாரம். அதனால் என்னமோ சொல்லிச் சமாளித்தேன். திடீரென்று ஒரு நாள் நான் சிறிதும் எதிர்பாராத ஒரு விஷயம் ரொம்பச் சுருக்கமாக ஒரு மொட்டைக் கடிதம் வடிவத்தில் என்னை வந்து தாக்கியது. மாலா இப்போதும் மந்தைவெளி கோமதி அம்மா வீட்டில்தான் இருக்கிறாள். அவள் வீடு திரும்பாமல் எங்கோ ஓடிப்போய் விட்டாள் என்ற கதைகட்டி; என்னிடம் இருந்து பணம் பறிக்க கோமதியும், காமேஸ்வரனும் சேர்ந்து திட்டமிட்டு நாடகமாடி இருக்கிறார்கள் என்ற பயங்கர ரகசியம்தான் அந்த சமாச்சாரம்...!

▭▭

# ஒரு லட்சியக் குற்றம்

வாழ்க்கையில் மனிதர்களுக்கு ஏற்படுகிற பல விதமான சிக்கல்களை மனோதத்துவ முறையில் தீர்த்துக் கொள்ள நுட்பமான அணுகல்களை வழங்குவதில் டாக்டர் திலகராஜ் எவ்வளவு பிரசித்தம் ஆனவரோ, அதே அளவு கடும் போட்டிகளில் வெற்றி பெறுதல்; எந்தத் தொழிலையும் வளர்ச்சி பெற வைத்தல்; எந்த சந்தர்ப்பத்திலும் பின்பற்றும் தொலை நோக்குக் கொண்ட கச்சிதமான தீர்மானங்களை முடிவு செய்தல் போன்றவற்றிலும் நல்ல நிபுணராகப் புகழ் பெற்றவர். அந்த ஆலோசனைத் தொழிலில் ஒரு நாளைக்கு நான்கு மனிதர்களை சந்திப்பதற்கு மட்டுமே நேரம் ஒதுக்குகிற டாக்டர்.

திலகராஜ் ஒரு சந்திப்புக்கு ஒரு நபரிடம் இருந்து ஐநூறு ரூபாய் கட்டணமாக பெற்றுக் கொள்கிறார். அந்த ஐந்நூறு ரூபாய் கட்டணத்தை முன்கூட்டியே கட்டிப் பதிவு செய்து அவரைச் சந்தித்து ஆலோசனை பெற சிலர் பல சமயங்களில் ஒரு மாதம் வரைகூடக் காத்திருக்க வேண்டியிருக்கும். தேன் மொழியின் அதிர்ஷ்டமோ என்னமோ அவளால் பதினைந்து நாட்களில் டாக்டர் திலகராஜை சந்திக்க முடிந்து விட்டது.

அவளுக்குக் குறித்துத் தரப்பட்டிருந்த தேதியில் மாலை சரியாக நான்கு மணிக்கு தேன்மொழி.

அப்போதுதான் நன்றாகக் குளித்துவிட்டு வந்தாற் போன்ற பரிபூர்ணமான தோற்றத்தில் காட்சி அளித்த திலகராஜை அவரின் விசாலமான ஆலோசனை அறையில் சந்திக்க வந்திருந்து அவரின் எதிரில் அமர்ந்திருந்தாள். அவளுக்கும் திலகராஜுக்கும் இடையில் இருந்த வழுவழுப்பான மேஜையில் பல வண்ணத்தில் பூங்கொத்துக்கள் மிக இயல்பாய் செருகப்பட்டிருந்தன. அதே சமயத்தில் மிகப் பிரத்யேகமாகவும் வலது புறம் சாத்தப்பட்டிருந்த பெரிய கண்ணாடி ஜன்னலின் பின்னால் ஏராளமான தாவரங்கள் ஆங்காங்கு பூக்களுடன் நிசப்தமாய் அசைந்தாடிக் கொண்டிருந்தன. தேன்மொழிக்கு ஆலோசனைச் சூழல் திருப்தியாக இருந்தது. பேசுவதற்குத் தயாராக நிமிர்ந்து உட்கார்ந்தாள்...

"உங்களுடைய ஏதோவொரு கடினமான பிரச்சனைக்கு என்னிடம் ஆலோசனை பெற வந்திருப்பதின் மூலம் உங்களுக்கு உதவி செய்யும் சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்திருப்பதற்காக உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் தேன்மொழி..."

டாக்டர் திலகராஜ் மிகப் பணிவுடன் பேச்சைத் தொடங்கினார்.

"நானும் உங்களுக்கு என் நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன். டாக்டர்... நான் ஒரு கடினமான 'லோசனை ஒன்றை உங்களிடம் இருந்து பெற ,திருக்கிறேன்" என ஆரம்பித்த தேன்மொழி சில நாடிகள் திலகராஜை வெறுமே பார்த்துவிட்டு பின் ாடர்ந்து சொன்னாள்—

"......அநேகமாக யாரும் யாரிடமும் ஆலோசனை பெறவே முடியாத, ஆலோசனை பெறுவதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு விஷயமாக நான்



உங்களைச் சந்திப்பதற்குப் பல தடவை யோசித்துப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். இத்தனைக்கும்—நான் ஆலோசனை கேட்க வந்திருக்கும் விஷயத்தைச் சொன்னால் எனக்கு நீங்கள் ஆலோசனை வழங்குவீர்களா என்பதே எனக்குச் சந்தேகம்தான்... இருந்தாலும் வந்திருக்கிறேன். அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன...ஒன்று—நான் செய்ய விரும்புகிற ஒரு மிகப் பெரிய காரியம் எனக்குள் இருபத்தி நான்கு மணி நேரமும் எண்ண அளவில் நடந்து கொண்டே இருக்கிறது. கற்பனை அளவில் எனக்குள் நடந்து கொண்டே இருக்கிற அந்த உளைச்சல் என்னால் தாங்க முடியாததாக இருக்கிறது. அந்த உளைச்சலில் இருந்து நான் மீள வேண்டும். இரண்டு—உங்களிடம் ஆலோசனை பெற வருபவர்களின் பிரச்சனை எந்தக் காரணத்தாலும் உங்களைத் தவிர இரண்டாம் நபர் ஒருவருக்கு வெளிப்படுத்தப் படாமல் பரம ரகசியமாகவே விஷயம் உங்களுக்குள் மட்டுமே பாதுகாக்கப்படும் என்று நீங்கள் தெரிவித்திருப்பது எனக்கு இந்தப் பாதுகாப்பு மிக மிக அவசியம் டாக்டர்...எனக்கு ஆலோசனையும் வேண்டும். பாதுகாப்பும் வேண்டும். உங்களை நான் தேர்ந்தெடுத்தது இந்த இரண்டு காரணத்தினால் தான்...

"நான் ஆலோசனை கேட்க வந்திருக்கிற பிரச்சனையை செய்து முடிப்பதிலேயே எனக்குப் பாதுகாப்புக் கிடையாது. அதனால்தான் என் பாதுகாப்புக்கு எந்த அபாயமும் ஏற்பட்டுவிடாமல் எனக்குள் எரிந்து கொண்டிருக்கிற கற்பனைச் செயலை நான் செய்தாக வேண்டும்...அதற்கு உங்களுடைய உதவி வேண்டும் எனக்கு..."

"உங்களின் எரியும் பிரச்சனைக்கு நிச்சயமாக என்னால் உதவி செய்ய முடியும் தேன்மொழி. நீங்கள் பிரச்சனையைச் சொல்ல ஆரம்பியுங்கள்."

''சொல்கிறேன் டாக்டர். அதற்கு முன் என்னுடைய சிறிய சந்தேகம் ஒன்றை நிவர்த்திச் செய்யவேண்டும்... நீங்கள் மருத்துவம் பயின்ற பின் சைக்கியாட்ரிதானே படித்தீர்கள்?''

''சைக்கியாட்ரி மட்டுமில்லை; மருத்துவப் படிப்பிற்கு முன் நான் சைக்காலஜியில் தேர்வு பெற்றிருக்கிறேன்... அதைத் தவிர இன்னும் இந்தியக் கல்வி முறைகளில் அறிமுகமே ஆகாத மனித வாழ்வு பற்றிய சில துறைகளில் அமெரிக்காவில் பயின்று தேர்ச்சி பெற்றிருக்கிறேன்.''

''சின்னக் கேள்வி டாக்டர்.''

''கேளுங்கள்''

''சைக்கியாட்ரியும், சைக்காலஜியும் வேறு வேறு கல்வி முறையா?''

''ஆம்.''

''தொடர்ந்து சொல்லுங்கள் டாக்டர்.''

''வாழ்க்கையில் உடல் நோய்; மனநோய் இரண்டையும் தாண்டிய அன்றாட சவால்கள் பலவற்றை மனிதன் சந்தித்தாக வேண்டியிருக்கிறது. அதுவும் இன்றைய நிலையில் மனிதனே மனிதனுக்குப் பல விதத்திலும் போட்டியாக இருக்கிறான். மனிதனை மனிதனிடம் இருந்தே காப்பாற்ற வேண்டியிருக்கிறது. அந்த வழியில் மனிதனுக்குத் திடமான வழி அமைத்துத் தருகிற; தொலைநோக்கை மலரச் செய்கிற; புதிய பாணியில் என்னுடைய கல்வியின் அடிப்படையிலும், தனிப்பட்ட என் தீர்க்க தரிசனத் தன்மையிலும் உண்மையான மனிதாபிமானத்துடன் இந்தப் புதுமையான ஆலோசனைக் கூடத்தை அமைத்திருக்கிறேன்...''



''என்னுடைய சந்தேகத்தை நீக்கியதற்கு நன்றி டாக்டர்... இப்போது நான் விஷயத்தை ஆரம்பிக்கிறேன். ஆனால், நான் உங்களிடம் கேட்க வந்திருக்கும் ஆலோசனை மிக மிக அபாயமானது. அதை எடுத்த எடுப்பிலேயே நான் வெளியிட்டால் எனக்கு நீங்கள் ஆலோசனை தர மறுத்தாலும் மறுத்துவிடலாம். ஆகையால்—இந்த ஆலோசனையை கேட்க வந்ததற்கான காரணத்தை முதலில் சிறிது விளக்கமாகச் சொல்லி விடுகிறேன்...''

''நான் ஒன்றைச் சொல்லலாமா தேன்மொழி?''

டாக்டர் திலகராஜ் குறுக்கிட்டுக் கேட்டார்.

''சொல்லுங்கள் டாக்டர்...''

''நீங்கள் உங்களுக்குள் எரிந்து கொண்டிருக்கிற பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவர ஒரு திட்டத்தை வரைந்து வைத்திருக்கிறீர்கள். ஆனால்—அதன் செயல் வடிவம் உங்களுக்கு நூறு சதவித திருப்தியைத் தரவில்லை. ஆகையால் என் ஆலோசனை ஒன்றையும் தயாரித்துக்கொள்ள நினைத்து வந்திருக்கிறீர்கள். இரண்டில் எது உங்களுக்கு அதிக திருப்தியைத் தருகிறதோ அந்தத் தீர்மானத்தில் செயல்பட வேண்டும் என்பதே உங்களுடைய எண்ணம்...''

திலகராஜின் இந்தக் கண்டுபிடிப்பு தேன்மொழிக்கு சந்தோஷத்தைத் தந்தது. அவளுடைய உள்மனத்தை திலகராஜ் எளிதாகப் பார்த்திருக்கிறார். ''இரண்டில் ஒன்றின் வழியில் செயல்பட எனக்குச் சுதந்திரம் இருக்கின்றது இல்லையா?'' தேன்மொழி கேட்டாள்.

''அது முழுக்க முழுக்க உங்களுடைய சாய்ஸ்.''

''என்னுடைய விளக்கத்தை ஆரம்பிக்கலாமா டாக்டர்?''

''ஆரம்பியுங்கள்.''

"கவிதா என் பெரியம்மா பெண். ரொம்பவும் சாதுவான மென்மையான பெண். சப்தமாக பேசக்கூடத் தெரியாதவள். என் பெரியம்மாவுக்கு கவிதா ஒரே பெண். அவளுக்கு ஒரு அண்ணனும் ஒரு தங்கச்சியும் பிறந்திருந்தாலும் சின்ன வயதிலேயே அவர்கள் இறந்து போய்விட்டார்கள். ஆகையால் கவிதாவை மிகக் கவனமாகவும், செல்லமாகவும் வளர்த்தார்கள். கல்வி என்ற விஷயங்களில் அவள் பிரகாசமானவள் இல்லை. ஆனால் ரொம்ப அடக்கமானவள். கொஞ்சம் பயந்த சுபாவம் கொண்டவளுங்கூட... ஆறு வருஷத்துக்கு முன்பு அவளுக்குப் பதினாறு வயசு நடந்து கொண்டிருந்தது. பத்தாவது வகுப்பில் ஃபெயிலாகி படிப்பை நிறுத்திவிட்டு வீட்டில் இருந்தாள். அப்போது பக்கத்து வீட்டில்..."

டாக்டர் திலகராஜ் குறுக்கிட்டுக் கேட்டார்.

"ஒரு விஷயம் தேன்மொழி— உங்கள் பெரியம்மா குடும்பம் மெட்ராஸ்தானா, இல்லை— வெளியூரா?"

"பார்த்தீர்களா— எவ்வளவு பெரிய விஷயத்தைச் சொல்லாமல் விட்டுவிட்டேன். என் பெரியம்மாவின் குடும்பம் பட்டுக்கோட்டையில் இருந்தது. நாங்கள் தஞ்சாவூரில் இருந்தோம்... நாங்கள் அடிக்கடி பட்டுக்கோட்டை போவோம். அதே மாதிரி பெரியம்மாவும் கவிதாவும் அடிக்கடி எங்களைப் பார்க்க தஞ்சாவூருக்கு வருவார்கள். எங்களுக்குள் நெருக்கமும் உறவும் அதிகம்... ஆனால் எனக்கும் கவிதாவுக்கும் அடிப்படையிலேயே வித்தியாசங்களும் அதிகம். நான் அந்நிய ஆண்களுக்குப் பயப்படவே மாட்டேன். எந்த ஆணுடன் பேசுவதற்கும் வெட்கப்படவும் மாட்டேன். கவிதா ஆண்களுடன் பேசவே மாட்டாள். அந்நிய ஆண்களின் எதிரில் நிற்கவும் பயப்படுவாள். அப்படிப்பட்ட கவிதாவின் வாழ்க்கையில் ஆறு வருஷங்களுக்கு



முன்பு— அவளின் பதினாறாவது வயதில் ரொம்பத் தேவையில்லாத சம்பவம் அவளுடைய வாழ்க்கையில் நடந்தது. பட்டுக்கோட்டையில் அவளுடைய பக்கத்து வீட்டில் சிவஞானம் என்ற இருபத்திரண்டு வயது இளைஞன் விருந்தாளியாக வந்திருந்து பத்து நாட்கள் தங்கியிருந்தான். அந்த சிவஞானம் வந்த இரண்டொரு நாளிலேயே ஒரு தப்பான காரியத்தை யாருக்கும் தெரியாமல் செய்துவிட்டான். கவிதா அவளுடைய வீட்டு பாத்ரூமில் குளித்துக் கொண்டிருந்தாள். அந்தப் பாத்ரூமில் மிகவும் உயரத்தில் ஒரு கதவு இல்லாத வெண்டிலேட்டர் உண்டு. பக்கத்து வீட்டு மாடிப்படியில் ஒரு இடத்தில் நின்று சிறிது குனிந்து கஷ்டப்பட்டு நெருங்கினால் அந்த வெண்டிலேட்டரை அடைந்து விடலாம். சிவஞானம் பாத்ரூமில் யாரோ குளிக்கிற சப்தம் கேட்டு எட்டிப் பார்த்திருக்க வேண்டும். வெண்டிலேட்டர் வழியாக எதேச்சையாக கவிதா குளிக்கும்போது நிமிர்ந்திருக்க வேண்டும். உடனே அந்த சிவஞானம் மறைந்து படிகளில் ஏறி ஓடிப் போயிருக்க வேண்டும். கவிதாவுக்கும் நிச்சயமாகத் தெரியவில்லை. யாரோ வெண்டிலேட்டர் வழியாகப் பார்த்தாற் போலவும் இருந்தது. அடுத்த வினாடியே கண்கள் விலகிவிட்டதால் யாரும் பார்க்கவும் இல்லையோ என்றும் கவிதாவுக்குத் தோன்றியது. ஆனாலும் மனசில் ஒரு மாதிரியான பயம் வந்துவிட்டது. ஆகையால் அவசர அவசரமாக வெளியில் வந்துவிட்டாள். ஆயினும் இதை அவள் என் பெரியம்மாவிடம் சொல்லவில்லை. மறுநாள் குளிக்க பாத்ரூமுக்குள் போனபோதே கவிதா லேசாக பயந்திருக்கிறாள். கொஞ்சம் தயக்கத்துடனேயே குளிக்க ஆரம்பித்திருக்கிறாள். வெண்டிலேட்டரில் ஏதேனும் கண்கள் தெரிகின்றனவாவென்று ஒரு வித அச்சத்துடனேயே நிமிர்ந்து வெண்டிலேட்டரைப் பார்த்தவாறே

அவசரமாக குளித்திருக்கிறாள். குளியலை அவள் முடிக்கிற சில நிமிடங்களுக்கு முன்னால்— சரேலென வெண்டிலேட்டரில் சிவஞானத்தின் கண்கள் தெரிந்திருக்கின்றன. அவ்வளவுதான், புடவையை வாரிச் சுருட்டிக்கொண்டு பாத்ருமை விட்டு வெளியேறி ஓடி வந்துவிட்டாள்.

அவளுடைய உடம்பு நடுங்கிப் போய்விட்டது. சும்மாவே கவிதா ரொம்பப் பயந்த சுபாவம் கொண்டவள். இந்தச் சம்பவம் அவளின் மனசில் ரொம்ப மோசமான பய விதையை ஊன்றிவிட்டது. குளிக்கும்போது யாரோ வெண்டிலேட்டர் வழியாக எட்டிப் பார்த்துவிட்டார்கள் என்று அவள் அம்மாவிடம் உடனே சொல்லியிருக்க வேண்டும். ஆனால் கவிதா சொல்லவில்லை. இதற்குள் வேறொன்றும் நடந்து விட்டது. சிவஞானம் தப்பான எண்ணத்தில் வெண்டிலேட்டர் வழியாக பக்கத்துவீட்டு பாத்ருமை எட்டிப் பார்த்துவிட்டு இறங்கி ஓடி வந்ததை— யாருடைய வீட்டில் அவன் வந்து விருந்தாளியாகத் தங்கியிருந்தானோ— அந்த வீட்டுக்கார அம்மாள் பார்த்து விட்டாள். அந்த சிவஞானம் அவளுக்கு நெருங்கிய உறவினன். ஆகையால் அவனின் இந்த அசிங்கமான நடத்தையை யாரிடமும் காட்டிக் கொடுக்கவில்லை, அதே சமயம் அவனுடைய செயலையும் அவளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதனால் அவனை உடனே பஸ் ஏற்றி அவனுடைய ஊருக்கு அனுப்பி விட்டாள். சிவஞானம் தலைகுனிவுடன் உடனே ஊருக்குச் சென்றுவிட்டான். ஆனால் இதெல்லாம் வேறு மூன்றாம் நபருக்குக்கூடத் தெரியாத விஷயம்— அப்போதைக்கு... அது மட்டும் இல்லை, பக்கத்து வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருந்த சிவஞானம் என்பவன்தான் வெண்டிலேட்டர் வழியாகப் பார்த்தான் என்பதோ; உடனே அவன் ஊருக்கு அனுப்பப்பட்டு



விட்டான் என்பதோ— கவிதாவுக்குத் தெரியாத விஷயங்கள். அவளைப் பொறுத்தவரையில் வெண்டிலேட்டர் வழியாகப் பார்ப்பதற்குப் பக்கத்து வீட்டுக்கு வருகிறவர்கள்தான் பார்க்க முடியும் என்பதில்லை. நாலைந்து வீடு தள்ளி இருக்கிறவர்கள்கூட மொட்டை மாடிகள் வழியாகவே தாண்டித் தாண்டி வந்து பார்க்க முடியும். யாரோ பார்த்துவிட்டு ஓடுகிறார்கள் என்றுதான் கவிதா பயந்தாளே தவிர, சிவஞானம் பார்த்து விட்டு ஓடுகிறான் என்று நினைக்கவில்லை.

அவளுடைய மனசில் தான் குளிக்கும்போது யாரோ பார்க்கிறார்கள் என்ற பிரமை; பயம் பச்சை குத்தியது போல ஆழமாகப் பதிந்துவிட்டது. அதனால்— மறுநாள் அவளுக்குக் குளிக்கப் போகப் பயமாக இருந்தது. லேசாக உடம்பு சரியில்லையென்று அம்மாவிடம் சொல்லிவிட்டு குளிக்கப் போகாமல் இருந்து விட்டாள்.

—இதுதான் ஆரம்பம் டாக்டர். சொன்னால் நிறைய பேருக்கு நம்பவே முடியவில்லை. பிரும்மாண்டமான மரம் துளியளவு விதையில் இருந்துதானே முளைத்து வளர்கிறது? அது போலத்தான் கவிதாவின் மனசில் பதிந்த இந்தச் சிறிய பய விதையும் முளைத்து—ரொம்ப சீக்கிரமே பெரிய விருட்சமாக வேரூன்றி கிளை கிளையாய் தழைத்து வளர்ந்து விட்டது. குளிப்பதற்கு பாத்ரூம் போனால் யாராவது எட்டிப் பார்த்தாலும் பார்ப்பார்களோ என்ற சந்தேகமும் பயமும்; குளிக்கப் போனாலே யாராவது எட்டிப் பார்க்கிற பயங்கரமான பிரமையை அவளுள் ஏற்படுத்திவிட்டது. திடீரென கவிதாவிடம் தோன்றியிருந்த இந்தப் பயம் அவளுடைய அம்மாவிற்கு சிறுபிள்ளைத்தனமாகத் தெரிந்தது. சுத்தப் பைத்தியக்காரத்தனமாகவும் தோன்றியது. பாத்ருமில் போய் குளிக்க முடியாதென்று இப்படி

அடம்பிடிக்கிறாளே என்ற கோபம் வந்தது. தரதர வென்று கவிதாவை இழுத்துப் போய் பாத்ரூமில் தள்ளிக் கதவை அடைத்து வெளிப்புறமாகத் தாளிட்டு அவளை அவளுடைய அம்மா குளிக்கக் கட்டாயப் படுத்தியபோது கவிதாவுக்கு உடம்பே பயத்தில் வெட வெடவென்று நடுங்கியிருக்கிறது. பாத்ரூம் கதவைத் திறக்கச் சொல்லி பயந்து பயந்து கதவைத் தட்டி அம்மாவைக் கூப்பிட்டிருக்கிறாள். ''யாரோ பாக்கிறாங் கம்மா; யாரோ பார்க்கிறாங்கம்மா'' என்று பயந்து அழுதிருக்கிறாள்-அன்றிலிருந்து கவிதாவின் மனச்சரிவு ஆரம்பமாகிவிட்டது டாக்டர். அடைக்கப்பட்ட பாத்ரூமிற்குள் நின்று 'யாரோ பாக்கிறாங்கம்மா' எனத் தொடங்கிய அவளின் அழுகையும் பிரமையும் நாளடைவில் வீட்டில் எங்கு இருந்தாலும் 'யாரோ பார்க்கிறாங்க' என்று பேதலிக்கிற அளவிற்கு கடுமை யாகக் கவிதாவைப் பற்றிவிட்டன.

ஆரம்பத்தில் குளிப்பதற்குப் பயப்படத் தொடங்கிய வள் ரொம்ப சீக்கிரத்தில் புடவை மாற்றிக் கொள்ளவும் பயப்பட ஆரம்பித்து விட்டாள். கடைசியில் என்ன ஆயிற்று ..கவிதா குளிப்பதே இல்லை. புடவை மாற்று வதும் இல்லை. முழுமையான 'இன்சேனிட்டி' கலந்து கொள்ள; யாருமே எதிர்பாராத வகையில் என் பெரியம்மா மகள் கவிதா விசித்திரமான மனோ வியாதிக்கு ஆளாகிவிட்டாள். எவ்வளவோ சிகிச்சை கள் செய்தும் பரிபூர்ணமான குணம் அவளுக்குக் கிடைக்கவில்லை. யாரோ பார்க்கிறார்கள் என்ற பிரமையும் அவளைவிட்டு விலகவில்லை. தேய்பிறை நிலா கொஞ்சம் கொஞ்சமாகக் தேய்ந்து முழுதாகக் கரைந்துபோய் விடுவதுபோல—கவிதாவின் பருத் தறிவும் கரைந்து முற்றிலுமாக ஒருநாள் அழிந்துபோக; 'யாரோ பார்க்கிறார்கள், யாரோ பார்க்கிறார்கள்' என்ற கிரஹணமாக அவளைப் பீடித்திருந்த அச்சமான



குறைவான; யோசித்துப் பார்க்காத நடத்தை, ஒரு குடும்பத்தையே சீர்குலைத்து விட்டது. இதற்காக சிவஞானத்தின் மேல் கோர்ட்டில் கேஸா போட முடியும்!''

''யெஸ்; இம்மாதிரியான வழக்குகளுக்கு இந்தத் தேசத்து வழக்கு மன்றங்களின் சட்டமுறைகள் போது மானதாக இல்லை...''

''சட்ட முறைகள் மட்டுமில்லை டாக்டர்; இம் மாதிரியான கேஸ்களுக்காகக் கோர்ட் படியேற நமது பெண்களின் நிலையும் செம்மையாக இல்லை...''

''சரி—இப்போது நீங்கள் விவரித்த இந்த கவிதா வின் கதை முழுதாக முடிந்ததா?'' திலகராஜ் கேட்டார்.

''கவிதாவின் கதை முடிந்துவிட்டது டாக்டர்.''

''இதில் நீங்கள் என்னிடம் இருந்து என்ன ஆலோசனை எதிர்பார்க்கிறீர்கள்?''

''அடுத்த சில நிமிஷங்களில் அதைச் சொல்கிறேன். அதற்குமுன்— கவிதாவிற்கு நேர்ந்த இந்த அழிவு என்னை ரொம்பவும் பாதித்துவிட்டது டாக்டர். சித்த பிரமையில் சிக்கி அவள் சீரழிந்த போதெல்லாம் அவளைக் கவனித்துக் கொள்ள சில மாதங்கள் நானும் பட்டுக்கோட்டையில் என் பெரியம்மாவின் வீட்டி லேயே தங்கியிருந்தேன். ஆகையால் இப்போதும் கவிதா சம்பந்தப்பட்ட அந்தக் கோரக் காட்சிகள் எல்லாம் என் நினைப்பில் வந்து வந்து என்னை அலைக்கழிக்கின்றன. அதுவும் ராத்திரி வேளைகளில் கவிதா நினைப்பு வந்துவிட்டால்... அவ்வளவுதான்; என் தூக்கமே போய்விடும். கிணற்றில் விழுந்து செத்து விறைத்துப் போனாளே— அந்தக் காட்சிகள் எல்லாம் என் மனசில் தெரிந்து என்னை வாட்டி எடுக்கும்.

அவள் என் கவிதா. வாழ்வின் எந்த ஆபாசமும் தெரியாத அப்பாவி. கொஞ்சங்கூட கல்மிஷமே இல்லாத பெண். அவள் அவ்வப்போது எனக்கு எழுதியிருக்கிற சின்னச்சின்ன கடிதங்களிலேயே தெரியும் அவளின் அறியாமை—அப்பேர்ப்பட்ட என் கவிதா அநியாயமாக இறந்ததும்; அதனால் அவளின் அம்மாவும் நோயாளியாக செத்ததும்; என் பெரியப்பாவும் நடைப்பிணமாக வாழ்வதும்—என்னை ஒவ்வொரு நிமிஷமும் கோபமடைய வைத்தது. மனம் கொதிக்கச் செய்தது. நாளடைவில் என்னைக் கொந்தளிக்கவும் வைத்துவிட்டது. என்னுடைய அத்தனை உணர்ச்சிகளிலும் கடும் வன்முறை கலந்து நிறைந்துவிட்டது. என் அத்தனை வன்முறை உணர்வுகளிலும் மையமாக சிவஞானம்தான் நிற்கிறான். அவனைச் சுற்றியேதான் என் மனம் வட்டம்போட்டது... அந்த ராஸ்கலால் தானே என் பெரியம்மாவின் குடும்பமே நாசமானது? அந்தப் பயலால்தானே எங்கள் கவிதாவிற்குப் பைத்தியமே பிடித்தது...ஒரு நல்ல குடும்பத்தை நாசம் பண்ணிட்டு அவன்பாட்டுக்கு எங்கேயோ நடந்த பாதகம் எதுவும் தெரியாமல் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறானே...என்றெல்லாம் எண்ணி மனம் குமைந்தேன். சிவஞானம் மட்டும் எப்படி நிம்மதியாக வாழலாம் என்று பொங்கினேன். அவனை நிம்மதியாக வாழ விடக்கூடாதென்று யோசிச்சேன். கடைசியில்; அவனை வாழவேவிடக்கூடாதென்று முடிவு செய்தேன். எந்த வழியிலாவது அவனுடைய வாழ்க்கையில் குறுக்கிட்டு சிவஞானத்தை அழித்தே தீருவது என்று எனக்குள்ளேயே நான் சபதமும் செய்தேன்...''

''அழித்தே தீருவதென்றால்...?'' திலகராஜ் கேட்டார்!

''கொலை செய்வது...இரண்டு வருடமாக எனக்கு இதே நினைப்புதான். எப்படியும் சிவஞானத்தைக்



கொன்றே ஆகவேண்டும்...இது என் லட்சியக் குற்றம் டாக்டர்!''

தேன்மொழியின் கண்கள் பாம்பின் கண்கள் போல மின்னின. திலகராஜ் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். தேன்மொழி சில வினாடிகள் மௌனமாக இருந்தாள். பின்: மீண்டும் சக்தியைச் சேகரித்துவிட்ட தன்மையில் வலிமையுடன் பேசத் தொடங்கினாள்.

''சிவஞானத்தைக் கொன்றுவிட வேண்டும் என்ற எனது முடிவில் எந்த மாற்றமும் கிடையாது டாக்டர். ஆனால்—அவனைக் கொலை புரிவது எந்த விதத்திலும் என்னுடைய வாழ்க்கையைப் பாதித்துவிடக்கூடாது. அது ரொம்ப முக்கியம். எனக்கு என்னுடைய லட்சியக் குற்றத்தை நிறைவேற்றியாக வேண்டும். ஆனால் குற்றவாளி நான்தான் என்பது யாருக்குமே புலப்பட்டு விடக்கூடாது. ஒரு அயோக்கியனின் அழிவால் என் வாழ்க்கைக்கு; என்னுடைய எதிர்காலத்திற்கு எந்த அழிவும் வரக்கூடாது. ஒருத்தியின் வாழ்க்கையும், குடும்பமும் ஏற்கனவே நாசமானது போதாதா? ஆகையால்—என் லட்சியக் குற்றத்தை நிறைவேற்றிக் கொள்வதில் நான் ரொம்பவும் எச்சரிக்கையாகவும் ஜாக்கிரதையாகவும் இருக்கிறேன்.

சிவஞானத்தை எப்படிக் கொலை செய்வது என்பதைப் பற்றிய சிந்தனையாகவே வாழ்கிறேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டம் போடுகிறேன். வெவ்வேறு கணக்குப் போடுகிறேன். இது வரை எந்தத் திட்டமும் கணக்கும் எனக்கு முழு திருப்தி அளிக்கவில்லை டாக்டர். தமிழிலும், ஆங்கிலத்திலும் நிறைய க்ரைம் நாவல்கள் வாசித்தும் பார்த்துவிட்டேன். வாழ்க்கையில் எந்த நிலையிலும் சந்திக்கவோ பழகவோ முடியாத சிவஞானத்தை எப்படிக் கொன்று பழி தீர்த்துக் கொள்ளப் போகிறேன் என்றே தெரிய

வில்லை. அதுவும் கொலை செய்தது நான்தான் என்பதை யாருமே அனுமானிக்கக்கூட முடியாத குற்றமாகவும் அதைச் செய்யவேண்டும். சிந்தித்துச் சிந்தித்து—இந்த இரண்டு மூன்று மாதங்களாகத்தான் ஒரு திட்டத்திற்கான வரைபடத்தை தயாரித்திருக்கிறேன். அந்த வரைபடத்தின்படி எல்லா சம்பவங்களும் நடந்தால்தான் என்னுடைய திட்டம் நிறைவேறும். அதாவது முழுக்க முழுக்க கடவுள் என் பக்கம் இருந்தால்தான் என்னுடைய கணக்கு 'வொர்க்-அவுட்' ஆகும்! அதனால் கடைசியாக வேறொரு புதிய கணக்கு உங்களுடைய யோசனைப்படி போட்டுப் பார்த்துவிடலாம் என்றுதான் உங்கள் ஆலோசனையை கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று வந்திருக்கிறேன்...''

''அதாவது— நீங்கள் கேட்க வந்திருக்கிற ஆலோசனை எப்படி அந்த சிவஞானத்தை உங்கள் மேல் யாருக்குமே சந்தேகம் வராதபடி கொலை செய்வது என்பதைப் பற்றித்தானே...?'' டாக்டர் திலகராஜ் கேட்டார்.

''யெஸ்...''

நீங்கள் ''ரொம்பத் தைரியசாலிதான் மிஸ். தேன்மொழி...''

''ஆம் டாக்டர். பொதுவாக நான் ரொம்பவும் தைரியசாலிதான்...''

''ஆனால்— கொலை செய்தாக வேண்டும் என்கிற அளவிற்குத் தைரியம் வரத் தேவையில்லை.''

''அப்படியில்லை. இந்த அளவு தைரியம் வருகிற அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது... அதை நினைத்துப் பார்க்க வேண்டும் நீங்கள்...''



''இதைவிட வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்களெல்லாம் இருக்கிறார்கள் தேன்மொழி. அவர்களுக்கு இப்படியெல்லாம் தைரியம் வந்தது கிடையாது.''

''எனக்கு இந்த விஷயத்தில் உங்களுடைய ஆலோசனை தேவை டாக்டர்.''

''நீங்கள் செய்ய நினைக்கிற குற்றத்துக்கு என்னைத் துணையிருக்கச் சொல்கிறீர்கள்...''

''தயவு செய்து அப்படி எடுத்துக் கொள்ளாதீர்கள். இருபத்தி நான்கு மணி நேரமும் எனக்குள் இந்தக் கொலைச் சிந்தனையே விதம் விதமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் இருந்து என்னைக் காப்பாற்றுவதாக நினைத்துக் கொள்ளுங்கள். யாராலும் எனது பின்னணியைக் கண்டுபிடிக்க முடியாத பிரமாதமான 'மர்டர் ப்ளுபிரிண்ட்' ஒன்றைத் தயாரித்துத் தாருங்கள்...''

''ஒரு வலுவான தடயத்தை இப்போதே மறந்துவிட்டீர்கள் தேன்மொழி...''

''நானா...?''

''யெஸ்...''

''என்னவென்று சொல்லுங்கள்.''

''நீங்கள் விரும்புகிறபடி இந்தக் கொலை ஒரு வேளை நடந்துவிட்டால் நீங்கள்தான் இதைச் செய்திருப்பீர்கள் என்ற திட்டவட்டமான முடிவிற்கு வர முடியாவிட்டாலும்; உங்கள் பின்னணியும் இருக்குமோ என்ற சந்தேகத்திற்கு உடனே வருகிற பெண் ஒருவர் இருக்கிறார்.''

''யார் அந்தப் பெண்?''

''பட்டுக்கோட்டையில் உங்கள் பெரியம்மா வீட்டின் பக்கத்து வீட்டுப் பெண்மணி!''

“நோ சான்ஸ் டாக்டர்...!”

“ஏன் சான்ஸ் இல்லை? அந்தப் பெண்மணி ஒரு முக்கியமான தடயம். சிவஞானம் வெண்டிலேட்டர் வழியாக பாத்ரூமை எட்டிப் பார்த்தது; பின் கவிதாவிற்குச் சித்தப்பிரமை ஏற்பட்டது போன்ற எல்லா விஷயங்களையும் தெரிந்தவர் அந்தப் பெண்மணி...”

“அப்படிப் பார்த்தால் நான் அந்த அம்மாளிடம் விட்டு வைத்திருக்கும் சம்பவ தடயங்களே இன்னும் அழுத்தமானவைகள். சிவஞானத்தைப் பழிக்குப் பழி வாங்கியே தீர வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்ததும் நான் செய்த முதல் காரியம்— பட்டுக்கோட்டைக்குப் போய் அந்த அம்மாளைச் சந்தித்ததுதான்! சிவஞானம் என்ற பெயரைத் தவிர வேறு எதுவுமே தெரியாத ஒருவனைப்பற்றிய விவரங்களை முதலில் தெரிந்துகொண்டாக வேண்டுமே நான்... பொதுவாகப் பல விஷயங்கள் பற்றிப் பேசுவது மாதிரி பேசி நடித்துவிட்டு; கவிதாவின் முடிவு பற்றிச் சிலாகித்துவிட்டு; சிவஞானம் பற்றிக் கடைசியில் அந்த அம்மாளிடம் ஒரு சில நிமிஷங்கள் பேசினேன்.

கொஞ்சம்கூட சந்தேகம் வராதபடி சிவஞானம் செய்த செயல் பெரிய விஷயமே இல்லை; ஏதோவொரு இளைஞனுக்கு உரிய வயசுக்கோளாறில் செய்த செயல்தான என்பது மாதிரியெல்லாம் அழகாகப் பேச— அந்த சிவஞானம் யார்? இப்போது அவன் எங்கே இருக்கிறான்? என்ன செய்கிறான்? என்ற விவரங்கள் பூராவையும் தெரிந்துகொண்டேன்... அவன் எம்.காம்., படித்திருக்கிறான். கல்யாணமாகி விட்டது. மௌண்ட் ரோடில் ஒரு தனியார் கம்பெனியில் அசிஸ்டெண்ட் அக்கவுண்டன்ட்டாக வேலை பார்த்து வருகிறான். அவனுடைய வீடு மயிலாப்பூர் வீரபெருமாள் கோயில் தெருவில் ஒரு சந்துக்குள் இருக்கிறது. அவனின்



நடமாட்டத்தைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் தூரத்தில் இருந்தே நன்றாகப் பார்த்து வைத்துக்கொண்டு விட்டேன்— இப்போது அவனுடைய மனைவிக்கு எழெட்டு மாதங்களில் ஒரு கைக்குழந்தை இருக்கிறது...!”

“சந்தேகமே வராதபடி நீங்கள் பேசி நடத்திருக்கலாம். ஆனாலும்— நீங்கள் திட்டமிட்டிருக்கும் விதத்திலேயே சிவஞானம் கொலை செய்யப்பட்டு; யார் எதற்காகக் குற்றத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதை காவல் துறையால் கண்டுபிடிக்கவே முடியவில்லை என்கிறபோது உங்களின் பழிவாங்கும் பின்னணி அதில் இருக்குமோ என்ற சந்தேகம் கண்டிப்பாக அப்பெண்மணிக்கு ஏற்படும் சாத்தியங்கள் உண்டு. அது மட்டுமில்லை தேன்மொழி, அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பெண் மனோஇயலின்படி; சந்தேகத்தை ரகசியமாய் காப்பாற்ற அந்தப் பெண்மணியால் முடியாது. அப்போது ஆபத்து உங்களுக்குத்தான்...!”

“நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன் டாக்டர். ஆனாலும் அது மாதிரியான ஆபத்து எனக்கு நேராது. ஏன் தெரியுமா? அந்தப் பெண்மணி இப்போது உயிருடன் இல்லை!”

டாக்டர் திலகராஜ் உண்மையாகவே லேசாக அதிர்ந்தார். சிறு சந்தேகத்துடன் தேன்மொழியை உற்றுப் பார்த்தார். அவள் புன்னகையுடன் சொன்னாள்—“சந்தேகப்படாதீர்கள்! அந்தப் பெண்மணி ஒரு பஸ் விபத்தில் போன வாரம்தான் காலமாகிவிட்டார்! நீங்கள் நினைக்கிறபடி எனக்கு எதிராகச் செயல்படக்கூடிய தடயம் அந்தப் பெண்மணி மட்டும்தான். இப்போது அந்தத் தடயம் இல்லை. இதிலிருந்து கடவுள் என்னுடைய பக்கம் இருக்கிறாரோ என்ற சிறிய சந்தோஷம்கூட இப்போது எனக்குத் தோன்றுகிறது.”

''இது நான் எதிர்பார்க்காத திருப்பம்'' திலகராஜ் சொன்னார்.

''எனக்கு உதவி செய்யுங்கள் டாக்டர். அருமையான ப்ளான் ஒன்று போட்டுத் தாருங்கள். என் லட்சியக் குற்றத்தை கூடிய சீக்கிரம் நான் செய்தாக வேண்டும்.''

''அதாவது— ஒரு குற்றத்திற்குத் துணையிருக்கச் சொல்கிறீர்கள்...''

''என் இந்தக் குற்றத்தை நான் செய்தாக வேண்டியவளாக இருக்கிறேன் என்பதைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்...''

''காரணங்களால் ஒவ்வொரு கொலையும் நடக்கிறது. அதற்காக கொலைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை இல்லை.''

''கடவுள்களும் அவதாரப் புருஷர்களும்கூட அசுரர்களைக் கொன்று குவித்திருக்கிறார்கள்...''

''அந்தக் கதைகளை எழுதியது மனிதன்தான் தேன்மொழி.''

''அதன் மூலம் நான் உணர்வது— எல்லாக் கொலைகளும் குற்றங்கள் அல்ல என்பதுதான் டாக்டர்!''

''தேர்ந்த அரசியல்வாதி போலப் பேசுகிறீர்கள் தேன்மொழி!''

''என் லட்சியம் நிறைவேறியாக வேண்டும். எப்படியாவது எனக்கு...''

''மன்னிக்க வேண்டும்— இந்த விஷயத்தில் உங்களுக்கு ஆலோசனை எதையும் நான் தருவதற்கில்லை— சட்ட விரோதமான செயல்களுக்கு என்னுடைய வழிகாட்டல் யாருக்குமே கிடையாது.''



''இருபத்தி நான்கு மணி நேரமும் எனக்குள் காட்சி காட்சியாக ஓடிக் கொண்டிருக்கிற அந்தக் கற்பனைக் கொலையில் இருந்து மீள எனக்கு வழி?''

''அதற்கு வழி கொலைக் குற்றம் இல்லை...''

''யுத்தம் என்று வந்துவிட்டால் அதில் கொலைளும் அடங்கியதுதானே டாக்டர்?''

''நான் யுத்தத்தை ஆதரிப்பதாகக் கூறவில்லையே...''

''நீங்கள் லட்சிய நோக்கில் பார்க்கிறீர்கள் டாக்டர். ஆனால் கொலைகளும் குற்றங்களும் எல்லா ஊரிலும் எல்லா நாட்டிலும் யதார்த்தமாக நடைபெறுகின்றன. அந்த யதார்த்தமான முறைகளில் வாழ்கிற ரொம்ப யதார்த்தமான பெண்தான் நான். ராவணனை அழிக்க ராமன் முன்வந்தது யதார்த்த நடைமுறை. கௌரவர்களை ஒழிக்க பாண்டவர்கள் வழி தேடியதும் அந்த மாதிரியான யதார்த்த நடைமுறைதான் டாக்டர்.

பாண்டவர்களுக்கு கிருஷ்ணன் சொல்லித் தராத வியூகங்களா?! பீஷ்மர்கூடத் தப்ப முடியவில்லையே— அந்த வியூகத்தில் இருந்து...! அப்புறம் எப்படி இந்த சிவஞானம் மட்டும் தப்ப முடியும்? அதுவும் இல்லாமல் ஏன் தப்ப வேண்டும்? மனித வரலாறு பூராவும் பரந்து கிடக்கிற பழிவாங்கும் உணர்வில் ஏன் நான் மட்டும் செயல்படக்கூடாது?— சொல்லுங்கள்...'' தேன்மொழியின் குரலில் சிறிது உஷ்ணம் கலந்திருந்தது. அவளின் முகபாவம் மாறிப் போயிருந்தது. டாக்டர் திலகராஜின் முகமும் லேசாகச் சிவந்து கடுமை பெற்றிருந்தது.

''தேன்மொழி; மனதில் உத்தேசித்திருக்கும் குற்றத்தைச் செய்வதும் செய்யாததும் உங்களுடைய விருப்பம். சிவஞானத்தைப் பழிவாங்குகிற உத்வேகத்தில் அவனைக் கொலை செய்வீர்களோ; இல்லை—

உங்களை இருபத்தி நான்கு மணிநேரமும் மனதில் இம்சை பண்ணுகிற கற்பனைக் கொலைக்காட்சியின் சம்பந்தத்தில் இருந்து மீள அந்த சிவஞானத்தை நிஜமாகவே கொலை செய்வீர்களோ— அதெல்லாம் நீங்கள் தீர்மானம் செய்து கொள்ள வேண்டிய விஷயங்கள். என்னால்— இந்தப் பழி உணர்ச்சியில் இருந்து மீளவும்; குற்றம் புரிகிற மனநிலையை மாற்றவும்தான் ஆலோசனை வழங்க முடியும். அதற்கான வழிமுறைகளைக் கேளுங்கள்; நிறையச் சொல்கிறேன். அந்த வழிகள் தேவையில்லை என்றால் நீங்கள் விடைபெற்றுக் கொள்ளலாம்.''

''அப்படியானால் நான் விடைபெற்றுக் கொள்ளத்தான் வேண்டுமா டாக்டர்?''

''எனக்குத்தான் ஆச்சர்யமாக இருக்கிறது தேன்மொழி. எப்படி இப்படி ஒரு ஆலோசனையை எதிர்பார்த்து என்னிடம் வந்தீர்கள்?'' திலகராஜ் எழுந்து கொண்டே கேட்டார். தேன்மொழியும் எழுந்து நின்றாள்.

''அவ்வளவு தூரத்துக்கு இந்த எரியும் பிரச்சினை எனக்குள் கடல் ஆழத்துச் சிகரமாக வளர்ந்து நிற்கிறது... எப்படி இருந்தாலும் என் பிரச்சினையை இவ்வளவு நேரம் பொறுமையாக நீங்கள் கேட்டீர்கள். அதற்கு என்னுடைய நன்றி...''

''போய் வாருங்கள். ஆனால் குற்றவாளிகள் சட்டத்தின் கண்களில் இருந்து ஒரேடியாய் தப்பிவிட முடியாது. எவ்வளவு திட்டம் போட்டாலும் ஏதாவது ஒரு தடயம் காவல் துறையிடம் மாட்டியே விடும்.''

''இந்த விஷயத்தில் நீங்கள் தெரியாமல் பேசுகிறீர்கள் டாக்டர்... போய் போலீஸ்காரர்களிடம் கேட்டுப் பாருங்கள்; எத்தனை குற்றங்களில் மர்மம்



அவிழாமலேயே அமிழ்ந்து கிடக்கின்றன என்பது தெரியவரும்...''

''இருக்கலாம். இருந்தாலும் உங்களிடம் என் கடைசி வேண்டுகோள் இதுதான்— தயவு செய்து இந்த லட்சியக் குற்றம் வேண்டாம்.''

''நானும் உங்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். நான் இப்படி ஒரு ஆலோசனை கேட்டு உங்களிடம் வந்ததாக மட்டும் காவல்துறையினரிடம் சொல்லிவிடாதீர்கள்...''

''—இது என் தொழில் முறையில் நடந்திருக்கிற சந்திப்புத்தான். இதை என் கொள்கைப்படி யாரிடமுமே வெளியிட மாட்டேன்...''

''இந்த வார்த்தையை நான் நம்பலாம்தானே?''

''தாராளமாக நம்பலாம்.''

''நன்றி டாக்டர்.''

''ஆனால் ஒன்று தேன்மொழி. நீங்கள் தெரிந்து கொண்டாலும் சரி; தெரிந்து கொள்ளாவிட்டாலும் சரி; நீங்கள் செய்யப்போகிற குற்றம் பற்றித் தெரிந்த சாட்சியாக; தடயமாக நான் ஆகிவிட்டேன்! சிவஞானம் என்ற மனிதனின் துர்மரணம் எனக்குத் தெரிந்ததாகிவிட்டது! அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்!'' தேன்மொழியின் உதடுகளில் சிறிய புன்னகை நெளிந்தது.

''நான் உங்களை என்னவோ நினைத்தேன் டாக்டர்! உங்களுக்குள் எவ்வளவு அறியாமை இருக்கிறது என்பது இப்போதுதான் தெரிகிறது... நான் இவ்வளவு நேரம் உங்களிடம் சொன்ன விஷயம் பூராவிலும் பொதிந்திருந்த சம்பவங்கள் மட்டும்தான் உண்மை, சிவஞானம். கவிதா பட்டுக் கோட்டை,

தஞ்சாவூர் எல்லாமே மாற்றிச் சொல்லப்பட்டப் பொய்கள்! அந்தப் பொய்களின் பின்னால் மறைந்திருக்கிற நிஜமான பெயர்களும் ஊர்களும் வேறானவை! என்றோ ஒரு நாள் இந்தக் குற்றம் நிகழ்ந்து; அந்தச் செய்தி பேப்பரிலும் வெளிவரும்போது அது நான் செய்த குற்றம்தான் என்பதை உங்களால் ஊகிக்கவே முடியாது! ஏனெனில், கொலையுண்ட மனிதனின் பெயர் சிவஞானம் என்பதாக இருக்கவே இருக்காது!''

''பரவாயில்லை; ஆச்சர்யப்படத்தக்க முறையில் செயல் பட்டிருக்கிறீர்கள். ஆனாலும் தேவையில்லாத ஆச்சர்யங்கள் இவை... ஓகே. நீங்கள் போகலாம்...''

''உங்களுக்கு என்மேல் கோபம் வந்துவிட்டதாகத் தெரிகிறது. நான் எவ்வளவு சொல்லியும் ஒரு அமைதியான; இனிமையான குடும்பத்தில் நடந்து விட்ட பாதகங்களை பாக்கவே மாட்டேன் என்கிறீர்கள்... நடந்துவிட்ட ஒரு அக்ரமத்திற்குப் பழிக்குப் பழியாக கொலை செய்தலும், புராண காலத்தில் இருந்தே மனித இயல்புகள்தான் என்பதையும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள், ஓகே. நானும் உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன்.''

தேன்மொழி வெளியேறுவதற்காகத் திரும்பினாள்.

''ஒரே ஒரு சந்தேகம் தேன்மொழி.''— திலகராஜ் தயக்கத்துடன் அழைத்து அவளை நிறுத்தினார்.

''யெஸ்...''

''உங்கள் பெயராவது தேன்மொழி என்பதுதானா? இல்லை அதுகூடப் பொய்யான பெயரா?''

''இனி உங்களுடைய கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் எனக்குக் கிடையாது டாக்டர்! நான் வருகிறேன்...''



தேன்மொழி சட்டென்று கதவைத் திறந்து வெளியேறி விட்டாள். டாக்டர் திலகராஜ் திகைத்துப் போய் நின்றார்.

## 2

ரேவதி வாசித்துக் கொண்டே வந்த காகிதக் கற்றைகள் முடிந்து போயிருந்தன. அவள் படித்து முடிக்கும் வரை தான் வேறு எதையாவது வாசித்துக் கொண்டிருக்கலாம் என்ற எண்ணத்தில் தான் எழுதிய வேறொரு கதையை எடுத்து ஆனந்தி புரட்டிக் கொண்டிருந்தாள்.

''படிச்சாச்சு ஆனந்தி'' ரேவதி குரல் கொடுத்தாள். படித்துக் கொண்டிருந்ததை மேஜையில் எறிந்துவிட்டு ஆனந்தி எழுந்து உட்கார்ந்தாள்.

''அதுக்குள்ளேயா படிச்சிட்டே?''

''நான் எப்பவுமே ஸ்பீடா படிப்பேனே...''

''நீ படிச்ச வரைக்கும் எப்படி இருக்கு?''

''ஒரு பெண் கொலை பண்றதுக்குத் திட்டம் போடறான்னு எழுதியிருக்கிறது ஒரு மாதிரி இருக்கு.''

''ஒரு மாதிரி இருக்குன்னா?''

''கொஞ்சம் ஓவர்.''

''பொம்பளைங்க கொலை பண்ணினது இல்லையா?''

''கொலை பண்ணியிருக்கலாம்... ஆனா இப்படி பிளான் பண்றது எனக்குப் பிடிக்கலை.''

''ஒனக்குப் பிடிக்கலைன்னு சொல்லு. தேன்மொழி மாதிரி பொண்ணுங்க உலகத்ல இல்லேன்னு மட்டும் சொல்லாதே...''

''கொலைக்கு இவ்வளவு பெரிய பிளான் பண்ற பொண்ணு ரொம்ப... இதுலகூட ஒரு விஷயம் லாஜிக்கலா உதைக்குது. இவ்வளவு சீரியஸா பிளான் பண்ணி; தான் எந்த விதத்திலேயும் மாட்டிடக் கூடாதுன்னு நெனைச்சி, அங்குலம் அங்குலமா திட்டம் தீட்ற பொண்ணு—கொலை எப்படிப் பண்றதுன்னு ஒருத்தர் கிட்டே போய் இப்படியா பகிரங்கமா யோசனை கேட்பா? ஒத்துக்க முடியலையே ஆனந்தி...''

அங்கேதான் என்னோட மேதாவித்தனமே அடங்கி யிருக்கு ரேவதி. தேன்மொழி, ஒன் டாக்டர் திலகராஜை கன்சல்ட் பண்ணப் போனா என்கிறதில பெரிய சஸ் பென்ஸ் ஒண்ணு இருக்கு. சும்மா நான் அந்தப் பகுதியைக் கதையில கொண்டு வரலை... முழு நாவலையும் எழுதி முடிச்சிக் காட்டறேன். கடைசி வரைக்கும் படிச்சிட்டுச் சொல்லு...''

''இப்ப எவ்வளவு எழுதியிருக்கே...?''

''பாதிக்கு மேல எழுதிட்டேன். மிச்சத்தை நம்ம விஜி படிச்சிட்டுத் தரேன்னு எடுத்திட்டுப் போய் இருக்கா...''

''கடைசியில் அந்தத் தேன்மொழி சிவஞானம் என்கிறவனைக் கொலையே பண்ணிடறாளா?'' ரேவதி கேட்டாள்.

''சிவஞானம் என்கிற பெயர் தேன்மொழி அந்தத் திலகராஜ்கிட்டே சொன்ன கற்பனைப் பெயர். கதையில் அந்தக் கதாபாத்திரத்தோட உண்மைப் பெயர் ராமகிருஷ்ணன்...!''

''இது வேற! கதைக்குள்ளேயே ஒரு கப்ஸா கதை! வீணா படிக்கிறவங்களைக் குழப்பப் போறே...''

''கொஞ்சம் கவனமா படிச்சா ஏன் குழப்பம் வருது?''

PUBLIC LIBR



''நான் உன்னைத் தெரியாமதான் கேக்கறேன். அவ்வளவு பாப்புலரான திலகராஜ்கிட்டே போய் கொலை பண்றதுக்கு ஒரு ஐடியா கேக்கப் போறாளே—அவன் உடனே போலீசுக்குச் சொல்லிட மாட்டானா?—அவன் என்ன அவ்வளவு இளிச்சவாயனா?—இப்படியா ஒருத்தி கிறுக்கி மாதிரி தான் கொலை பண்ணப் போறதைப் போய் மெனக்கெட்டு சொல்லிட்டு இருப்பா?''

''அதான் சொன்னேனடி— அதுல ஒரு சஸ்பென்ஸ் இருக்குன்னு... ஆனா— இதுல இன்னொரு முக்கியமான விஷயம் என்னான்னா— தேன்மொழி போய் திலகராஜ் கிட்டே தான் ஒரு கொலை பண்ணப் போறதா சொல்றாளே, அது வந்து பொய்! உண்மையில் கொலை பண்ணப் போறது தேன்மொழி இல்லை! அவளோட வெரி க்ளோஸ் ஃபிரண்ட் ராதிகாதான். அந்தக் கொலையைப் பண்ணப் போறது! திலகராஜ்கிட்டே தான் கொலை பண்ணப் போறதா சொன்னது ஒரு மிஸ்லீடிங் பாயிண்ட்!''

''முழு நாவலையும் படிச்சா பைத்தியம்தான் பிடிக்கும் போலிருக்கு!''

''திலகராஜை மீட்பண்ணிப் பேசறா பார்— அன்னிக்கு ராத்திரியே அந்தத் தேன்மொழி சேலம் கிளம்பிப் போயிடறா! சேலம்தான் அவளோட ஊர்...''

''அதாவது திலகராஜை மிஸ்லீட் பண்ணிட்டு அவ கிளம்பிப் போயிடறா?''

''ஆமா.''

''இனிமே அவ மெட்ராஸ் வரமாட்டாளா?''

''வரமாட்டா...''

''திலகராஜ்கிட்டே சிவஞானம்னு சொன்ன ராமகிருஷ்ணன் என்ற கதாபாத்திரத்தை ஆக்ச்சுவலா கொல்லப் போறது ராதிகாதான்; தேன்மொழி இல்லே?''

''யெஸ்.''

''அடேயப்பா— எத்தனை ட்விஸ்ட்... இத்தனை ட்விஸ்ட் இருந்தா யார் படிக்கிறது...? ஆனா— இப்ப ஒரு விஷயம் புரியுது— திலகராஜ் போலீஸ் கம்ப்ளெயிண்ட் பண்ணப் போறான். போலீஸ் திலகராஜ் சொன்ன அடையாளத்தை வச்சுக்கிட்டு தேன்மொழியைத் தேடப் போகுது— மெட்ராஸ் பூராவும் வலைபோட்டு... அப்படித்தானே?''

''இப்ப அந்தப் போர்ஷனைத் தரேன்... படி.''

''அடிப்பாவி! வச்சுக்கிட்டேதான் விஜி எடுத்திட்டுப் போயிருக்கான்னு ரீல் விட்டியா... குடுகுடு... அதையும் படிச்சிடறேன்...''

ஆனந்தி போய் மேஜையைத் திறந்து அவள் எழுதிக் கொண்டிருக்கும் நாவலின் அந்தக் குறிப்பிட்ட சின்னப் பகுதியை மட்டும் எடுத்து வந்து ரேவதியிடம் கொடுத்தாள். ரேவதி வாட்சில் மணி பார்த்துவிட்டு கதையைப் படிக்க ஆரம்பித்தாள்.

## 3

டாக்டர் திலகராஜுக்கு நீண்ட நேரத்துக்கு வேலையே ஓடவில்லை. அவரின் அறைக்குள் உலாவி கொண்டே இருந்தார். தேன்மொழியின்விஜயம் அவரை ரொம்பவும் அவமதித்து விட்டாற் போலிருந்தது. எவ்வளவு பெரிய துஷ்பிரயோகம்? நினைக்க நினைக்க அவருக்குக் கோபம் வந்தது. எத்தனை தைரியம் இருந்தால் இப்படி ஒரு ஆலோசனை பெற ஒருத்தி



வருவாள்? எவ்வளவு எளிதாக நினைத்து விட்டாள்? திலகராஜ் யோசனை செய்து பார்த்தார். ஒரு பெண் ஒருவனை கொலை செய்ய திட்டமிடுதலே ஒரு குற்றம் தான். அது தெரிந்த பின்பும் அதைப் போலீசிடம் சொல்லவில்லை என்றால் அதுவும் குற்றமே. ஒரு பெண் செய்ய இருக்கிற குற்றத்தைப் போலீஸிடம் சொல்வதுதான் நேர்மையான செயல். அதுதான் கடமையும்கூட...

திலகராஜ் காவல்துறை குற்றப்பிரிவில் ஒரு அதிகாரியாகப் பணியாற்றுகிற தனது நண்பன் கேசவமூர்த்திக்கு போன் செய்தார். தேன்மொழி தன்னிடம் ஆலோசனை பெற வந்த சம்பவத்தை அப்படியே போனில் விளக்கினார்.

''அப்படியா! வெரி இண்ட்ரஸ்டிங். சரி; இதை என்கிட்டே எதுக்கு இத்தனை அவசரமா போன் பண்ணிச் சொல்றே?'' கேசவமூர்த்தி கேட்டார்.

''ஒரு க்ரைம் நடக்கப் போகுது. அதைச் சொல்ல வேண்டாமா உன்கிட்டே...''

''கிரேட் ஃபூல்! அதைப் போய் நம்பறே பார்...''

''இல்லை கேசவா... ஷி இஸ் வெரி வெரி சீரியஸ். ஐ நோ தட்... உண்மையான நோக்கம் இல்லாம அவ்வளவு இமோஷனலா பேச முடியாது. அந்தப் பெண் அவ்வளவு இமோஷனலா பேசினா...''

''என்னோட பதினைஞ்சி வருஷ சர்வீஸ்ல சொல்றேன். அந்தப் பொம்பளை உன் காதுல பூ வச்சிட்டுப் போயிருக்கா. நெஜமா கொலை பண்ணனும்னு ப்ளான் போட்றவ கன்சல்டேஷனுக்கு வரவே மாட்டா திலகராஜ்!''

ஃபைவ் ஹண்ட்ரட் ருப்ஸ் குடுத்து அப்பாய்ண்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ணி வந்தா கேசவா...''

''ஸோ வாட் மேன்? ஐநூறு ரூபா என்கிறது ஒரு பெரிய பணக்காரிக்கு பெரிய விஷயமே கிடையாது...''

''இதனால அவளுக்கு என்ன பலன்?''

''வரும்போதே தெரியாதா ஒருத்திக்கு இப்படி ஒரு ஆலோசனை கேட்டா எந்தப் பயலாவது சொல்வானான்னு.''

''அப்ப ஏன் வந்தா?''

''இதெல்லாம் பணக்கார வீட்டுப் பொம்பளைங்களுக்கு ஒரு பொழுதுபோக்கு— ஆம்பளைப் பசங்க கூட இப்படி ஒரு விளையாட்டு விளையாட...!''

''இந்த விளையாட்டை விளையாடறதால அவளுக்கென்ன லாபம்யா?''

''இதை மெனக்கெட்டு எனக்குப் போன் பண்ணிப் பேசிட்டிருக்கியே? உள்ளுக்குள்ளே கிடந்து குழம்புறியே...! உன்னை இப்படி ஒரு பாடுபடுத்தத்தானே வந்தா! அவ வந்த காரியம் நிறைவேறிடுச்சே...!

''நீ சொல்றதை என்னாலே ஏத்துக்க முடியலை... என்னை எதுக்கு அவ பாடுபடுத்தணும்... எனக்கும் அவளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாதே. நானும் அவளும் ஒருத்தருக்கொருத்தர் முழுக்க முழுக்க அந்நியர்கள்... என்கூட வந்து அதனால் இப்படி வந்து விளையாடிட்டுப் போக வேண்டிய அவசியம் இல்லேன்னுதான் எனக்குத் தோணுது... அதனால சொல்றேன்— ஷி இஸ் சீரியஸ் வுமன். விளையாட்டுக்காக என்கிட்டே கன்சல்ட் பண்ண வரலை அவள்...''

''எனக்கு ரொம்பத் தெரிஞ்ச ஒரு பணக்கார பொம்பளையைப்பத்தி ஒரு ரகசியமான விஷயம் சொல்றேன்— அதில் தெரியும், பணக்காரிகள் நெனைச்சா ஆம்பளைகள்கூட எப்படி இருதயமே இல்லாமே



விளையாடுவார்கள்னு...! திலகராஜா—முப்பது வயசான பயங்கர பணக்காரி ஒருத்தி இருக்கா. ரொம்ப ரொம்ப அழகானவ. கல்யாணமானவ. வாழ்க்கையிலே அவளுக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. என்னென்ன வசதிகள் ஒருத்திக்கு வேணுமோ— அதுக்கு மேலேயே வசதி உள்ளவள். அவளோட ரொம்பப் பெரிய பொழுதுபோக்கு என்ன தெரியுமா? இங்கிலீஷ் பேப்பர்ல அடிக்கடி 'மணமகன் தேவை'ன்னு விளம்பரம் குடுக்கறது! அதுவும் விளம்பரம் சாதாரணமாவா குடுப்பா! நோ, ஆயிரம் ரூபா செலவழிச்சு அட்டகாசமா குடுப்பா! பணம் கொட்டிக் கிடக்கிற ஒரு அழகான இளவரசிக்கு; உலகெல்லாம் சுற்றிய நடனக் கலை தெரிந்த ஒரு பெண்ணுக்கு; காரும் பங்களாவும் நிறைய வைத்திருக்கிற ரூபவதிக்கு நல்ல உள்ளம் படைத்த மணமகன் தேவை. ஜாதி, மதம், வேலை, தொழில் எதுவும் முக்கியம் இல்லை. குணம்தான் முக்கியம். பொருத்தமானவர்கள் முழு விபரங்களுடன் எழுதவும்னு ஒரு விளம்பரம் குடுப்பா பார்— ஆம்பளைகள் நான் நீன்னு போட்டி போட்டுக்கிட்டு அப்ளிகேஷன்கள் போடுவான்கள்— பெரிசு பெரிசா சுயபுராணம் பாடி ... பெரிசு பெரிசா கற்பனையெல்லாம் வேற பண்ணிப் பானுங்க... அவளைக் கல்யாணம் பண்ணிக்கிற மாதிரியும்; அவகூட கார்ல போகிற மாதிரியும்...! அந்தப் பணக்காரி அத்தனை அப்ளிகேஷனையும் படிச்சிப் படிச்சி சிரிப்பா சிரிப்பா சிரிப்பா! ரொம்ப குஷியா இருக்கும் அவளுக்கு அதையெல்லாம் படிக்கறதுக்கு... படிச்சி முடிச்ச அப்புறம் பாவமாகவும் இருக்கும்! ஏமாந்த சோனகிரிகள் கடைசியில் ஏமாந்து போகப் போகிறார்கள் என்ற சந்தோஷமாகவும் இருக்கும் அவளுக்கு... ஒரு நாள் அப்ளிகேஷன்களை கிழித்துப் போட்டுவிட்டு அடுத்து ஒரு விளம்பரம் குடுப்பதற்குத் தயாராகிக் கொண்டிருப்பாள். பேப்பரில்

தான் குடுத்த விளம்பரம் வரும்போது ஜாலியாக அதைப் படித்துப் பார்த்துவிட்டு வரப் போகிற விண்ணப்பங்களுக்காகக் காத்திருப்பாள்... இதுக்கு நீ என்ன சொல்றே...? இப்படி ஒரு பொய்யான விளம்பரம் குடுத்து ஆம்பளைகளை ஏமாத்தி அந்தப் பணக்காரிக்கு என்ன ஆகப் போவுது? ஒண்ணும் ஆகப் போறதில்லை. ஆனாலும் ஒரு ஜாலி! ஆம்பளைங்களை ஏமாத்தறதில் ஒருகுஷி— இது பணக்காரப் பொம்பளைங்களோட ஒரு மாதிரியான சைக்காலஜி திலகராஜ்! இவ்வளவு பெரிய மேதையான நீயே ஏமாந்திட்டே பாத்தியா! இந்த நோக்கத்தில்தான் அவள் உன்னைச் சந்திக்க வந்தா. அவள் வந்த நோக்கம் நிறைவேறிடுச்சி!''

கேசவமூர்த்தி பெரிய பிரசங்கமே நடத்தி முடித்தார்.

''நீ இவ்வளவு சொல்றே! அதனாலே நீ சொல்ற மாதிரி இருக்கலாமோன்னு எனக்கும் தோணுது. ஆனா —அந்தத் தேன்மொழி அட்ரஸ் குடுத்திருக்காளே... அந்த அட்ரஸ் பொய்யா இருக்குமா?'' திலகராஜ் கேட்டார்.

''வேணும்னா இப்பவே வா. நீயும் நானும் அந்த அட்ரஸ்ல போய்ப் பார்ப்போம். அப்படி ஒரு அட்ரஸ்ல தேன்மொழின்னு ஒருத்தி நிஜமாகவே இருந்திட்டா நான் என் ஒரு பக்கத்து மீசையை எடுத்திடறேன்!''

## 4

படித்து முடித்த ரேவதி தோழி ஆனந்தியைப் பார்த்துக் கேட்டாள், ''இவ்வளவுதானா இந்த சேப்டர் —முடிஞ்சிருச்சி?''

''இவ்வளவுதான்.''



''அப்ப அந்த போலீஸ்காரர்— தேன்மொழியைப் பத்தி திலகராஜ் சொன்னதை அப்படியே இக்னோர் பண்ணிட்டார்?''

''யெஸ்.''

''அதிர்ஷ்டம்தான் தேன்மொழிக்கு... ரைட்டாயல பெரிய மனோதத்துவ நிபுணர்கிட்டே போயி கொலை பண்ண ஆலோசனை கேக்கறா... அதை அந்த சைக்கலாஜிஸ்ட் உடனே போலீஸ்ல கம்ப்ளெயிண்ட் பண்றார். போலீஸ் அதை நம்ப மாட்டேங்குது.''

''பாத்துக்க நம்ம போலீஸ் டிபார்ட்மெண்ட்டோட லட்சணத்தை...!''

''சரி ஆனந்தி; மறுபடியும் கேக்கறேன் உன்னை. உண்மையில் எதுக்காக தேன்மொழி திலகராஜ்கிட்டே ஆலோசனை கேட்டுட்டுப் போறா?''

''அதை மட்டும் கதை முடிவில்தான் சொல்வேன்! அருமையான சஸ்பென்ஸ்!''

''அது சரி; திலகராஜ்கிட்டே அந்த க்ரைம் பிராஞ்ச் கேசவமூர்த்தி யாரோ ஒரு பணக்காரியைப் பத்தி ஒரு விஷயம் சொல்றதா எழுதியிருக்கியே— அந்த விஷயம் சும்மா நீயா கற்பனை பண்ணி எழுதினியா; இல்லே— நிஜமாவே அப்படி ஒருத்தி இருக்கறதா கேள்விப்பட்டு எழுதினியா?'' ரேவதி கேட்டாள்.

''நிஜமாவே அப்படி ஒரு லேடி இருக்காடி...!''

''நமக்குத் தெரிஞ்சவளா?''

''உனக்குத் தெரியாது அவளை.''

''நிஜமாவே இப்படி கூடவா ஒருத்தி இருப்பா?''

''இருக்காளேடி!''

"ஒவ்வொரு சமயத்லே இந்த உலகத்தை நெனைச்சா இதனாலேதான் பயமா இருக்கு எனக்கு... நீபாட்டுக்கு எழுதறே— ஒரு பொண்ணு கொலை பண்றதுக்குத் திட்டம் தீட்டுறான்னு... இதைப் படிச்சிட்டு எவளாவது அதே மாதிரி ப்ளான் பண்ணினா என்ன பண்றது? தயவு பண்ணி இனிமே இந்த மாதிரி பொம்பளைங்க கொலை பண்ணப்போகிற கதையெல்லாம் எழுதாதே ஆனந்தி!" ரேவதி சிறிய கோபத்துடன் பேசினாள்.

"ஏன்— ரியல் லைஃப்ல பொம்பளைங்க கொலையே பண்ணினது இல்லையா?"

"எங்கேயோ ஒருத்தி பண்ணியிருக்கலாம் – அதைப் போட்டு மெனக்கெட்டு எழுதணுமா என்கிறதுதான் என் கேள்வி?— உதாரணத்துக்கு இன்னொன்னு சொல்றேனே— நம்ம ராணியோட அக்காபத்தி ஒரு மோசமான செய்தி உண்டு. அவளுக்கு அவளோட கணவரோட தம்பிகிட்டேயே இம்மாரல் உறவு உண்டுன்னு... இது எங்கேயோ யாரோ ஒருத்தி பத்தின செய்தி. உடனே இந்தச் செய்தி வைத்து கதை எழுதி சமூகத்ல பரப்பி விடக் கூடாது... என் பாயிண்ட்— அதுதான்."

"நல்லவேளை, ஞாபகப்படுத்தினே! என்னோட அடுத்த நாவல் ராணியோட அக்காவைப் பத்திதான்! ஏன்னு கேளு— ராணியோட அக்காவுக்கு யார் கிட்டேயோ இம்மாரல் காண்டாக்ட் இருக்கிறதைப்பத்தி எனக்குக் கவலையே கிடையாது ரேவதி. ஆனா— நம்ம ராணி ஜாதி மதம் பார்க்காமே ஒருத்தனை லவ் பண்ணி அவனையே கல்யாணம் செய்துக்க ஆசைப்பட்டப்ப அவ அக்கா என்ன அழிச்சாட்டியம் பண்ணினா... காதலிச்சதையே பெரிய பாவம் என்கிற மாதிரிதானே அத்தனை பேச்சுப் பேசினா... நம்மையும் சேர்த்துத் திட்டினாளே! காதல் என்கிறதே ரொம்ப இம்மாரல் விஷயம் என்கிற மாதிரி பேசினாளே— உண்மையில்



யாருடி இம்மாரல்...?! உண்மையில் யார் பித்தலாட்டக் காரி? அந்த மாதிரியான பித்தலாட்டக்காரிகளைப் பத்தி நாம் எழுதுவோம்!"— ஆனந்தி மிகவும் சினம் பொங்கப் பேசினாள்.

"சரி; இப்ப— இந்தத் தேன்மொழியோ; இல்லை அவளோட ஃப்ரண்ட் ராதிகாவோ என்ன பித்தலாட்டம் செஞ்சாங்கன்னு அவங்க கொலை பண்ணப் புறப்பட்ட மாதிரி கதை எழுதக் கிளம்பிட்டே?"

"பைத்தியம்! அவளுங்க பித்தலாட்டக்காரிகள் இல்லைடி. அந்த சிவஞானம் என்கிற ராமகிருஷ்ணன் தான் பெரிய பித்தலாட்டக்காரன்! ஒரு அறியாத சின்னப் பொண்ணு பாத்ரூம்ல குளிக்கிறதை விலஸ்தை கெட்டு போய் எட்டிப் பாத்துட்டு இன்னைக்கு பெரிய இவன் மாதிரி "இளைஞர் நல் ஒழுக்கம் மன்றம்"ன்னு ஒன்னு ஆரம்பிச்சி தலைவனா இருந்து நடத்திக்கிட்டு வரானே— அந்தப் பித்தலாட்டக்காரனை முகமூடியைக் கிழிச்சி—அவனைத் தீர்த்துக் கட்டற கதைடி இது! இதை எழுதறதுக்கு எத்தனை ஐடியா போட்டு எப்படியெல்லாம் புதுமையா எழுதலாம்ன்னு யோசிச்சி யோசிச்சி எழுதிக்கிட்டிருக்கேன்— ரொம்ப லேசா கேட்டுட்டியே—எப்படி இப்படி ஒரு கதையை எழுதப் புறப்பட்டுட்டேன்னு... அப்படியெல்லாம் கேக்காதே ரேவதி..."

"இல்லை ஆனந்தி; எதுவும் தப்பான அர்த்தத்ல உன்னை நான் இப்படிக் கேக்கலை."

"—இந்தக் கதையை மட்டும் இல்லை; எல்லா கதையையுமே உயிரைக் குடுத்துத்தான் எழுதறேன்.— அதாவது வித் ஃபுல் இன்வால்வ்மென்ட்!"

"அதை நான் ஒண்ணும் குற்றமா சொல்ல லையே..."

"கொலை பண்றது பொம்பளையா ஆம்பளையா என்கிறதைப் பத்தி எனக்குக் கவலையே கிடையாது. கொலை செய்யப்படுவது யார்? அதுதான் என்னுடைய குறிக்கோள்! பித்தலாட்டக்காரர்களை அடையாளம் காட்டவேண்டும் அல்லது அழிக்க வேண்டும்!"

"சரி; இந்த சிவஞானம் என்ற ராமகிருஷ்ணன் உன் கதையில் எப்படி அந்தத் தேன்மொழியால் கொலை செய்யப்படப் போகிறான்?"—ரேவதி ஆனந்தியின் கோபத்தைக் குறைக்கிற தொனியில் கேட்டாள்.

"ஒரு விஷயத்தை மறந்துட்டியே—அதுக்குள்ளே; ராமகிருஷ்ணனைக் கொலை பண்ணப்போறது தேன்மொழி இல்லைடி...!"

"யெஸ்...யெஸ்...மறந்துட்டேன்..."

"தேன்மொழி திலகராஜை மீட் பண்ணினதுக்கு மறுநாளே சேலம் கிளம்பிப் போயிடறா. சேலம்தான் சொந்த ஊர் அவளுக்கு...ராமகிருஷ்ணனை தேன்மொழியின் ஃப்ரண்ட் ராதிகா கொல்லப் போறா..."

அவள் சேலத்துக்காரி! இந்தக் கொலையைப் பண்றதுக்காக மெட்ராஸ் வந்து கமலா என்கிற ஃப்ரண்ட் ஒருத்திகூட அபிராமபுரத்லெ ஒரு வீட்டு மாடியில தங்கி சமைத்துச் சாப்பிட்டுட்டு இருக்கா..."

"அந்தக் கமலா என்கிறவளுக்கு விஷயம் தெரியுமா?"

"தெரியும். அவளும் அந்தக் கொலைப் படையில் ஒருத்திதான்!"

"போச்சுடா! எத்தனை பேர் மொத்தம்?"

"த்ரீ ராதிகா; தேன்மொழி; கமலா. ஆனா—ராதிகாதான் தலைமைச் செல்வி! எல்லாம் அவளோட ஐடியாவும் தியரியும்தான்."



"மூனு பெண்கள் சேர்ந்து இவ்வளவு பெரிய ரகசியத்தைக் காப்பாத்திட முடியுமாடி?"

"முடியும். ஏன்னா?—பைத்தியம் பிடிச்சி செத்துப் போனாளே—கிணத்துல விழுந்து—அவ இந்த மூனு பெண்களுக்கும் உயிர். ராதிகாவுக்குமட்டும் பெரியம்மா பெண் வேற..."

"தேன்மொழி திலகராஜ்கிட்டே அந்தப் பைத்தியம் பிடிச்சி செத்துப்போன பெண்ணோட பெயரை கவிதான்னு சொல்லிட்டுப் போறா..."

"அது திலகராஜை மிஸ்லீட் பண்றதுக்காகச் சொன்ன பெயர்...! கதைப்படி ராதிகவோட பெரியம்மா பெண்ணோட பெயர் நீலா!"

"நீ சொல்றதையெல்லாம் கேட்டா எனக்குப் பைத்தியம் பிடிச்சிடும் போலிருக்குடி ஆனந்தி! இப்படியா போட்டு ஒரு கதையைக் குழப்புவே..."

"என்னை ரொம்ப ரொம்பக் குழப்பின தீம் ரேவதி. இந்தக் கதையை நாலைஞ்சு வருஷமாவே மனசில் வச்சிக்கிட்டு எப்படி இதை எழுதறதுன்னு தெரியாமே தவிச்சிருக்கேன்."

"நீ குழம்பலாம். வாசகர்களைக் குழப்பக்கூடாதுடி கண்ணம்மா!"

"இத்தனைக்கும் கதையைக் கொஞ்சம்தான் சொல்லியிருக்கேன்! இதுக்கே இவ்வளவு குழம்பறே... மிச்சத்தையும் சொன்னா என்ன ஆவாயோ?"

"சரி. ராதிகா மெட்ராஸ் வந்து அபிராமபுரத்லெ ஒரு வீட்ல தங்கி இருக்காள்னு சொன்னியே—மெட்ராஸ்ல அங்கேயாவது அவ வேலை பாக்கிறாளா?"

"சும்மா ஒரு கண்துடைப்புக்கு ஒரு சாதாரண வேலைக்குப் போய் வந்திட்டு இருக்கா...ஆனா—

அவளோட ப்ளான் எப்படியாவது ராமகிருஷ்ணன் வேலை பார்க்கிற கம்பெனியில் ஒரு வேலை கெடச்சி சேர்ந்திடணும்! சேர்ந்திட்டா போதும் -பிறகு மீதியை அவ பாத்துப்பா!''

''ஐடியா நல்லாத்தான் இருக்கு! அட...! ஆனா— அந்தக் கம்பெனியிலேயே இவளுக்கு வேலை கெடைக் கணுமே...''

''அழகான பெண் ட்ரை பண்ணினா எதுதான் கிடைக்காமே போகும்!''

''ராதிகா அவ்வளவு அழகா?''

''என்னை மாதிரி கொள்ளை அழகு!''

''அழகை வச்சி துஷ்ப்ரயோகமா?''

''அழகைப் பாத்து வேலை தர்ற உலகம் ஆச்சே! ஒரு ராஸ்கலை பழிவாங்கற சபதம் வேற இருக்கு மனசில...விட்டுடுவாங்களா?''

''சபதம் இருந்தா வேலை கெடைச்சிடுமா?''

''மாதம் ஒரு தடவை அந்தக் கம்பெனிக்கே நேர்ல போய் வேலை கேக்கறா...வேக்கன்ஸி இருந்தா தெரிவிக்கிறோம்ன்னு சொல்றாங்க...''

''ஒரு சந்தேகம்டி. அந்த ராமகிருஷ்ணனுக்கு ராதிகாவைத் தெரியுமா?''

''தெரியாது. ஆனா ராதிகாவுக்குத் தெரியும்.''

''ராமகிருஷ்ணனுக்கும் சொந்த ஊர் சேலம்தானா?''

''இல்லை. அவனோட ஊர் கோயம்புத்தூர்! கோயம்புத்தூர்ல இருந்துதான் ஒரு சமயம் சேலத்ல இருந்த சொந்தக்காரங்களோட ஊருக்குப் போனான்!



அங்கேதான் பக்கத்து வீட்ல நீலா குளிச்சிட்டு இருந்தப்ப எட்டிப் பார்த்தான். அநியாயமா ஒரு நல்ல பொண்ணைப் பைத்தியமாக்கிச் சாகடித்தான்!''

''ஓகோ—மேட்டர் நடந்த இடம் சேலமா?''

''ஆமா; ஆனா—இந்த மேட்டர் நடக்கிற கால கட்டத்ல ராதிகா ஆத்தூர்ல இருக்கா!—சேலத்ல அந்தக் கலாட்டால்லாம் நடந்து; நீலா செத்துப்போன பிறகு— ராமகிருஷ்ணன் சேலத்ல விருந்தாளியா வந்து தங்கி யிருந்த பக்கத்து வீட்டு லேடியைப் பார்த்துப் பேசின சமயத்லேதான் ராமகிருஷ்ணன் பத்தின விஷயம் பூராவையும் கேட்டுத் தெரிஞ்சிக்கறா... அப்போ இருந்தே அந்தப் பயலை அவனுக்கே தெரியாம பின் தொடர்ந்து நல்லா அவனைக் கவனிக்கிறா... முதல்ல மெட்ராஸ்ல அவன் இருக்கிற வீடு பாத்துத் தங்கலாமான்னு யோசிக்கிறா...தங்கி அவனோட மனைவிகூட நெருங்கிப் பழகி நல்ல ஃபேமிலி ஃப்ரண்ட் மாதிரி பழகி சான்ஸ் கிடைக்கும்போது தீர்த்துக் கட்டிடலாம்னு ப்ளான் போடறா... ஆனா— அதில் ரிஸ்க் இருக்கிற மாதிரி தெரியுது! அதனால அந்த ஐடியாவை ட்ராப் பண்ணிடறா...வேற ரெண்டு ப்ளான் போட்டாலும்; அவளோட மெயின் ப்ளான்— ராமகிருஷ்ணன் வேலை பார்க்கிற ஆபீஸ் லேயே வேலைக்குச் சேருவதுதான்... அதுக்காக ரொம்ப அழகான ஏழைப் பெண் மாதிரி நடிக்கிறா...! ஆறு மாதம் போய் விடாமே நடிக்கிறா! என்னைக்குமே கடவுள் நீதியின் பக்கம்தானே இருப்பார்! ஒரு பெரிய அக்ரமத்தைப் பண்ணவனை சம்ஹாரம் பண்ணியாக ணுமே! இல்லேன்னா நீதி செத்துடுமே!''

''ராதிகாவுக்கு அந்தக் கம்பெனியிலேயே வேலை கிடைச்சிடுது!''

''நிரந்தரமான வேலை இல்லை; தற்காலிகமான லீவ் வேகன்ஸி வேலை! அந்த ஆபீஸ்ல அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட்ல பில்ஸ் டைப் பண்ற லேடி பிரசவத்துக்காக நாலு மாசம் லீவ் போட்டுட்டுப் போயிட்டா. அந்த லீவ் வேலையை ராதிகாவுக்குத் தர்ராங்க!''

''நாலு மாச வேலை.''

''ராதிகாவுக்கு அது போதுமே!''

''கடவுள் வேற அவள் பக்கம் இருக்கார்!''

''நெஜமா நெனைச்சிப் பார் ரேவதி. அந்தக் கம்பெனியில் வேலை; அதுவும் செக்ஸன்லேயே கெடைச்சா எப்படி இருக்கும் ஒருத்திக்கு... நெஜமாவே பிரமிச்சிட்டா ராதிகா. கடவுள் தன் பக்கம் இருக்கார் என்கிறது க்ளியரா தெரிஞ்சிடுச்சி அவளுக்கு... அவளை பொறுத்தவரைக்கும் அவளோட இரையை நெருங்கியாச்சி...''

''ராமகிருஷ்ணன் கூடப் பழகறதுக்கு ரொம்ப ஈஸியா முடியும்.''

''யெஸ்.''

''இங்கே ஒரு சந்தேகம்டி ஆனந்தி...''

''என்ன சந்தேகம்?''

''கோயம்புத்தூர்ல இருந்து சேலத்துக்கு வந்த நீலா குளிக்கிறதை எட்டிப் பார்த்தானே— அப்பவே அந்த ராமகிருஷ்ணனுக்கு கல்யாணம் ஆகியிருந்ததா?''

''நோ... நோ...! அப்ப அவன் பேச்சலர்... ராதிகா அவன் ஆபீஸ்ல ஜாய்ன் பண்ற சமயத்ல அவனுடைய மனைவிக்கு ஒரு குழந்தை இருக்கு...''

''முதல் நாள் அந்த ஆபீஸ்ல வேலையில் ராதிகா ஜாய்ன் பண்ணின அத்தியாயம் இருந்தா குடேன்— அதைப் படிச்சிப் பாக்கறேன்.''



''இரு... போய் தேடிப் பாக்கறேன்'' என்று சொல்லிவிட்டு ஆனந்தி பீரோவைத் திறந்து மேலும் கீழுமாகத் தேடி அந்த அத்தியாயத்தைப் பார்த்து எடுத்துக்கொண்டு வந்தாள்.

''உன் அதிர்ஷ்டம் ரேவதி! அந்த சேப்டர் இருக்கு. இந்தா படிச்சிட்டு இரு. நான் கீழே போயிட்டு வரேன்.''

ஆனந்தி எதற்கோ கீழே இறங்கிப் போனாள். ரேவதி நடந்து கொண்டே அந்த அத்தியாயத்தைப் படித்தாள்.

## 5

சென்னை கதீட்ரல் சாலையில் அந்த ராமகிருஷ்ணன் பணிபுரிகிற நிறுவனத்தில் ராதிகாவும் அவளுக்குக் கிடைத்த தற்காலிக நான்கு மாத டைப்பிஸ்ட் வேலையின் நிமித்தம் அன்று காலையில் ஒன்பதரை மணியளவில் கையெழுத்திட்டு அவளுடைய சீட்டில் உட்கார்ந்தாள். அந்தப் பிரிவில் பெண் என்னும் ஒரே ஒரு பெண் இருந்தாள். மற்றவர்கள் எல்லோரும் ஆண்கள். உதவிக் கணக்காளர் என்ற அறிவிப்பை மேஜையில் முன்னிலைப்படுத்திக் கொண்டு வலது கோடியில் உட்கார்ந்திருந்த ராமகிருஷ்ணனை ராதிகா அடையாளம் அறிந்து சில வினாடிகள் கண்கொட்டாமல் பார்த்தாள். 'வந்துட்டேண்டா வந்துட்டேன்'— ராதிகாவின் மனம் பழி உணர்ச்சியுடன் உள்ளுக்குள் பொருமியது. 'நீதானே என் நீலா குளிக்கும்போது எட்டிப் பார்த்த ராஸ்கல்; நீதானே ஒரு அழகான குடும்பத்தையே சர்வநாசம் பண்ணிய படுபாவி— இன்னிக்கி நீ இளைஞர் நல் ஒழுக்க மன்றமா நடத்தறே...? அடேய்— அசிஸ்டெண்ட் அக்கவுண்டண்ட்! சீக்கிரமா

உன் கணக்கை முடிக்கிறேன்டா— உன் கணக்கை முடிக்கிறேன்...!''

அவ்வப்போது தனது பணியைப் பார்த்துக் கொண்டே ராதிகா ராமகிருஷ்ணனின் தோற்றத்தில் கவனம் செலுத்தியபடியே இருந்தாள். உணவு இடை வேளைக்குச் சிறிது நேரத்திற்கு முன்பு ராமகிருஷ்ண னுக்கு வீட்டில் இருந்து சாப்பாடு கேரியரில் வந்தது. சரியாக ஒரு மணிக்கு உணவு இடைவேளை. அந்தப் பிரிவின் மற்ற ஆண்கள் சாப்பிடுவதற்காக வெளியில் போனார்கள். அந்தப் பிரிவில் பணிபுரியும் மற்றொரு பெண் ராதிகாவை சாப்பிட அழைத்தாள்.

''சாப்பாடு கொண்டு வந்திருக்கியா?'' அந்தப் பெண் கேட்டாள்.

''கொண்டு வந்திருக்கேனே...''

''வா— டைனிங் ரூம் இருக்கு... அங்கே போயிட லாம்.''

ராதிகா எழுந்து அந்தப் பெண்ணுடன் போனாள். டைனிங் ரூமில் இன்னும் பல பேர் சாப்பிட வந்திருந் தார்கள். ராமகிருஷ்ணனும் கேரியரை எடுத்து வந்து உட்கார்ந்தான். ராதிகாவிற்கு தான் ஆட வந்திருக்கும் நாடகத்தைச் செம்மையாக ஆட முடியுமா என்ற நினைப்பு வந்தது. அவள் இந்த நிறுவனத்திற்கு வந்தி ருக்கும் நோக்கமே வேறு. ஒவ்வொரு நிமிஷமும் அந்த நோக்கத்தையே சுமந்து மறைத்துக் கொண்டு எப்படி வேலையில் கவனத்தைச் செலுத்துவது? மனம் முழுவ தும் ராமகிருஷ்ணனை பற்பல விதங்களில் கொலை செய்கிற காட்சியே மறுபடியும் மறுபடியும் ஓடிக்கொண் டிருந்தது. காட்சி காட்சியாக நகர்ந்து உச்சக்கட்டத்தை அடைகிற பொறுமை எதிர்பாராமல் முதல் நாளே அவளில் தகர்ந்து போய் விட்டது. கொலையைத்



தவிர வேறு ஒவ்வொன்றுமே ராதிகாவிற்குச் சலிப்பூட்டி யது. சாப்பிட்டுக் கொண்டிருந்த ராமகிருஷ்ணனை ஓரக்கண்ணால் பார்த்தவாறே தக்காளி சாதத்தை சாப் பிட்டு முடித்தாள். ராமகிருஷ்ணனும் சாப்பிட்டு முடித் தான். திட்டமிட்டிருந்தபடி ராதிகா கையைத் துடைத் துக் கொண்டே ராமகிருஷ்ணனிடம் போனாள்.

''குட் மார்னிங் ஸார்''— புன்னகையுடன் சொன் னாள் ராதிகா.

''ஹலோ— குட்மார்னிங்'' ராமகிருஷ்ணனும் மரி யாதையுடன் சொன்னான்.

''நான்தான் உங்க செக்ஷனுக்கு லீவ் வேக்கன் ஸிக்கு வந்திருக்கேன்.''

''உங்களைப் பாத்தேனே நாந்தான்.''

''மை நேம் இஸ் ராதிகா...''

''ஐ'ம் ராமகிருஷ்ணன்... ஏன் நிக்கறீங்க; இப்படி உட்காருங்களேன்.''

''தேங் யூ ஸார்.''

ராதிகா நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''வேற எங்கேயும் இதுவரைக்கும் உங்களுக்கு வேலையே கிடைக்கலையா?''

''சரியான வேலையா கெடைக்க மாட்டேங்குது ஸார். ஒண்ணு இந்த மாதிரி லீவ் வேக்கன்ஸியில் கெடைக்குது. இல்லேன்னா அம்பத்தூர் ஆவடின்னு கெடைக்குது...''

''உங்களுக்கு இங்கே வீடு எங்கே?'' ராம கிருஷ்ணன் கேட்டான்.

''இங்கேதான்— நந்தனத்தில'' ராதிகா பொய் சொன்னாள்.

''சொந்த வீடா?''

''ஆமா ஸார்—ஏதோ அந்தக் காலத்திலேயே எங்கப்பா கட்டி வச்சிட்டார்...''

''உங்களுக்கு எங்கே ஸார் வீடு?'' ராதிகா மிக மிகக் கவனத்துடன் இந்தக் கேள்வியைக் கேட்டாள்.

''எங்க வீடு—''

ராமகிருஷ்ணன் சொல்ல ஆரம்பித்தான். அப்போது அதே கம்பெனியின் வேறு பிரிவில் பணிபுரியும் பாலகிருஷ்ணன் குறுக்கே வந்துவிட்டான்.

''என்ன ராமகிருஷ்ணா; நீ வருவே வருவேன்னு காத்திட்டிருந்தேன். நீ என்னடான்னா சாவகாசமா இங்கே உக்கார்ந்து பேசிட்டு இருக்கே...''

''இவங்க—நம் ஆபிஸ்க்கு லீவ் வேக்கன்ஸி வேலையில் இன்னிக்குத்தான் ஜாய்ன் பண்ணினாங்க... அதுவும் எங்க செக்ஷன். அதான் பேசிட்டு இருந்தேன்—இரு; இதோ வந்திட்டேன்; ஸாரி ராதிகா—அஞ்சு நிமிஷம் வெளியில் போயிட்டு வந்திடறேன். இவர் கூப்பிடறார்.'' என்றபடி ராமகிருஷ்ணன் எழுந்தான்.

''ஓயெஸ்; போயிட்டு வாங்க. என்னை உங்ககிட்டே அறிமுகம் செய்துக்கத்தான் வந்தேன். நோ ப்ராபளம்''—ராதிகா சொன்னாள்.

ராமகிருஷ்ணன் வெளியேறிப் போனான். ராதிகா அவன் போவதையே வெறித்துப் பார்த்தாள். பிள்ளையார் சுழி போட்டுவிட்ட கர்வம் அவளின் கண்களில் கரை புரண்டது. பைத்தியம் பிடித்து; கிணற்றில் விழுந்து இறந்து போன நீலாவின் ஆத்மா



சாந்தி அடைகிற வேளை நெருங்கிவிட்டது என்ற சந்தோஷத்துடன் ராதிகா அவளுடைய செக்ஷனை நோக்கி நடந்தாள்.

## 6

கீழே போன ஆனந்தி படியேறி வந்தான். ரேவதி கண்களை மூடியவாறு கட்டிலில் சாய்ந்திருந்தாள்.

''என்னடி—அதுக்குள்ளே படிச்சிட்டியா?''

''சின்ன அத்யாயம்தானே— ஒரே நிமிஷத்துல வாசிச்சிட்டேன். ஆனா இந்த சேப்டர் சரியா வரலை ஆனந்தி!'' ரேவதி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''அப்படியா சொல்றே?''

''ராதிகாவை அந்த ஆபீஸ்ல கொண்டு போய் விட்டதும் உனக்கே டென்ஷன் வந்திருச்சிபோல! அதனால அந்த இடமெல்லாம் இயல்பா வரலை! கொஞ்சம் இறுக்கமா இருக்கு.

''ஆமா—நீ சொல்றதும் கரெக்ட்தான். முதல் நாள் ராதிகா ஆபீஸ் போகிற விஷயத்தை எப்படி எழுதறதுன்னே தெரியலை எனக்கு. ரொம்ப ரொம்ப சின்ன சேப்டர்தான் அது. ஆனாலும் அதை எழுதறதுக்குக் கஷ்டப்பட்டேன்! எனக்கும் திருப்தியா வரலை அந்த இடம்...''

''மறுபடியும் ஒரு தடவை அதை மட்டும் திருப்பி எழுது!''

''பார்க்கலாம்...''

''அப்புறம் ராமகிருஷ்ணனுக்கு வீடு எங்கேயாம்?''

''அவனுக்கா—அவனுக்கு வீடு திருவல்லிக்கேணியில—சைடோஜி தெருவுல—க்ரவுண்ட் ஃப்ளோர் வீடு

தான். வீட்ல அவனோட மனைவியும் குழந்தையும் தான். வேற பிக்கல் பிடுங்கல் கிடையாது. தனிக் குடித்தனம்தான். ஆபீஸ் போய்வர ஸ்கூட்டர் வச்சிருக்கான்.''

''வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவனா?''

''பெண் எடுத்த இடம் வசதியான இடம்! ராமகிருஷ்ணனோட மச்சான் ஒருத்தர் சிங்கப்பூரில் இருக்கிறார். அந்த அயல்நாட்டுத் தனம் அவனோட வீட்டில் தெரியும். நிறைய ஃபாரின் நைலக்ஸ்! ஃபாரின் வாட்ச்! ஃபாரின் ஜீன்ஸ்! வெளிநாட்டுப் பைகள்; பேனாக்கள்; எல்லாம் ஃபாரின்... அடுப்புக்கூட ஃபாரின் அடுப்புன்னா—பார்த்துக்கேயேன்...!''

''லக்கி ஃபெல்லோதான்னு சொல்லு...''

''என்ன அதிர்ஷ்டம் இருந்து என்ன செய்ய... ராதிகா கையால சாகப் போறானே...!''

''எல்லாம் அவன் வீசின பந்து! சுவர்ல பட்டு திரும்பி வருது.''

''ராமகிருஷ்ணனோட வாழ்நாளை சித்ரகுப்தன் என்ன ஆரம்பிச்சிட்டான்! அது தெரியாம; புதுசா ஜாய்ன் பண்ணின ராதிகா ரொம்ப ஃப்ரண்ட்லியா பழகறாளேன்னு மகிழ்ந்து போறான். மனைவிகிட்டே கூடப் போய் சொல்றான். முதல் பத்து நாளில் ராதிகாவும் ராமகிருஷ்ணன்கூட ரொம்ப க்ளோஸாதான் பழகறா. பிறகுதான் முழிச்சிக்கிறா. அவன்தான் அவளோட டார்கெட்! அதுக்காக அவன்கூட மட்டுமே நெருங்கிப் பழகினா—நாளைக்கு மர்டர் நடந்த பிறகு; ராதிகா ராமகிருஷ்ணனுக்கு ரொம்ப க்ளோஸ் ஃப்ரண்டுன்னு ஆபீஸ்ல வேலை பாக்கறவங்க யாராவது சொன்னா—போலீஸ் இவளைக் கூப்பிட்டு தீவிரமா விசாரிச்சா என்ன பண்றது? அதனாலே



ராதிகா சட்டுனு ராமகிருஷ்ணன்கூட ஆபீஸ்ல ரொம்ப பேசறதையெல்லாம் நிறுத்திக்கறா! அதுக்குப் பதிலா— மத்தவங்ககூட ரொம்ப நெருங்கிப் பழக ஆரம்பிச்சிடறா! ஆனா; வெளியில் வேற யாரைப் பார்த்தாலும் பேசமாட்டா. அந்தப் பயல் ராமகிருஷ்ணனை வெளியில் எங்கே பாத்தாலும் நிக்க வைத்தே பேசுவா! ரெண்டு மூணு தடவை அவனும் அவளும் டிரைவ்—இன் கூடப் போறாங்க. அவ்வளவு திக் ஃப்ரண்ட் ஆயிடறாங்க!''

''இது ஆபீஸ்ல யாருக்கும் தெரியாதா?''

''தெரியாது. தெரியக்கூடாது என்கிறதுதானே ராதிகாவோட பிளானே!''

''ஏதோ செஸ் விளையாட்டு விளையாடுகிற மாதிரி இருக்கு.''

''சரி; அதே ஆபீஸ்ல ஜாய்ன் பண்ணியாச்சு. ராமகிருஷ்ணனோட வெளியில நெருங்கிப் பழகியாச்சி... இனி—ராதிகாவோட அடுத்த மூவ் என்ன?''

''அவனை ஒரு ஞாயிற்றுக் கிழமை யாருக்கும் தெரியாம மகாபலிபுரம் கிளம்பி வரச் சொல்லிக் கூட்டிட்டுப் போய் அங்கே வைத்தே அவனைத் தீர்த்துக் கட்டிடணும். அதான் ராதிகாவோட பிளான்... ஆனா; யோசிச்சிப் பார்த்தப்ப அந்த ப்ளானை வேண்டாம்னு ஒதுக்கிடறா...''

''ஏன்? யாருக்கும் தெரியாதே அவள் மகாபலிபுரம் போறது?''

''அது தெரியாது. ஆனா மகாபலிபுரத்ல அவனைத் தீர்த்துக் கட்டணும்னா எங்கேயாவது ரூம் எடுத்து கொஞ்ச நேரமாவது தங்கணும்... ரூம்ல இருக்கிற கொஞ்ச நேரத்திலேயே ராமகிருஷ்ணனை கொன்னுப்பிடலாம் ஆனா—ரூம் கொடுக்கிற ஹோட்டல்காரனுக்கு

ராதிகாகூட வந்தது தெரியுமே...ஒரு பெண்கூட வந்தான்னு விஷயம் உடனேயே எஸ்டாப்ளிஷ் ஆயிடுமே... அந்த ஒரு பாயிண்ட் போதுமே போலீஸ்காரங்களுக்கு...கொலை பண்ணினது பொம்பளைன்னு தெரியவே கூடாது. அதான் ராதிகாவோட அக்யூரேட்ப்ளான்!''

''அவ்வளவு அக்யூரேட்டர் மர்டர் பண்றது லேசில்லை ஆனந்தி.''

''கஷ்டம்தான்! ஆயிரம் கஷ்டம் வந்தாலும் ராதிகா அவளோட லட்சிய குற்றத்தைச் செஞ்சே ஆகணுமே... அந்தப் பயலை பழிக்குப் பழி வாங்கியே தீரணுமே...!''

''அவன் மனைவிதான் பாவம்! சின்ன வயசிலேயே விடோ ஆகப்போறா!''

''இன்னொரு சேப்டர் தரேன். படிச்சிப் பார்'' ஆனந்தி சொன்னாள்.

''வேண்டாம் தாயி! வேண்டாம். இப்பவே நேரமாயிடுச்சி, நான் நாளைக்கு வந்து மிச்சத்தைப் படிக்கிறேன்...'' ரேவதி வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டே சொன்னாள்.

''எப்படி இருக்கு கதை?'' ஆனந்தி ஆர்வத்துடன் கேட்டாள்.

''நீ எழுதினதைப் படிக்கிறதைவிட, நீ சொல்றதைக் கேக்கறப்பத்தான் ஜோரா இருக்கு!''

''சொல்றபோது இன்னும் பர்சனல் எனெர்ஜியோட பேச முடியாது இல்லையா?''

''உன்னோட மத்த கதைகளில் நீ இவ்வளவு தூரம் இன்வால்வ் ஆனது கிடையாதே...''

''அதுவும் ஒரு காரணம்.''



''சரி. நாளைக்கு வரேன்...''

''கண்டிப்பா வரணும்...''

''கண்டிப்பா வரேன். பை...பை...''

ஆனந்தி ஜன்னல் வழியாக தெருவைப் பார்த்தாள். ரேவதி வேகமாக நடந்து செல்வது தெரிந்தது. சிறிது நேரம் ஆனந்தி கண்களை மூடிக்கொண்டு நின்றாள். நாவலின் வேறு சில அத்தியாயங்கள் அவளின் நினைப்பில் வந்தன. நாவலில் அவளுக்குப் பிடித்த ஒரு அத்தியாயத்தை எடுத்து ஆனந்தி கட்டிலில் படுத்தபடி படிக்கத் தொடங்கினாள்.

# 7

மெரினா ரெஸ்டாரண்ட்டின் மாடியில் கடலில் புரளும் அலைகளைப் பார்த்தவாறே ராமகிருஷ்ணனும், ராதிகாவும் ஐஸ்கரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

''நீ நம்ம ஆபிஸ்ல ஜாய்ன் பண்ணி மூணு மாதம் தான் ஆகியிருக்கு. ஆனா எவ்வளவோ நாள் ஆயிட்ட மாதிரி இருக்கு...'' ராமகிருஷ்ணன் ரொம்பவும் மனம் நெகிழ்ந்து சொன்னான்.

''அவ்வளவு டீப்பா பழகிட்டோம்!'' ராதிகா மிகவும் சாகசமான உள் மனதுடன் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

''நெனைச்சா எனக்கே ஆச்சர்யமா இருக்கு ராதிகா. எப்படி இவ்வளவு ஈஸியா உன்கிட்டே இன்வால்வ் ஆனேன்னே தெரியலை! அதுவும் கல்யாணமாகி ஒரு பிள்ளையும் பெத்த பிறகு!''

''இன்னும் ஒரே ஒரு மாசம்...! அப்புறம் மறுபடியும் வேறு வேலை தேடணும்!''

''இரு இரு... நான் நம்ம அக்கவுண்டண்ட்கிட்டே ஒரு மாதிரி பேசிப் பார்த்து— உன்னை நம்ம ஆபீஸ்ல கண்டினியூ பண்ண வைக்க முடியுமான்னு முயற்சி பண்ணிப் பாக்கறேன்...''

''வேண்டாங்க! ஏதாவது நெனைச்சிடப் போறாங்க!''

''அதெல்லாம் ஒருத்தரும் நெனைக்கமாட்டாங்க— ஆபீஸ்லதான் நாம் இப்பல்லாம் பேசிக்கிறதுகூட இல்லையே!''

''நான் சொல்லித்தான் நீங்க நிறுத்தினிங்க— ஆபீஸ்ல பேசறதையும் பழகறதையும்! இல்லேன்னா இப்படிப் பேசாமே இருந்திருப்பீங்களா... இதெல்லாம் என்னோட பிளான்— என்னோட முன்னெச்சரிக்கை! ஒருத்தருக்கும் என் மனசு தெரிஞ்சிடக் கூடாது! ஏற்கனவே நான் ஏழை! என் மனசு தெரிஞ்சா அதனாலேயே என்னைப் பத்தி பக்கம் பக்கமா பேசித் தள்ளிடுவாங்க தள்ளி! இப்பப் பாருங்க— நாம பழகறது யாருக்குமே தெரியாது!''

''ஏன் ராதிகா; என்கூட இப்படிப் பழகணும்னு பிளான் போட்டே வந்தியா எங்க ஆபிசுக்கு; வந்த ஒரே மாசத்ல என்னை விழ வச்சிட்டியே!''

''அப்படித்தான்னு வச்சுக்கோங்களேன்! என்ன இப்ப!''— ராதிகா மிக மிக சாமர்த்தியமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

''முதல்ல என் வொய்ஃப்கிட்டே உன்னைப் பத்தி ரெண்டு மூணு தடவை சொன்னேன். ஆனா—உனக்கும் எனக்கும் ஒரு மாதிரியா ரிலேஷன்ஷிப் டெவலப் ஆன அப்புறம் உன்னைப் பத்திச் சொல்றதை டக்குனு நிறுத்திட்டேன்! ஒரு அளவுக்கு மேல பேசினா வம்பு!''



''ஒரு நாள் மகாபலிபுரம் போயிட்டு வரலாமா?'' ராதிகா கேட்டாள்.

''நான் ரெடி... நீ வீட்ல என்ன சொல்லிட்டு வருவே?''

''ஏதாவது பொய் சொல்லிட்டு வர வேண்டியது தான்.''

''ஒரு ஸண்டே போலாமா?''

''யாராவது நம்ம ஆபீஸ் ஆட்கள் பாத்திட்டா?''

''இப்படியெல்லாம் பயந்தா லவ் பண்ணவே முடியாது ராதிகா!''

''பெரிய லவ்வு! லவ் பண்ணி என்னை கல்யாணமா பண்ணப் போறீங்க?'' ராதிகா வேண்டுமென்றே கேட்டாள்.

''சொன்னா நீ நம்பமாட்டே ராதிகா! என் ஜாதகப்படி எனக்கு ரெண்டு தார யோகம்!''

ராதிகா உள்ளுக்குள் லேசாக சினம் கொண்டு சிலிர்த்தாள். ராமகிருஷ்ணன் இத்தனை வேகமாக வீழ்ந்து கொண்டிருப்பதே அவளை மேலும் மேலும் கொதிப்படைய வைத்தது. ரெண்டு தார யோகமா? பொறுக்கி ராஸ்கல்! உனக்கு நியாயப்படி பார்த்தால் ஒரு தாரம்கூட இருக்கக் கூடாது...!

இன்னும் சொன்னால் உன்னை இத்தனை நாள் உயிரோட விட்டு வைத்திருக்கக் கூடாது! பாவி; இரண்டு தார யோகமா; வாழ்கிற யோகமே கிடையாதே உனக்கு! பின் எப்படி இன்னொரு தாரம் வரும்?! இரு இரு; சீக்கிரமே உனக்கு வைக்கிறேன் வழி...!

''என்ன ராதிகா; ஒண்ணுமே பதில் சொல்லாமே உட்கார்ந்திட்டே...?'' ராமகிருஷ்ணன் கேட்டான்.

''அதெல்லாம் நடக்காதுங்க! சும்மா கற்பனையை வளர்த்துக்காதீங்க...''

''பிறகு எதுக்கு இப்படி என்னை விழவைத்தே?''

''நான் நெனைச்சேனா நீங்க இவ்வளவு மோசமா விழுவீங்கன்னு...! என்னமோ எனக்கு உங்களைப் பிடிச்சது. கொஞ்சம் நெருங்கிப் பழக ஆரம்பிச்சேன்... அது உங்களை இவ்வளவு தூரத்துக்குப் பாதிக்கும்ன்னு தெரிஞ்சிருந்தா உங்ககூடப் பழக ஆரம்பிச்சிருக்க மாட்டேன்.''

''இப்ப அதை யோசிச்சி என்ன செய்ய? தலைக்கு மேல வெள்ளம் ஓடப்போகிற நிலைமையில் இருக்கு...! அதைப்புரியாமே நீ என்னத்தையோ பேசிட்டிருக்கே.''

''அது சரிங்க; என்னமோ இளைஞர் நல்லொழுக்க மன்றம்ன்னு நடத்திட்டு வர்ரீங்க போலிருக்கே... அதில் எல்லாம் உங்களுக்கு ஆர்வம் உண்டா?''

''பெரிய ஆர்வம்னு சொல்லிட முடியாது. எனக்கு எப்படியாவது கொஞ்சம் கொஞ்சம் பாப்புலர் ஆகணும் அதுக்காக ஏதாவது பண்ணனும்... அவ்வளவு தான்— இந்த மாதிரி மன்றம்னு ஒண்ணு இருந்தா அந்தப் பேர்ல எவனாவது நாலு பெரிய மனுசன்களை, மந்திரிகளைப் போய் பார்க்கலாம். அதனால் சில பெனிஃபிட்ஸ் உண்டு! இன்னிக்கி இப்படி மன்றம் கின்றம்னு ஆரம்பிச்சாத்தான் நாளைக்குப் பெரிய அளவில் கட்சிகிட்சின்னு டெவலப் பண்ண முடியும்! எவ்வளவு நாளைக்கு இந்தக்கண்றாவி பிடிச்ச வேலையிலேயே காலம் தள்ள முடியும்...! முன்னேற வேண்டாமா ராதிகா வாழ்க்கையில?''

''கண்டிப்பா முன்னேறணும்! சரி போலாமா— இருட்டிடுச்சி'' என்றாள் ராதிகா.



''மறுபடியும் என்னைக்கு வெளியில மீட் பண்றோம்?'' ராமகிருஷ்ணன் கேட்டான்.

''உங்க கவலை இது! என் கவலை இன்னும் ஒரு மாசம்தானே இங்கே வேலை என்கிறதைப் பத்தி...''

''கவலைப்படாதே ராதிகா— அதுக்காக நான் ஏதாவது வழி பண்றேன். இங்கே முடியாவிட்டாலும்... வெளியில் வேற கம்பெனி எதிலாவது உனக்கு ட்ரை பண்ணி வேலை வாங்கித் தரேன். எங்க மன்றத்துப் பொருளாளர் கொஞ்சம் பிக்ஷாட்! அவர்கிட்டே சொன்னா கண்டிப்பா எங்கேயாவது நல்ல வேலை வாங்கித் தருவார், கவலையே படாதே...''

''இப்பத்தான் கவலை எனக்கு கொஞ்சம் குறைஞ்ச மாதிரி இருக்கு ராமகிருஷ்ணன்!''

''நீ வேற கம்பெனிக்குப் போயிட்டாலும் நமக்குள்ளே இருக்கிற உறவு உடைஞ்சி போயிடக்கூடாது ராதிகா.''

''அதெப்படி உடையும்! உடைச்சிட்டுப் போறதுக்கா உறவு கொண்டாடிட்டு இருக்கேன் இப்படி! உங்களுக்கு என்னைத்தெரியாது ராமகிருஷ்ணன்! எனக்குள்ளே பெரிய லட்சியம் ஒண்ணு இருக்கு! எப்பாடு பட்டாவது அதை நிறைவேத்தி ஆகணும் நான்!''

நிஜமாகவே கண்கள் சிவக்க, ராதிகா ஆகாயத்தைப் பார்த்தபடி சொன்னாள்.

''ராதிகா...'' ராமகிருஷ்ணன் மென்மையான குரலில் அழைத்தான்— ராதிகா அவனைப் பார்த்தாள்.

''உன் லட்சியம் என்னன்னு நானும் தெரிஞ்சிக்கலாமா?'' என்றான்.

''நேரம் வரும்போது நீங்களே தெரிஞ்சிப்பீங்க! வாங்க... நேரமாயிடுச்சி போகலாம்...''

''வீட்டுக்குப் போக எனக்கு மனசே வரலை ராதிகா.''

''ஸாரி ராமகிருஷ்ணா! எனக்கு உடனே வீட்டுக்குப் போகணும்போல இருக்கு! நீங்க ஸ்கூட்டர்ல இப்படியே போயிடுங்க... நான் பஸ் பிடிச்சி போயிடறேன்...''

''நாளைக்கு ஆபீஸ்ல பாப்போம்.''

''ஆபீஸ்ல பேசிடாதீங்க...!''

''எனக்குத் தெரியாதா ராதிகா'' இருவரும் எழுந்து வீட்டுக்குக் கிளம்பினார்கள்.

## 8

அத்தியாயத்தைப் படித்து முடித்த ஆனந்தி யாரோ வருகிற சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். ரேவதி தான் சிரித்தபடி வந்து கொண்டிருந்தாள். ஆனந்திக்கு ஆச்சர்யமாகப் போய்விட்டது.

''என்னடி திரும்பி வந்திட்டே?'' என்றாள்

''என்னமோ இன்னிக்கி நைட் உன்கூடப் படுத்துத் தூங்கலாமேன்னு வீட்டுக்குப் போனதும் தோணிச்சி... எங்க அம்மாகிட்டே சொல்லிட்டு சாப்பிட்டுட்டு ஓடி வந்துட்டேன்... கையில் என்ன அது? நீ எழுதின கதையை எடுத்து நீயே படிச்சிட்டு இருக்கியா?''

''ஏன், படிக்கக்கூடாதா? என்னோட முதல் ரீடரே நான்தானே...! நீ எழுந்து போனதும் எனக்கு பொழுது போகலை. மனசு பூராவும் கதையிலேயே இருந்தது. அதான் எனக்குப் பிடிச்ச ஒரு சேப்ட்டரை எடுத்துப் படிச்சிட்டிருந்தேன்.''

''எந்த அத்தியாயத்தை எடுத்துப் படிச்சிட்டிருந்தே!''



ஆனந்தி சொன்னாள்—

''அவ்வளவு ஸ்ட்ராங் ரிலேஷன்ஷிப் ரெண்டு பேருக்குள்ளேயும் வந்திடுதா?'' ரேவதி வியப்புடன் கேட்டாள்.

''ஏண்டி ராதிகா; அங்கே வேலைக்குப் போனதே அதுக்குத்தானே...''

''இல்லையே. ராமகிருஷ்ணனும், ராதிகாவும் ரொம்ப க்ளோஸ்னு ஆபீஸ்ல எல்லாருக்கும் தெரிஞ்சா அது பின்னாடி ஒரு முக்கியமான செய்தி ஆயிடுமே, போலீசுக்கு.''

''ஆபீஸ்ல ரெண்டு பேரும் தங்களோட உறவைக் காட்டிக் கொள்ளவே மாட்டாங்க...! அதனாலே ஆபீஸ்ல யாருக்கும் தெரியாது— இவங்க ரெண்டு பேரும் வெளியில் மீட் பண்றது...''

''ஸோ— ராதிகா க்ளியரா அஸ்திவாரம் போட்டுட்டா...! அவனை அவள் இப்ப எங்கே கூப்பிட்டாலும் ராமகிருஷ்ணன் ஓடி வந்திடுவான்!''

''ஒரு கன்னுக்குட்டி மாதிரி வருவான்!''

''பாவம் நெஜமாவே காதலிக்கஆரம்பிச்சிட்டான்!''

''பெரிய காதல்! இவனுங்களுக்குக் காதலை விட்டா வேற என்ன தெரியும்?''

''ரெண்டு தார யோகம்னு வேற சொல்றார்— காதல் மன்னன்!''

''அல்பனுக்கு வாழ்வு வந்தா ரெண்டு தாரம் என்ன; மூணு தாரம்கூட கட்டிப்பான்! பாவம்; அல்பாயிசில போகப் போறோம்னு தெரியலை பயலுக்கு!''

''ஆக்ச்சுவலா ராதிகா அந்தக் கம்பெனியில் வேலை பார்த்துக்கிட்டு இருக்கும்போதே அவனைக் கொன்னுடறாளா; இல்லே— வேலை போன பிறகு கொல்றாளா?''

"இன்னும் ஒரே ஒரு வாரம்தான் அந்த ஆபீஸ்ல வேலை— அவளுக்கு... அப்பத்தான் அவள் கற்பனையே பண்ணிப் பார்த்திராத ஒரு நல்ல சான்ஸ் கிடைக்குது— ராமகிருஷ்ணனை அவனோட வீட்ல வைத்தே தீர்த்துக் கட்டற அருமையான சந்தர்ப்பம் ராதிகாவைத் தேடி வருது!"

"மகாபலிபுரம் போய் கொல்லலை?"

"இல்லை. அது ரிஸ்க்!"

"வீட்டிலேயே கொல்றது மட்டும் ரிஸ்க் இல்லையா?"

"ராதிகாவுக்கு அதான் பாதுகாப்பு."

"அப்புறம் எப்படி அவன் வீட்டுக்கே போய் கொலை பண்றா?"

"ராதிகாவுக்கு இன்னும் ஏழே ஏழு நாள்தான் வேலை அங்கே. அப்ப ஒரு நாள் காலையில ராமகிருஷ்ணனுக்கு தஞ்சாவூர்ல இருந்து போன் வருது. அவனோட மாமனார் பேசறார். ராமகிருஷ்ணனோட மச்சினியை யாரோ பெண்பாத்திட்டுப் போனாங்களாம். பொண்ணைப் பிடிச்சிப் போயிருச்சாம்! பத்து நாளில் நிச்சயதார்த்தமாம்! அதுக்காக ராமகிருஷ்ணனோட பெண்டாட்டியை உடனே தஞ்சாவூருக்கு அனுப்பி வைக்கச் சொல்றார் மாமனார். ராமகிருஷ்ணனும் நிச்சயதார்த்தத்துக்கு ரெண்டு நாள் முந்தியே மனைவியை தஞ்சாவூர் அனுப்பி வைக்கிறதா மாமனார் கிட்டே போன்ல ராமகிருஷ்ணன் சொல்றான்... அவன் பேசறது ட்ரங்க்கால்!... அதனால் ஆபீஸ் பூராவும் கேக்கற மாதிரி சப்தம் போட்டு ராமகிருஷ்ணன் கத்தின கத்து அதே செக்ஷன்ல கல் மாதிரி உட்கார்ந்திருக்கிற நம்ம ராதிகாவுக்குக் கேக்காமே போயிடுமா? அவதான் காத்திட்டு இருக்காளே...! ப்ளீஸ் ரேவதி அந்த



அத்தியாயத்தை எடுத்துத் தரேன்; எனக்காகப் படிச்சிப் பாரேன்!" ஆனந்தி மிகவும் ஆர்வத்துடன் சொன்னாள்.

"பரவாயில்லை ஆனந்தி! நீயே அதையெல்லாம் சொல்லு. நான் கேக்கறேன்... நீ சொல்றதுதான் எனக்கு டி.வி.யில 'லைவ் டெலிகாஸ்ட்' பாக்கற மாதிரி இருக்கு!"

"பொய் சொல்லாதே."

"நெஜமாடி...! நீ சொல்லேன் –நான் கேட்டுக் கிட்டே இருக்கேன்... மனைவியை ராமகிருஷ்ணன் ரெண்டு நாளில் தஞ்சாவூருக்கு அனுப்பப் போறான்னு போன்ல அவன் பேசினதும் ராதிகாவோட ரியாக்ஷன் என்ன? அதிலிருந்து ஆரம்பி."

"அதை அவ்வளவு ஈஸியா சொல்லிட முடியாதுடி ரேவதி! அந்த நிமிஷம் அவளுக்கு ஏற்பட்ட ரியாக்ஷன் பூராவும்—அவளோட மனசுக்குள் ஏற்பட்டது! வெளியில் வீசற காற்றைப் பற்றி சொல்லிடலாம் ரேவதி! ஆனா கடலுக்குள் சப்தமில்லாமே உருவாகிற புயலைப் பற்றி அவ்வளவு லேசா வார்த்தையில் சொல்லிட முடியாது—தெரியுமா? ராதிகாவோட மனக்கடல்ல அந்த டெலிபோன் பேச்சு பெரிய புயலைக் கிளப்பிடுச்சி! ராமகிருஷ்ணனோட மனைவி தஞ்சாவூர் போகப் போறாள்; வீட்ல அவன் தனியா இருக்கப் போறான்னு தெரிஞ்சதும் அவளுக்குள் கைகளை விரித்துக் கிடந்த கொலைகார ஆக்டோபஸ் சிலிர்த்து எழுந்தது! ராமகிருஷ்ணனைத் தீர்த்துக் கட்டுகிற வேளை வந்துவிட்டது என்பது அவளுக்குத் தெரிந்தது. அன்னைக்கு ஆபீஸ் முடிஞ்சதும் நேரா அபிராமபுரத்ல இருக்கிற தன்னோட வீட்டுக்கு ஒரே ஓட்டமா ஓடறா..."

"ராதிகாவோட இன்னொரு தோழி—கமலாவும் அந்த வீட்லேதானே இருக்கா?"

"ஆமா. அந்தக் கமலாவை உடனே அனுப்பி ராதிகாவோட காலுக்குப் பெரிய சைஸில் ஹவாய் சப்பல் வாங்கிட்டு வரச்சொல்றா... அதுவும் ஆண்கள் போட்டுக்கிற மாதிரி?"

"எதுக்கு?"

"ராமகிருஷ்ணனை கொல்ல அவனோட வீட்டுக்கு போகப் போறா ராதிகா—யாருக்கும் தெரியாமே! அப்படிப் போகும்போது கால்ல அந்தப் பெரிய சைஸ் ஹவாய் சப்பலை மாட்டிட்டுப் போகப் போறா...! போய் அதைக் காலைவிட்டுக் கழட்டவே மாட்டா. அப்ப என்ன ஆகும்? அவளுடைய கால்தடம் அந்த வீட்ல விழவே விழாது! ஹவாய் சப்பலோட தடம்தான் விழும்! அதுவும் பெரிய சைஸ் சப்பல்தடம்...! அந்தத் தடத்தைப் பார்த்து; கொலை செய்ய வந்தது பொம்பளை என்கிற விஷயம் போலீசுக்குத் தெரியாம போயிடும்! ராதிகாவோட கணக்கு அது. எவ்வளவு ஜாக்கிரதையா இருந்தாலும் தடயங்கள் போலீசுக்கு கிடைக்கத்தான் செய்யும். அதனால் கூடிய வரைக்கும் தவிர்க்க முடியாத தடயங்களை தப்பான தடயங்களா ட்விஸ்ட் பண்ணிடனும். அது மிஸ்லீட் பண்ணிடும் போலீசை! நல்லா மிஸ்லீட் பண்ணியாச்சின்னு வச்சிக்க—அப்பப் போலீஸ் போகாத ஊருக்குத்தான் வழி தேடிட்டு அலையும்! ராதிகாவும் ஜோரா 'கேக்வாக்' நடை நடந்து பறந்து தப்பிடலாம்!"

கேட்க கேட்க ரேவதிக்கு வியப்பாக இருந்தது. ஆச்சர்யத்துடன் தோழியையே பார்த்தாள்.

"இதுக்குப் போய் என்ன இப்படியொரு ஆச்சர்யப் பார்வை?" ஆனந்தி ஓர் மகிழ்வான கர்வத்துடன் கேட்டாள்.



"இது கதைப்படிதானே ராதிகாவோட ப்ளான். உண்மையா இதெல்லாம் உன்னோட மூளைதானே—அதான் ஆச்சர்யமா பாக்கறேன்—எவ்வளவு கிரிமினல் மூளை பார் உனக்கு...!"

"ஏய்! உதைப்பேன்— கிரிமினல் மூளைன்னு சொன்னா... என் மூளை ரொம்ப ஷார்ப்! எதைப்பத்தி வேணுமானாலும் அது பிரில்லியண்டா ப்ளான் போட்டு வொர்க் பண்ணும்!"

"உடனே உறிஞ்சி விட்டுக்காதே ரொம்பத்தான்?"

"கதையை மேலே சொல்லவா, வேண்டாமா?"

"சொல்லு சொல்லு... அவளோட கால் அளவுக்குப் பெரிய சைஸ்ல புது ஹவாய் சப்பல் வாங்கச் சொல்லிட்டா ராதிகா..."

"அப்புறம் உள்பாவாடைக்கான நாடா ஆறு மீட்டர் வாங்கிட்டு வரச்சொல்றா. வாங்கிட்டு வந்ததும் அதை மூணு சமமான அளவா கட் பண்றா!

கட் பண்ணின மூணு சம நீளமான நாடாக்களை ஒரு நுனியில் இணைச்சி முடிச்சிப் போடறா. பின் அந்த மூணு நாடாக்களையும் தலைப் பின்னல் நுனிகளைச் சேர்த்து இறுக்கி வலுவான நூல் போட்டு கட்டிடறா! போட்டு அங்கேயும் ஒரு ஸ்ட்ராங் முடிச்சி! ராமகிருஷ்ணனோட கழுத்தை இறுக்கிக் கொல்ல ஸ்ட்ராங்கான உறுதியான கயறு ரெடி!"

"ஏண்டி; எப்படித்தான் இருந்தாலும் ராமகிருஷ்ணன் ஆம்பளை. ராதிகா ஒரு சின்னப் பொண்ணு; அவாபோய் கயறை கழுத்தில் போட்டு இறுக்கிக் கொல்லுவாள்னு சொன்னா— யாருடி நம்புவாங்க? திரும்பி உலுக்கி அவளைக் கீழே தள்ளித் தப்பிக்க அந்தப் பயலுக்கு எவ்வளவு நேரமாகும்?"

"பொம்பளைங்க 'வீக்கர் செக்ஸ்' தான்! ஆனா; அதுக்காக எப்பவுமே பொம்பளைங்க வீக்காவே இருப்பாங்கன்னு நினைச்சிடாதே. லேடிஸ் இப்ப ஐ.பி.எஸ். படிச்சிட்டு வர்ற காலம் இது! அதே மாதிரி பழிவாங்கவும் எந்த ஆயுதத்தை எடுக்கவும் பொம்பளைங்க தயங்காத காலம் இதுடி ரேவதி!"

"இல்லை ஆனந்தி: நான் அதுக்காக சொல்லலை. ராதிகா அந்தப் பயலை கொலை பண்ணப் போற டெக்னிக்—ரொம்ப மேன்லியான டெக்னிக்! நான் என்ன சொல்றேன்னா—நீ வேற மாதிரி அந்த மர்டரைச் சொல்லலாம்! பேசாமே சயனைட் குடுத்திடலாம்! ரொம்ப ஈஸி!"

"இல்லை ரேவதி, சயனைட் இப்ப வேற ஒரு கல்ச்சரோட சிம்பலா ஆயிட்டு வருது! அதனால சயனைட் வேண்டாம்! நானும் யோசிச்சித்தான் எழுதியிருக்கேன். நான் எழுதியிருக்கிற இந்த டெக்னிக்ல பழி தீர்க்கிற ஒன்வயலன்ஸ் வெளிப்படையா நடக்குது. அந்த வன்முறைக் கொலைதான் ராதிகாவோட லட்சியம்."

"சரி—கதையைச் சொல்லு."

"இப்ப மெஷினரி ரெடி! இனி ஆப்பரேஷன்தான்! அபிராமபுரம் வீட்ல ராதிகா ஒத்திகைகூடப் பண்ணிப் பாத்திட்டா... ஷி இஸ் ரெடி!"

"ராமகிருஷ்ணன் மனைவியை தஞ்சாவூருக்கு அனுப்பிட்டானா?"

"அன்னிக்குத்தான் அனுப்பப் போறான்! ராதிகாவுக்கும் அந்த ஆபிஸ்ல இன்னும் நாலு நாள்தான் வேலை! பிரசவத்துக்கு லீவ் போட்டுட்டுப் போன லேடி லீவ் முடிஞ்சி வந்து ஜாய்ன் பண்ணப் போறா."



"ராதிகாவுக்கு அந்த ஆபிஸ்ல அதுக்கு மேல வேலை பார்க்கறது நோ சான்ஸ்."

"நோ சான்ஸ்?"

"தன் மனைவி தஞ்சாவூர் போறதை ராமகிருஷ்ணன் ராதிகாகிட்டே தனியா மீட் பண்ணிச் சொல்றானா?"

"இல்லை! அந்த ரெண்டு நாள் அவன் ரொம்ப பிஸி! மனைவிக்கு தஞ்சாவூர் போக ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ்ல டிக்கெட் ரிசர்வ் பண்ணவும்; அவள் கிளம்பி வரும் மெஸேஜை தஞ்சாவூருக்கு போன் போட்டுச் சொல்லவும்; மத்த ஏற்பாடுகள் செய்யவுமே நேரம் சரியா இருந்திச்சி! ராதிகாவும் தயாராகணுமே! அன்னைக்கு சாயந்தரம் நாலு மணிக்கே கிளம்பி வீட்டுக்குப் பறந்து போனா... நல்லா தலைக்குக் குளிச்சா. குளிச்சிட்டு ஒரு மணி நேரம் அசையாத படுத்திருந்தா. பின் எழுந்து நல்லா சாப்பிட்டா; காது, கழுத்து, கை இவற்றில் போட்டிருந்த மெல்லிசான நகைகளை கழட்டி பீரோவில் போட்டா! காயாமல் இருந்த தலையை நல்லா இறுக்கமா வாரி தூக்கி உசரமா கொண்டை போட்டா! வழக்கத்துக்கு விரோதமான சைஸ்ல சிகப்புக் கலர்ல ஸ்டிக்கர் பொட்டு வச்சிக்கிட்டா! பிறகு என்ன யோசிச்சாளோ, ஸ்டிக்கரை எடுத்திட்டா! பொட்டு வேணாம்னு தோணிடுச்சி! நல்லா கஞ்சி போட்டு வைத்திருந்த பழைய சாயம் போன நூல் புடவையை கட்டி பவர் இல்லாத மூக்குக்கண்ணாடியை எடுத்து மாட்டிக்கிட்டா. இப்ப அவளை யார் பார்த்தாலும் ராதிகான்னு சொல்லவே மாட்டாங்க! அவளுக்கே ஆச்சர்யமா இருந்தது— நாம் ராதிகா தானான்னு...!

கால்ல பெரிய ஹவாய் சப்பலை மாட்டிக்கிட்டா! புதுசா வாங்கியிருந்த பையை எடுத்து தோள்ல மாட்டிக்கிட்டா. பையில் அந்த நாடாவில் தயாரிச்ச கயிறு!

ரெண்டு காட்டன் காலுறைகள்— புதுசு! காலுறை ரெண்டிலும் ஞாபகமா லேபிள்களை கிழிச்சி நீக்கியிருந்தா! பையில் ஒரு ரேஸ் பற்றின லேட்டஸ்ட் புக்! ஞாபகமா கைக்குட்டை கிடையாது!

"ஒரு சின்ன சந்தேகம்...ஸ்டிக்கர் பொட்டை வச்சிட்டு ஏன் எடுத்திட்டா?"

—ரேவதி கேட்டாள்.

"ஒருவேளை அந்தச் சனியன் பிடிச்ச ஸ்டிக்கர் பொட்டு கொலை நடக்கிற ஸ்பாட்ல விழுந்து தொலைச்சி— அது தெரியாமே ராதிகா காரியத்தை முடிச்சிட்டுக் கிளம்பிட்டா...? போலீசுக்கு ஒரே ஒரு ஸ்டிக்கர் பொட்டு போதுமே!"

"அய்யோ! நெஜமாவே ரொம்பத் திரில்லிங்கா இருக்கு... ராதிகா மர்டர் பண்ற அத்தியாயமும் இருக்கா ஆனந்தி? இருந்தா— ப்ளீஸ் தாயேன்... படிச்சிடறேன்."

ஆனந்தி சந்தோஷத்துடன் எழுந்து போய் அந்த அத்தியாயத்தை எடுத்து வந்து தரவும்; ரேவதி பரபரப்புடன் அதைப் படிக்க ஆரம்பித்தாள்.

## 9

எக்மோர் ஸ்டேஷனில் ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் புறப்படுவதற்கு இன்னும் சில நிமிடங்கள்தான் இருந்தன. வழி அனுப்ப வந்திருந்த ஏராளமான ஜனங்களின் மத்தியில் ரயில் நெடிதாக நின்று கொண்டிருந்தது. ராமகிருஷ்ணன் கீழே பிளாட்பாரத்தில் நிற்க அவனின் மனைவி தூங்கிவிட்ட குழந்தையை மடியில் போட்டுக் கொண்டபடி ஜன்னல் ஓரமாய் சாய்ந்து உட்கார்ந்து கணவனுக்கு சிறு சிறு விஷயங்களைக்கூட திருப்பித்



திருப்பிச் சொல்லி ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தாள். ராமகிருஷ்ணனும் தலையை ஆட்டியவாறு நின்றுகொண்டிருந்தான். தூரத்தில் நின்று ராதிகா ராமகிருஷ்ணனின் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்துக் கொண்டிருந்தாள். அவளைத் தெரிந்தவர்கள் யாராவது பார்த்தால் கூட சட்டென்று இப்போது அடையாளம் தெரிந்து கொள்ள முடியாது. அவளுடைய தோளில் புதிதாக வாங்கிய பை தொங்கிக் கொண்டிருந்தது. சில நிமிடங்கள் நகர்ந்து புத்தகக் கடையில் தொங்கிய புத்தகங்களை நோட்டம் விட்டாள். வாட்சில் மணி பார்த்தாள். எந்த உணர்ச்சி நெரிசலும் இல்லாமல் மிகவும் இயல்பாகவும்; அதே சமயம் தயாரான உடல் நிலையிலும் இருந்தாள். ராமகிருஷ்ணன்தான் ஒரு நூதனமான உணர்வுக் கலவையாக நின்று கொண்டிருந்தான். மனைவி இல்லாமல் தனியாக தான் இருக்கப் போகிற நான்கு நாட்களில் எப்படியும் ராதிகாவை இன்னும் அந்தரங்கமாக நெருங்கிவிட வேண்டும் என மனதில் நினைத்துக் கொண்டிருந்தான். ஏழைப் பெண்தானே... எளிதில் அடைந்துவிடலாம் என நம்பினான். பீரோவில் குவிந்து கிடக்கும் மனைவியின் வெளிநாட்டு நைலக்ஸ் புடவைகளில் நல்லதாக இருக்கிற ஒன்றை எடுத்து ராதிகாவுக்கு கொடுத்து விடலாம் என்றுகூட யோசித்தான்.

"நான் சொல்றது உங்க காதில விழுதா? என்னமோ யோசிச்சிக்கிட்டு இருக்கீங்களே?" அவனின் மனைவி சின்ன கோபத்துடன் கேட்டாள்.

"நீ இல்லாமே எப்படி நாலு நாள் இருக்கப் போறேனோ என்கிற யோசனைதான்! வேறு என்ன யோசனை எனக்கு...?"

"பால்காரியை பால் போட வேண்டாம்னு சொல்லிவிட்டேன். அவபாட்டுக்கு அஞ்சு மணிக்கு வந்து பால்

போடுவா! ஃப்ரிட்ஜ்ல ரெண்டு பாக்கெட் பால் இருக்கு. அதை எடுத்து காய்ச்சி மறக்காமே சாப்பிடுங்க... ஆயாவை நாலு நாளைக்கும் காலையில் எட்டரை மணிக்கு வந்து பெருக்கிப் போட்டுட்டுப் போகச் சொல்லியிருக்கேன். நான் இல்லேன்னு வீடு பூராவும் சிகரெட்டை குடிச்சிக் குடிச்சிப் போட்டுவைக்காதீங்க... ஞாயிற்றுக்கிழமை உங்க மன்றத்துப் பசங்களை வீட்டுக்கு கூட்டிட்டு வந்து கூத்தடிக்காதீங்க... நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும்...''

''நீ போய் சேர்ந்ததும் உங்கப்பாவை போன் பண்ணச் சொல்லு.''

''பண்ணச் சொல்றேன். நீங்களும் பத்திரமா கிளம்பி வாங்க...''

''சிக்னல் போட்டுட்டான்!''

''ஏதாவது சாக்குச் சொல்லி வராமே இருந்துடாதீங்க!''

''லாரி பிடிச்சாவது வந்து சேர்ந்திடுவேன்!''

''ஜாக்ரதை... காலா காலத்ல சாப்பிட்டு உடம்பை பாத்துக்கோங்க.''

''கௌம்பிட்டான். நீயும் பத்திரமா போ.''

வண்டி நத்தையாய் நகர்ந்து நகர்ந்து ஸ்டேஷனை விட்டு இருளில் பிரவேசித்து நகரத் துவங்கியது. ராமகிருஷ்ணன் மனைவியின் திசையில் கையை உயர்த்தி அசைத்துக் கொண்டிருந்தான். ராதிகாவும் ரயில் போகிற திசையில் யாரையோ வழி அனுப்புவது போல கையை ஆட்டியபடி நின்று கொண்டே ஓரக்கண்ணால் தூரத்தில் இருந்த ராமகிருஷ்ணனையும் கவனித்துக் கொண்டாள். அவன் திரும்பி நடக்கத் துவங்குவதற்குள் அவள் திரும்பி அவனை நோக்கி நடந்தாள்... பூட்டப்பட்டிருந்த ஒரு கதவு திறந்துவிட்ட ஆசுவாசத்துடன்



அவனை நோக்கி விரைந்தாள். ராதிகா வருவதை உணராத ராமகிருஷ்ணன் பிளாட்பாரத்தில் நின்ற வேறொரு பெண்ணை லயித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். ராதிகா அவனை நெருங்கி விட்டாள்.

''ஹல்லோ ராமகிருஷ்ணன்'' உரக்கக் கூப்பிட்டாள்.

குரல் கேட்டதும் ராமகிருஷ்ணன் பார்வையைத் திருப்பினான். ஒருகணம் அவனுக்கு அடையாளம் தெரியவில்லை.

ராதிகா எதுவுமே தெரியாதவள் போல கேட்டாள்—

''எங்கே இங்கே வந்தீங்க?''

''என்ன ராதிகா இப்படி ஆள் அடையாளமே தெரியலை... நீ எங்கே இங்கே வந்தே?''

''கும்பகோணத்ல திடீர்னு எங்க மாமா ஒருத்தர் இறந்து போயிட்டார்னு தந்தி வந்தது. எதிர்பாராமே எங்க அண்ணா நேத்துத்தான் கும்பகோணம் கிளம்பிப் போனான். அதனால எங்க அப்பாவையும் அம்மாவையும் இந்த ட்ரெயின்லேதான் அன்ரிசர்வ்ட் கம்பார்ட்மெண்ட்ல ஏத்தி அனுப்பிட்டு வரேன்... நீங்க?''

''ஒனக்குத் தெரியாதா? என் ஒய்ஃப்பும் இன்னிக்குத்தான் தஞ்சாவூர் கிளம்பிப் போறா.''

''இன்னிக்குத்தான் போறாங்கன்னு தெரியாது! சொல்லலையே நீங்க என்கிட்டே...!''

''ஆபீஸ்லேதான் பேசக்கூடாதுன்னு சட்டம் போட்டிருக்கியே நீ! ரெண்டு நாளா நான் ரொம்ப பிசி— அவளைத் தஞ்சாவூருக்கு அனுப்பறதில்.''

''நீங்களும் போயிருக்க வேண்டியதுதானே?''

''நான் செவ்வாய்க்கிழமை கிளம்பிப் போறேன்... அதுக்கு முந்தி டெய்லி ஈவினிங் நாம் ரிலாக்ஸ்டா மீட் பண்ணலாமே...''

''சரி, வாங்க... முதல்ல வெளியே போவோம்...''

ராதிகா வேகமாக நடந்து பிளாட்பாரம் டிக்கெட்டை பரிசோதகரிடம் கொடுத்துவிட்டு வெளியில் வந்தாள். ராமகிருஷ்ணனும் பின்னாடியே வேகமாக டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு வந்தான். மணி ஒன்பது ஆகி இருந்தது.

''நீ எங்கே, உன் வீட்டுக்குத்தானே?'' ராமகிருஷ்ணன் கேட்டான்.

''வீட்டுக்குத்தான்... நீங்க?''

''வீட்டுக்குத்தான் போகணும்...''

''சினிமா கினிமா போகலையா?''

''வீட்லேயே டெக் வச்சிருக்கேனே... அது சரி, ஏன் இப்படி ஏதோ மாறுவேஷம் போட்டவ மாதிரி வந்திருக்கே... காதுல கழுத்துல மூளியா ஒண்ணுமே இல்லாமே வந்திருக்கே... கொண்டை வேற— கெழவி மாதிரி. என்னைக்கும் இல்லாமே கண்ணாடி! நெத்தியில் பொட்டைக்கூடக் காணோம்.''

''இப்பவே மணி ஒன்பது— கிளம்பி தனியா வீடு போய் சேரணுமே— ஏதோ நகைன்னு ஒண்ணு ரெண்டு இருக்கு— அதையும் எவனாவது அறுத்திட்டு ஓடிட்டான்னா என்ன பண்றது? அதான் செயினையும், கம்மலையும் கழட்டி வச்சிட்டேன். அப்பப்ப தலைவலி வரும் எனக்கு. அதான் இந்தக் கண்ணாடி...''

''சாப்பிட்டியா இல்லையா?''

''சாப்பிட்டாச்சி... நீங்க?''

''நானும் சாப்பிட்டாச்சி.''



''ஸ்கூட்டர்லதானே வந்தீங்க?''

''ஆமா.''

''ஞாயிற்றுக்கிழமை எங்க வீட்டுக்கு வர்ரீயா ராதிகா, சாவகாசமா பேசிட்டு இருக்கலாம்...''

''ஞாயிற்றுக்கிழமை எனக்கு வேலை இருக்கே ராமகிருஷ்ணன்!''

''நாலு நாள் நான் ஃப்ரீ.''

''நானும்தான் ஃப்ரீ.''

''எங்கேயாவது சுத்தலாமா?''

''ஞாயிற்றுக்கிழமை எங்க அண்ணா வந்திடுவான்.''

''இப்ப வீட்ல வேற யாரும் இல்லையா?''

''யாரும் இல்லை. நான் மட்டுந்தான்.''

''நானும் உன் வீட்டுக்கு வரட்டுமா?'' ராமகிருஷ்ணன் சும்மா ஒரு குஷிக்காக கேட்டான்.

''ஆசைதான். பக்கத்துப் போர்ஷன்காரங்களுக்கு யார் பதில் சொல்றது?''

''அப்ப நீ வாயேன் என் வீட்டுக்கு'' மறுபடியும் ராமகிருஷ்ணன் அதே குஷிக்காகக் கேட்டான்.

''நெஜமாவே கூப்பிடறீங்க?''

''நெஜமாவே கூப்பிடட்டுமா...''

''பக்கத்து வீட்ல யாராவது பாத்தா உங்களை ரொம்பத் தப்பா நெனைச்சா உங்களுக்குத்தான் அசிங்கம்!''

''எங்க தெருவில இந்த நேரம் எல்லா வீட்லேயும் ஆட்கள் படுத்துத் தூங்கி இருப்பாங்க...எல்லாம் தூங்கு மூஞ்சிப் பயலுங்க!''

"இப்ப உங்க வீட்டுக்கு நான் வந்தா எப்பத் திரும்பிப் போவேன்?"

"பொழுது விடியும்போது நான் கொண்டுபோய் விட்டுடறேன்— ஸ்கூட்டர்ல."

"கண்டிப்பா வரணுமா?"

"உங்க பக்கத்து வீட்டுக்காரங்க நீ திரும்பி வரலேன்னா ஒண்ணும் நெனைக்க மாட்டாங்களா?"

"அதைப் பத்தி ஒண்ணும் கவலையில்லை. நான் சொல்லிப்பேன். ஆனா இந்த நேரத்ல உங்க வீட்டுக்கு வரணுமான்னுதான் யோசிக்கிறேன்."

"ப்ளீஸ் ராதிகா... இன்னைக்கு ஒரே ஒரு நாள் வாயேன்... நீ வந்தா நான் ரொம்ப ரொம்ப சந்தோஷப் படுவேன். கடவுளாப் பார்த்துத்தான் நமக்கு இப்படி ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்திருக்கார். அதை நாம் கொண்டாடுவோமே..." ராதிகா தீவிரமாக யோசிப்பது போல நடித்தாள்.

"வரேன் ராமகிருஷ்ணன்! எனக்கும் ஆசைதான் நைட்ல உங்ககூட உட்கார்ந்து பேசறதுக்கு. ஆனா ஒரு கண்டிஷன்— எந்தக் காரணம் கொண்டும் தொட முயற்சி செய்யக் கூடாது. தனியா நைட்ல வந்திருக்காளே என்கிற தைரியத்ல வரம்பு மீறி என்கிட்டே நடந்துக்கலாம் என்கிற நெனைப்பு சின்னதாகூட வந்திடக்கூடாது ராமகிருஷ்ணன், அது ரொம்ப முக்கியம். நான் ஏழைப் பெண். நாளைக்கு நானும் நல்லவிதமா வாழணும்!"

"என்ன ராதிகா—இப்படியெல்லாம் பேசறே... நான் உன்னோட வாழ்க்கைக்கு என்னைக்குமே உதவியாத் தான் இருப்பேனே தவிர, உபத்திரமா இருக்கவே மாட் டேன்... ஐ லவ் யூ... இல்லேன்னு சொல்லலை. பட்



மை லவ் இஸ் நாட் ஜஸ்ட்! இந்த நம்பிக்கை இருந்தா என் வீட்டுக்கு வா. இல்லேன்னா வேண்டாம்!"

ராதிகா ராமகிருஷ்ணனையே பார்த்தாள். அவன் ராதிகாவையே பார்த்தான். ராதிகா அவனுடைய அழைப்பையே ஏற்றுக் கொண்டது போல லேசாக சிரித்தாள்.

"ஓகே. உங்க வீட்டுக்கு வரேன்..." என்றாள்.

"தேங்க்ஸ்... இரு. ஸ்கூட்டரை எடுத்திட்டு வந்திடறேன்."

"இல்லை... ராமகிருஷ்ணன்; என்னை நீங்க திருவல்லிக்கேணி போகிற பஸ்ல ஏத்தி விட்டுடுங்க. நீங்க வேகமா உங்க ஸ்கூட்டர்ல உங்க வீட்ல போய் இருங்க. நான் தனியா பஸ்ல வரேன்..."

"நீயும் என் ஸ்கூட்டர்லேயே வந்திடு ராதிகா..."

"இல்லை. நான் ஒரு காரணமாகத்தான் சொல்றேன்! நான் பஸ்ல வரேன்."

"சரி, வா. உன்னை பஸ்ல ஏத்தி அனுப்பறேன்."

"உங்க வீட்டுக்கு பெல்ஸ்ரோட் ஸ்டாப்பிங்லே தானே இறங்கணும்."

"யெஸ். அங்கே இறங்கி வா. நான் என் வீட்டு வாசல்லேயே நிக்கறேன்..."

"உங்க ஸ்கூட்டர் முன்னாடிதானே நிக்கும்?"

"ஆமா."

"அதை அடையாளம் பாத்து வந்திடறேன். நீங்க வாசல்ல நிக்காதீங்க!"

"உன் இஷ்டம்."

ஸ்டாப்பிங்கில் நின்று ராமகிருஷ்ணன் ராதிகாவை பஸ் ஏற்றி அனுப்பினான். பின் தன்னுடைய ஸ்கூட்டரில் வீடு நோக்கி விரைந்தான்.

திருவல்லிக்கேணி நோக்கி பஸ் பயணம் ராதிகாவிற்கு மிக நீண்ட வேகத்தைக் கொண்டதாக இருந்தது. அவளுடைய லட்சியக் குற்றத்தின் நிமிடத்தினை நெருங்கிவிட்ட பரவசம் அவளின் கண்கள் வரை நிறைந்திருந்தது. ராதிகா எல்லா விதத்திலும் தயாராகி விட்டிருந்தாள்.

பஸ் பெல்ஸ் ரோடில் நின்றது. நிதானமாக எழுந்து இறங்கினாள். சாலை வெறிச்சோடிப் போயிருந்தது. சைடோஜி தெருவில் திரும்பினாள். இருள் கவிழ்ந்த தெரு ஆள் நடமாட்டம் அற்று இருந்தது. ராதிகா புடவையை இழுத்துப் போர்த்தியபடி நடந்தாள். தூரத்தில் ஒரு வீட்டின் எதிரில் ராமகிருஷ்ணனின் ஸ்கூட்டர் நிற்பதைக் கவனித்துக் கொண்டே நடந்தாள். எந்த வீட்டு வாசலும் திறந்திருக்கவில்லை. சில வீட்டு ஜன்னல்களில் வெளிச்சம் தெரிந்தது. ராதிகா மிக சுதந்திரமாக நடந்து வீட்டை அடைந்தாள். கதவு லேசாக ஒருக்களித்துத் திறந்திருந்தது. ராதிகா முழங்காலால் கதவைத் தள்ளித் திறந்து உள்ளே நுழைந்தாள்.

''வருக! வருக...'' ராமகிருஷ்ணன் அவளை அதிகமான பிரவேசத்துடன் உணர்ச்சிவசப்பட்ட குரலுடன் ராதிகாவை வரவேற்றான்.

ராதிகா காலில் அணிந்திருந்த ஹைவாய் செருப்புக்களுடன் நடந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''குடிக்கத் தண்ணி வேணுமா?'' ராமகிருருஷ்ணன் அவளுக்குச் சிறிது வியர்த்துப் போயிருந்ததைக் கண்டு கேட்டான்.



''முதல்ல கதவைப் பூட்டுங்க...'' என்றாள். அவன் திரும்பி கதவைப் பூட்டினான்.

''ஏதாவது டிரிங்க்ஸ் சாப்பிடுறியா ராதிகா?''

''கொஞ்சம் நேரம் ஆகட்டும்.''

''எனக்கு இது நெஜம்தானான்னு சந்தேகமா இருக்கு.'' ராமகிருஷ்ணன் சொன்னான்.

''எதுங்க?''

''நீ நிஜமாவே எங்க வீட்டுக்கு வந்திருக்கியான்னு.''

''எதிர்பாராத மூமெண்ட்தான். இல்லே...''

''கற்பனையே பண்ண முடியாத மூமெண்ட்''

''ஸ்பிரிட்ஜ்கூட வச்சிருக்கீங்களே...''

''எல்லாம் என் பிரதர்-இன்-லா வாங்கித் தந்தது.''

''பரவாயில்லை. அதிர்ஷ்டக்காரர்தான்—வீடியோல போடறதுக்கு என்ன கேசட் வச்சிருக்கீங்க?''

''சொன்னா தப்பா நினைக்க மாட்டியே.''

''முதல்ல சொல்லுங்க.''

''என் ஒய்ப் ஊருக்குப் போறாளேன்னு; நான் மட்டும் பாக்கிறதுக்குன்னு கொஞ்சம் ஒரு மாதிரியான கேசெட் எடுத்திட்டு வந்திருக்கேன்...''

''நாளைக்குப் போட்டுப் பாத்துக்குங்க...''

''ராதிகா, நான் உனக்கு ஒரு பரிசு தரலாமா?''

''என்ன பரிசு?''

''என் மனைவிகிட்ட எக்கச்சக்கமான ஃபாரின் நைலக்ஸ் புடவை இருக்கு. இன்னும் அவள் கட்டாத புதுப் புடவையே இருக்கு. அதில் ஒண்ணு எடுத்துத் தரேன் உனக்கு...''

''ஊரிலிருந்து வந்ததும் பார்த்திடப் போறாங்க...''

''பாக்கமாட்டா... அப்படிப் பார்க்கும்போது வேலைக்காரி திருடியிருப்பான்னு சொல்லிடறேன்...''

''வேலைக்காரி வருவாளா?''

''காலையில் எட்டு மணிக்கு வருவா—பெருக்கறதுக்கு''

''பால்காரி வரமாட்டா... நாலு நாள் எனக்கு வேண்டிய பால் மட்டும் இருக்கு... புடவை பரிசு தரேன்னு சொன்னேன். அதுக்குப் பதில் சொல்லலையே.''

''வேண்டாங்க... என்னத்துக்கு?''

''ப்ளீஸ் ராதிகா... ஒண்ணே ஒண்ணு தரேனே...''

ராதிகா சிறிது யோசனை செய்துவிட்டு, ''ரொம்ப ஆசைப்பட்டு கேக்கறீங்க! ஒரே ஒரு புடவை மட்டும் தாங்க! உங்களுக்காக வாங்கிக்கறேன்...''

ராமகிருஷ்ணன் பீரோவின் இரண்டு கதவுகளையும் அகலமாகத் திறந்து காட்டினான்.

''வந்து உனக்கு வேண்டியதை எடுத்துக்க ராதிகா.''

ராதிகா எழுந்துகொள்ளவில்லை. ''புடவைகளை இங்கே எடுத்து வந்து போடுங்க... பிடிச்சதா பார்த்து செலெக்ட் பண்ணிக்கிறேன்...''

''உனக்கு இல்லாததா?''

ராமகிருஷ்ணன் இரண்டு கைகளிலும் நைலக்ஸ் புடவைகளை அள்ளி எடுத்து வந்து மேஜையில் போட்டான். சில புடவைகள் கீழே விழுந்தன... ராதிகா ஒன்றையும் தொடவில்லை. பேசாமல் அமர்ந்திருந்தாள்.



''உனக்கு எது வேணும்னு எடுத்துப் பார் ராதிகா.''

''என்ன அவசரம்...? உங்க பேண்ட் ஷர்ட் எல்லாத்தையும் கொண்டு வந்து போடுங்களேன்... அதையும் பாக்கிறேன்!'' என்றாள்.

''ஓயெஸ்!''

ராமகிருஷ்ணன் ஆர்வத்துடன் அவனுடைய உடைகளையும் எடுத்து வந்து ராதிகாவின் முன் போட்டான்.

''ஒவ்வொரு ஷர்ட்டும் ரொம்ப காஸ்ட்லி ராதிகா.''

''பிரதர்— இன்— லா வாங்கிட்டு வந்ததா?''

''ஆமாம்— சிங்கப்பூரில் இருந்து!''

''ஏதோ கேசெட் எடுத்து வந்திருக்கீங்களே—ரொம்ப மோசமா இருக்குமா?''

''அப்படி சொல்லித்தான் குடுத்தான்! எப்படி இருக்கோ தெரியலை!''

''போடுங்களேன். ரொம்ப மோசமா இருந்தா நிறுத்திடலாம்.''

ராமகிருஷ்ணன் ஓடிப்போய் டெக்கில் கேசெட்டை செருகி இயங்க வைத்தான். படம் ஆபாசம் இல்லாமல் ஓடத் தொடங்கியது.

''காப்பி, டீ போட தெரியுமா உங்களுக்கு?'' ராதிகா கேட்டாள்.

''வேணுமா?''

''டீ சாப்பிட்டா தேவலை! டயர்டா இருக்கு எனக்கு.''

''ஒரே நிமிஷம் இரு. சூடா டீ போட்டுக்கொண்டு வரேன். அதுவரைக்கும் வீடியோ பாத்திட்டிரு. மோசமா இருந்தா ஆஃப் பண்ணிடு!''

ராமகிருஷ்ணன் வேகமாக சமையல் அறைக்குப் போனான். சரேலென ராதிகாவிற்குள் காத்திருந்த நாகம் தலையை உயர்த்தியது. ராதிகா எழுந்து நின்றாள். பீரோ திறந்து கிடந்தது. புடவைகளும், ஷர்ட், பேண்ட்களும் மேஜையில் நிறைந்திருந்தன. வீடியோவில் படம் ஓடிக்கொண்டிருந்தது. பையில் வைத்திருந்த பாவாடை நாடாக்களை இணைத்து முறுக்கித் தயாரித்திருந்த உறுதியான கயறை ராதிகா எடுத்தாள். சமையல் அறையில் கேஸ் அடுப்புப் பற்ற வைக்கப்படும் சப்தம் கேட்டது. இரண்டொரு நிமிடங்கள் ராதிகா கயறின் இரண்டு முனைகளை இரு கைகளிலும் பிடித்தவாறு நின்றாள். கடிகாரத்தில் மணி பத்தே முக்கால் ஆகியிருந்தது. ராதிகா மெதுவாக சமையல் அறையை நோக்கி நடந்தாள். அவளுக்குத் தேவையான வசதிப்படி ராமகிருஷ்ணன் முதுகைக் காட்டிக்கொண்டு டீ தயாரிக்கும் கவனத்துடன் ராதிகாவைக் கவனிக்காமல் உயரமாக நின்றான். ராதிகா அடி மேல் அடி வைத்து அவனின் பின்னால் நெருங்கினாள். இரண்டு மீட்டருக்கு முறுக்கப்பட்ட கயறு அவளின் தலைக்கு மேல் உயர்ந்தது. சரியாக அளவு பார்த்து ராதிகா கயறை ராமகிருஷ்ணனின் தலைக்கு மேல் வீசி கழுத்தின் முன் புறத்தை அழுத்தி அசுர வேகத்தில் பின்னால் இழுத்துப் பறித்து அவனை அப்படியே நிலைதவறி தரையில் விழ வைத்தாள். அவன் விழுந்த கணத்தில் மின்னலாய் செயல்பட்டு; இடதுகை பற்றியிருந்த கயற்று முனையை இரண்டு கால்களால் மிதித்துக்கொண்டு; வலது முனை கயறை அவனின் கழுத்தை ஒரு சுற்றுச் சுற்றி இரண்டு கைகளாலும் அந்த முனையை மேல் நோக்கி தன் பலம் பூராவையும் குவித்து உயர்த்தி இழுத்தாள். அந்த இறுக்கமான கிடுக்கிப் பிடியில்— ராமகிருஷ்ணனின் கழுத்து இறுகிப் பிழியப்பட்டு நெரிக்கப்பட்டதில்; மறுத்து; பின் அடங்கி ஒடுங்கியது. உடல் துவண்டு



மறுக்காமல் ஓய்ந்துவிட்ட பின்னும் ராதிகாவின் கிடுக்கிப் பிடி நீங்கவில்லை. கால்களின் கீழ் ஒரு முனையும்; கைகளுக்குள் ஒரு முனையும் ராமகிருஷ்ணனின் கழுத்தை நசுக்கியபடி நிலைகொண்டிருந்தன. ராதிகாவுக்கு மூச்சு வாங்கியது. உடம்பெல்லாம் வியர்த்திருந்தது. கண்களை மூடியவாறு நின்றாள். அவளுடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பி நிறைந்திருந்தது. கயறைப் பிடித்திருந்த பிடியைத் தளர்த்தினாள். ஹவாய் செருப்பின் கீழிருந்த இன்னொரு முனையை— காலை நகர்த்தி பார்த்தாள். அவளின் காலடியில் ராமகிருஷ்ணன் வாய் பிளந்து கண்கள் பிதுங்கி பிரேதமாகக் கிடந்தான். ராதிகா அப்படியே நகர்ந்து ஹாலுக்கு வந்தாள். கயறை சுருட்டி பையில் வைத்தாள். காலுறைகளை எடுத்து இரண்டு கைகளிலும் அணிந்து கொண்டுபோய் அடுப்பு எரிவதை நிறுத்தினாள். சமையல் அறை விளக்கை அணைத்தாள். ஹாலுக்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்தாள். யோசித்துப் பார்த்தாள். பின் எழுந்து போய் வீடியோவையும் நிறுத்தினாள். சுற்றிலும் பார்த்தாள். எல்லாம் கச்சிதமாக நடந்து முடிந்திருந்தது. மேஜையில் கிடந்த நைலக்ஸ் புடவைகளைப் பார்த்தாள். புடவை பரிசாக தருகிறானாம்! பொறுக்கி ராஸ்கல்; ராதிகா கடவுளுக்கு நன்றி செலுத்தினாள்.

"என் நீலாவைப் பைத்தியக்காரியாக்கி; சீரழிய வைத்து; கிணற்றில் விழுந்து சாகடித்து; ஒரு குடும்பத்தையே நாசம் பண்ண நாயை பழிக்குப் பழி வாங்கிவிட்டேன்..." என்று மனசுக்குள் பரிபூர்ணமான நிறைவுடன் முணங்கியபடி இரண்டு கரங்களையும் கூப்பி கடவுளுக்கு வணக்கம் தெரிவித்தாள்.

சமையல் அறையில் கிடந்த ராமகிருஷ்ணனின் உடம்பின் மேல் ஈக்கள் வந்து உட்கார ஆரம்பித்தன.

# 10

அத்தியாயத்தைப் படித்து முடித்த ரேவதி ஒரு மாதிரி ஆகிவிட்டிருந்தாள். நேரிலேயே கொலையைக் கண்ட திகைப்புத் தெரிந்தது. அவளுடைய கண்களில், அவளால் ஆனந்தியிடம் பேசக்கூட முடியவில்லை.

''என்ன ரேவதி; படிச்சிட்டு கப்சிப்னு இருக்கே; எப்படி இருக்கு?— இந்த சேப்ட்டர்?''— ஆனந்தி கேட்டாள்.

''போடி, மனசே சரியில்லை எனக்கு. இப்படியா கொலை பண்றது பத்தி எழுதுவே அநியாயமா?''

''அந்த ராஸ்கலால் ஒரு குடும்பமே அழிஞ்சதே, அது மட்டும் நியாயமோ?''

''கதை— இந்த சேப்ட்டரோட முடிஞ்சதா இல்லையா?''

''இன்னும் ரெண்டு சேப்ட்டர் இருக்கு!''

''ராதிகா போலீஸ்ல மாட்டிக்கலையா?''

''எப்படி மாட்டுவா, அதுக்குத்தானே இத்தனை ப்ளான்...''

''கதைதானே! நீ நெனைச்சா அவளை மாட்ட வைக்க முடியாதா?''

''மாட்டிக்காமே கொலை பண்ணனும் என்கிறது தானே லட்சியமே.''

''பெரிய லட்சியம்! சைடேஜி தெருவுக்குப் போறாளே— ஒருத்தர் கூடவா பார்க்கலை?''



''ராத்தி பத்து மணிக்கு யார் பார்ப்பா?''

''கொலை பண்ணிட்டுப் போறப்ப?''

''காலையில அஞ்சு மணிக்குக் கிளம்பிப் போனா— ஏதோ அங்கேயும் இங்கேயும் இரண்டொரு வீட்டு வாசல்ல வாசல் பெருக்கிட்டு இருந்தாங்க. ஜன்னல் வழியா முதல்ல நல்லா தெருவைப் பார்த்துக்கிட்டா! பாத்திட்டுத்தான் கிளம்பிப் போனா!''

''எந்த இடத்திலும் வீட்ல அவள் கைரேகையே படலை?''

''படலை. அதுக்குத்தானே சாக்ஸ்! கிளம்பும் போதுகூட ஒரு கையில் சாக்ஸ் போட்டுக்கிட்டுத்தான் திறந்து; வெளியில் வந்ததும் கதவை அதே கையால் சாத்திட்டு; நடந்திட்டே சாக்ஸை கழட்டி பையில் போட்டுட்டா! நேரா ஒரு சந்து. அதில் நடந்து பைகிராப்ட்ஸ் ரோடு வந்தா...அதுக்குள்ளே லேசா வானம் வெளுக்க ஆரம்பிச்சது. பக்கத்திலேயே இருந்த பஸ் ஸ்டாப்ல ராதிகா நிக்கலை. ரொம்ப தூரம் நடந்து ஐஸ்ஹவுஸ் போய் அங்கிருந்து ஆட்டோ பிடிச்சி மாம்பலம் பஸ் ஸ்டாண்ட் போறா. பிறகு அங்கிருந்து பஸ் ஏறி அபிராமபுரம் போறா. காலையில் பத்து மணிக்கு கரெக்ட்டா ஆபீஸ் போயிடறா...''

''ராமகிருஷ்ணன் கொலை செய்யப்பட்டது எப்பத் தெரியுது?''

''அதான் எட்டு மணிக்கு வேலைக்காரி வீடு பெருக்கப் போறாளே—அப்பத் தெரிஞ்சி போகுது... போலீஸ்வருது. எல்லாரையும் விசாரிக்குது. ஆபீஸிலும் விசாரிக்குது. ஒண்ணும் கண்டுபிடிக்க முடியலை ஒரே குழப்பமா இருக்கு. பீரோ திறந்து கெடக்கு...கேசெட் கிடக்கு...அதில்கூட ராமகிருஷ்ணன் கைரேகைதான்

...DA PURI...

இருக்கு! அடுப்பில் டீ போட வைத்திருந்த சின்ன வெந்நீர் கிண்ணத்திலேயும் அவனோட கைரேகை தான்! ஒண்ணும் புரியலை போலீசுக்கு. கொலைக்கு என்ன நோக்கம்னு ஊகிக்கவே முடியலை... ஆபீஸில் எல்லாரையும் விசாரிக்கிறாங்க. ஆனா துப்பு ஒண்ணும் கிடைக்கலை! கொன்னது ஆணா, பெண்ணா என்பது கூடத் தெரியலை... அடுத்த நாலு நாள்ல ராதிகாவுக்கு அந்த ஆபீஸில் தற்காலிக வேலையும் போயிடுது! பிரசவத்துக்குப் போன லேடி வந்திடறா! சும்மா ஒரு கண் துடைப்புக்கு—வேலை போச்சேன்னு ரெண்டு சொட்டுக் கண்ணீர் விட்டுட்டு ராதிகாவும் அந்த ஆபீசை விட்டு இறங்கிப் போயிடறா!''

''அவ்வளவு தானா?''

''அவ்வளவு தான்.''

''உன் இஷ்டத்துக்கு எழுதிட்டே! நெனைச்சா—திலகராஜ் மூலம்—அந்தப் பின்னணியை விசாரிச்சா உண்மை வெளிவந்திடும் ஆனந்தி.''

''அந்தப் பின்னணியையே அந்த போலீஸ் ஆபீசர் திலகராஜ் சொன்னப்பவே நம்பலையே! அது ஒரு பணக்காரப் பெண்ணோட விளையாட்டுன்னு ரொம்ப ஸ்ட்ராங்க சொல்லிட்டாரே!''

''உனக்கு ஆசை—அந்த ராமகிருஷ்ணனை கொன்னு தீர்த்திடணும்னு''

''ஆசை. அது மட்டுமில்லை ரேவதி, கொலையை செய்திட்டு மாட்டிக்கவும் கூடாது!''

''நெஜ வாழ்க்கையில் இப்படி ஒரு கொலையைப் பண்ணிட்டு எவளும் தப்பிச்சிட முடியாது''—ரேவதி சிறிது கடுமையான தொனியில் சொன்னாள்.



''அது தெரிஞ்சிதானே கதையா எழுதினேன்!'' ஆனந்தியும் அதே கடுமையான குரலில் சொன்னாள்.

''ஏன்—மாட்டிக்கவே மாட்டோம்னு தெரிஞ்சா நீயே இப்படி ஒரு கொலையைச் செய்வியாயென்ன?''—ரேவதி புரியாமல் கேட்டாள்.

''நிச்சயமா இப்படி ஒரு கொலையை நான் செஞ்சிருப்பேன்டி ரேவதி. கண்டிப்பா செஞ்சிருப்பேன்...'' ஆனந்தி கண்களை இடுக்கி எங்கேயோ பார்த்தபடி சொன்னாள்.

''ஆனா; எனக்கு இப்படி ஒரு கொலையைச் செய்யற தைரியம் கிடையாது!— ஏன்னா—நிச்சயமா நான் மாட்டிப்பேன்— கொலையைச் செய்திட்டு! மாட்டிப்பேன்னு நெனைச்சிதான்; அது தெரிஞ்சிதான்—இன்னிக்கி வரைக்கும் நான் கொலை பண்ணாமே இருக்கேன் ரேவதி! அதனாலேதான் என்னோட கதாநாயகி ராதிகாவை கொலை பண்ற மாதிரி எழுதி அவளைத் தப்பிக்கவும் செய்தேன்! உண்மையா இது என்னோட லட்சியக் குற்றம்டி ரேவதி! எனக்குள்ளே நாலைஞ்சு வருஷமா பொங்கிப் புரையோடிக் கிடக்கிற வெறிதான்—இந்தக் கதை! ராதிகாவின் சொந்தக்காரப் பெண் நீலாவுக்கு நடந்ததா சொன்னது பூராவும் பொய்க்கதை இல்லை ரேவதி, நிஜக்கதை! என் மாமா மகள் வனிதாவுக்கு நடந்த அக்ரமக்கதை இது! என் மாமா குடும்பத்துக்கு ஏற்பட்ட அக்ரமக் கதை இது! அந்த அக்ரமக்கதை செஞ்சவனோட நிஜப்பெயர்—வேலாயுதம்! இன்னைக்கும் அந்த வேலாயுதம் நல்லவன் மாதிரி பெரிய மனுசன் மாதிரி உயிரோட வாழ்ந்து கிட்டுத்தான் இருக்கான். அவனை நெனைச்சாலே எனக்குக் கழுத்தை நெரித்துக் கொல்லணும் போலவே இருக்கும்! துடிக்க வச்சி அவனைச் சாகடிக்க

வைக்கணும்னு என் உடம்பின் ஒவ்வொரு அணுவும் துடிக்கும்! ஆனா—துடிச்சி என்ன பண்றது? எனக்குத் தெரியும்—என்னால அவனைக் கொல்ல முடியாதுன்னு!... ஸோ—இந்தக் கதையை என் உயிரைக் குடுத்து எழுதினேன்! என்னால் முடிஞ்சது இதுதான்! ஆனா—ஒண்ணுமட்டும் நிச்சயம். என் மாமா குடும்பமே அழியறதுக்குக் காரணமான அந்த வேலாயுதம் ஒரு நாளைக்கு நாசமாகத்தான் போவான்!—அது போதும் எனக்கு.''

ரேவதி ஸ்தம்பித்து பிரமித்து நின்றாள்.

''என்னடி—பேச்சையே காணோம்...''

''அசத்திட்டே ஆனந்தி—உன் கதையை விட பயங்கரமா இருக்கு! இப்ப நீ சொன்னது! இதை நீ ஒரு தடவைகூட சொன்னதே இல்லையே...''

''சொல்லப் பிடிக்கலை... அதான் சொல்லலை.''

''பயங்கரமான கதை.''

''பயங்கரமான உண்மையுங்கூட...''

''பயங்கரமா ஹிட் ஆகும்! எப்ப இந்தக் கதை தொடரா ஆரம்பிக்கப் போகுது?''

''ஏப்ரல் மாதம்...''

''இன்னும் நீ எனக்கு ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லலை ஆனந்தி.''

''தேன்மொழி திலகராஜ்கிட்டே ஐடியா கேக்கப் போனது ஏன்னுதானே?''—ஆனந்தி கேட்டாள்.

''ஆமா—நெஜமா அவள் எதுக்கு அப்படி ஒரு ஐடியா கேக்கப் போனா?''



''கடைசி அத்தியாயத்தில் அந்த சஸ்பென்ஸ் என்னன்னு படிச்சித் தெரிஞ்சிக்க...! எனக்கு இப்பத் தூக்கம் வருது, குட்நைட்...''

ஆனந்தி விளக்கை அணைத்துவிட்டுப் படுத்து; உடனே தூங்கிப் போனாள். ரேவதி தூக்கம் வராமல்—லட்சியக் குற்றத்தை நினைத்துக் கொண்டே வெகு நேரத்திற்கு விழித்துக் கொண்டிருந்தாள்...